வீடுகளில் பயன்படுத்தும் மின்சாரம் 50 யூனிட் உடனடியாகக் குறைக்கப் படும் என்றும், கடைகளுக்கெல்லாம் இரவு ஏழரை மணிக்குப் பிறகு மின்சாரம் கிடைக்காது என்றும் கூறப்படுகிறது. இதன் காரணமாக தெருவெல்லாம் இருட்டாகக் கூடிய நிலைமை இருக்கிறது. சாதாரணமாக நகர்ப்புறங்களில் இரவு பத்து மணி வரை மின்வெளிச்சம் இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். இனிமேல் இரவு ஏழரைக்குப் பிறகு தெருவெல்லாம் இருட்டாக இருக்குமாதலால் நகரத்தில் நடமாட முடியுமா என்ற அபாயம் கூட இருக்கிறது. இப்பொழுதே பலவிதமான திருட்டுக் களெல்லாம் இருந்து வருகின்றன என்று அன்றைக்குச் சொன்னார்கள். இனி திருட்டு பயங்கூட அதிகமாகக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மின் வெட்டு தொழிலாளிகளை எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதைக் குறிப்பிடுவதற்குத்தான் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். குறிப்பாக, பஞ்சாலைத் தொழில்தான் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாலையில் ஏற்கெனவே மின்வெட்டு காரணமாக தொழிலாளர்கள் பூராவுக்கும் லே-ஆப் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, அரைச் சம்பளம் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டு, அரைச் சம்பளம் போதாது, முழுச் சம்பளம் தரவேண்டும் என்று தொழிலாளர்கள் சார்பில் சொன்னார்கள். 60 சதவீத மின்வெட்டு. 75 சதவிதமானவுடனே, மில் முதலாளிகள் சங்கம் இனிமேல் மில்களில் மேலும் வேலையைக் குறைக்கப் போகிறோம் என்று ஏற்கெனவே அறிவித்துவிட்டார்கள். அங்கிருந்து அவசரத் தந்திகள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. அங்கே தொடர்ந்து ஏற்கெனவே இருந்த அளவுக்காவது மின்சாரம் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலாவது கொடுக்க வேண்டும்; அப்பொழுதுதான் உற்பத்திக்கு ஓரளவு உத்தரவாதம் ஏற்படும்; தொழிலாளர்களுக்கும் லே-ஆப் காம்பென்சேஷன் கொடுக்க வேண்டும். ஐ. என். டி. யு. சி. தலைவர் திரு. இராமானுஜம் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். காலதாமதமில்லாமல், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்ற காலத்தில் அரசு எப்படி பாராமுகமாயிருந்ததோ அப்படியில்லாமல், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்தின்

பொறுப்பாளர்கள், மின்சார உற்பத்தி செய்யக்கூடிய பொறுப்பாளர்கள், அமைச்சர், தொழிலாளர்களின் பிரதிநிதிகள், முதலாளிகளின் பிரிதிநிதிகள் ஆகியோர் எல்லோரும் உட்கார்ந்து இதில் ஒரு முடிவு காண்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கு ஆலோசனை கொடுத்திருக்கிறார்கள். அந்த ஆலோசனையை உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லை யென்றால், இதில் மிகவும் பாதகமான நிலை ஏற்படும். அரசு ஏற்கெனவே இதில் தவறி இருக்கிறது. இதில் இன்னும் தாமதம் காட்டினால் மேலும் தவறுகள் ஏற்படுவதற்கு வழி இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டும் முறையில்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்ட நிலைமைகளைப் பற்றி நேற்றையதினம் நான் விரிவாக அறிக்கையொன்றை இந்த மன்றத்தில் சமர்ப்பித்தேன். மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பது ஒரு துரதிருஷ்டவசமான நிலைமை என்பதை எல்லோரும் அறிவார்கள். இந்த மின்சாரப் பற்றுக்குறையைச் சமாளிப்பதற்காக இருக்கின்ற நிலைமைகளைப் பரிசீலித்தோம். மின்சாரப் பற்றுக்குறை காரணமாக ஓரளவு மின்சாரப் பற்றுக் குறை—60 சத விகிதம் வெட்டு ஏற்கெனவே இருந்தது. ஆனால், இப்பொழுது மின்சார இயந்திரங்களில் கோளாறு ஏற்பட்டிருக்கிறதன் காரணமாக, நெய்வேலியிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய அளவு குறைந்திருக்கிறது. எண்ணூரிலும் மின்சார இயந்திரங்களில் கோளாறு ஏற்பட்டதால் நமக்குக் கிடைக்க வேண்டிய மின்சார அளவு மேலும் குறைந்துவிட்டது.

சாதாரணமாக நமக்கு 24 முதல் 25 மில்லியன் யூனிட் தேவைப் படும். 60 சதவீதம் வெட்டு ஏற்படுவதற்கான காரணம் 18 மில்லியன் யூனிட் அளவுக்கு நமக்கு மின் உற்பத்தி குறைந்தது தான். இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நிலைமையைப் பார்க்கும் போது 16 முதல் 15 மில்லியன் யூனிட்தான் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன்காரணமாக, 75 சதவீதம் மின் வெட்டு என்று அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

1975 ஏப்ரல் 5] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

நெய்வேலியைப் பொறுத்தவரையில் சாதாரணமாக அங்கிருந்து ஏழு மில்லியன் யூனிட் கிடைத்து வந்தது. ஆனால், இப்பொழுது 3.5 மில்லியன் யூனிட்டுக்குக் குறைவாகக் கிடைக்கும் நிலைமை ஏற்பட்டு, இந்த நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம்.

எண்ணூர் மின் நிலையத்தைப்பற்றி திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். எண்ணூர் மின் நிலையத்தைச் சீர்படுத்துவதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. எண்ணூர் மின் நிலையத்தை அமைத்த நிறுவனம் பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் ஆகும். பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் இன்ஜினீர்களும், டாடா கன்ஸ்ட்ரக்ஷன் இன்ஜினீர்களும், நம்முடைய இன்ஜினீர்களும் கூட்டு முயற்சியாக இப்பொழுது நிலைமைகளை அங்கே பரிசீலித்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கடந்த சில மாதங்களாக இந்த சீர்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸின் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், எண்ணூர் மின் நிலையத்திற்கு நேரில் வந்து ஒரு நாள் பூராவும் இருந்து நிலைமைகளைப் பரிசீலித்திருக்கிறார்கள். அதேபோல் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த சீஃப் இன்ஜினீர் ஒருவரையும் அழைத்துவந்து அங்குள்ள நிலைமைகளை நாம் காட்டினோம். அவர்கள் சொன்னது இயந்திரங்கள் எல்லாம் சரியானவைதான்; ஆனால் இயந்திரங்கள் எப்பொழுது கோளாறு செய்யும் என்று நம்மால் சொல்ல முடியாது; ஒருவேளை கோளாறு ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்று அவர்கள் சொன்னார்கள்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நிலைமை, எதிர்பாராத வகையில், திடீரென்று ஏற்பட்ட கோளாறு என்பதைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த நிலைமைகளைக் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் நம்முடைய இயந்திரங்களுக்குக்கூட பெருத்த சேதம் ஏற்படும் என்று மின் வாரியம் கருதுகிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்னும் இரண்டு வாரங்களுக்குள்ளாக நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சார அளவு அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பொழுது எண்ணூரில் 60 மெகா வாட் திறனுள்ள இரண்டு யூனிட்களும், 110 மெகா வாட் திறனுள்ள இரண்டு யூனிட்களும் இருக்கின்றன. அவற்றில் 60 மெகா வாட் திறனுள்ள ஒரு யூனிட்டும், 110 மெகா வாட் திறனுள்ள இரண்டு யூனிட்களும் வேலை செய்து கொண்டிருக்கின்றன. 60 மெகா வாட் திறனுள்ள இன்னொரு யூனிட் இன்னும் ஒரு வாரத்திற்குள் செயல்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். எண்ணூரில் மின்சார உற்பத்தி—ஜெனரேஷன்—1972-73 இல், 598 மில்லியன் யூனிட்டாக இருந்தது. 1973–74 இல் 775 மில்லியன் யூனிட்டாக இருந்தது. 1974-75 இல் 913.18 மில்லியன் யூனிட்டாக இருந்தது. இப்பொழுது அங்கே நிலைமை சீர்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 611 இலட்சம் யூனிட்டும், பிப்ரவரி மாதம் 576 மில்லியன் யூனிட்டும், மார்ச் மாதம் 955 இலட்சம் யூனிட்டும் கிடைத்திருக்கிறது. எண்ணூரைப் பொறுத்தவரையில் உடனே சீர்படும் என்ற நிலைமையிருக்கிறது. அந்த நிலைமைகளை அனுசரித்துத்தான் இந்த ஒரு நெருக்கடியான சூழ்நிலையில், கட்டாயத்திற்காளாக்கப் பட்டு 75 சதவிகிதம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியதைப்போல் மின்சார வெட்டினால் பாதிக்கப்படும் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 4,98,000 அளவிற்கு பாதிக்கப்படும் என்ற ஒரு விவரம் இருக்கிறது. ஆனால் நமக்குக் கிடைத்து வந்திருக்கின்ற மின்சார நிலைமையைப் பார்க்கும்பொழுது, பிப்ரவரி மாதத்தில் நெய்வேலியில் 6,772 மில்லியன் யூனிட்டுகளும், எண்ணூரில் 2.06 மில்லியன் யூனிட்டுகளும், பேசின் பிரிட்ஜில் .878 மில்லியன் யூனிட்டுகளும் கிடைத்து வந்தது. மார்ச்சில் அது, நெய்வேலியில் 4.51 மில்லியன் யூனிட்டும், எண்ணூரில் கொஞ்சம் அதிகமாகி 3.082 மில்லியன் யூனிட்டுகளும், பேசின் பிரிட்ஜ் கொஞ்சம் அதிகமாகி 1.164 மில்லியன் யூனிட்டுகளும் கிடைத்தது.

இப்பொழுது திடீரென்று ஏற்பட்ட இந்த மின்சார இயந்திரக் கோளாறின் காரணமாக இதை உடனடியாகத் தெரிவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியதைப்போல் ஜெனரேட்டர் வைத்திருக்கும் ஆலைகளும் இதைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி 'லே ஆஃப்' கொடுத்து

விடுகிறார்கள் என்ற குறைபாட்டை மாண்புமிகு உறுப்பின ரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் குறைபாட்டை எந்த அளவிற்கு நிவர்த்திக்க முடியும் என்று அரசு பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர்க்க முடியாத காரணத்தால் ஏற்பட்டதே தவிர அரசாங்கத்தின் அசிரத்தையினாலோ அல்லது அதிகாரிகளின் நடவடிக்கை இல்லை என்ற காரணத்தாலோ அல்ல. இயந்திரங் களில் திடீரென்று ஏற்பட்ட கோளாறு காரணங்களினால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பாரத ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிபுணரும், ஆந்திராவில் இருந்து வந்த தலைமை எஞ்சினியரும், நம்முடைய மின்சார இலாக்காவின் நிபுணர்களும் சொல்வது, நிலைமையை இப்படிச் சமாளித்துக் கொண்டு போக முடியுமா என்று கணக்குப் போட்டு, எந்த அளவிற்கு மின்சாரம் கிடைக்கலாம் என்று ஏற்பாடு செய்கிறார்கள். திடீரென்று கோளாறுகள் ஏற்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்றுதான் எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போல் மின்சாரப் பற்றாக்குறையினால் சில வீடுகளிலும் வெட்டு அமலாக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டுமென்றுதான் நேற்று இந்த மன்றத்தில் தகவல் கொடுக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்த பிறகுதான் மின்சார வெட்டை அமலாக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலைமைகளை இன்றைக்கு மின்சார வாரியம் மிகவும் பொறுப்போடு கவனித்து வருகிறது.

மின்சார உற்பத்தி, எதிர்பார்க்கிற காலத்திற்கு முன் நமக்கு அதிகமாகக் கிடைத்தால் இந்த வெட்டைக் குறைக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். பொதுவாக தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற எல்லோரும் ஒத்துழைப்பு தருவதன் மூலம்தான் இந்த இக்கட்டான நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, மின்சார வெட்டினால் பாதிக்கப்படும் அத்தனை பேர்களும், பொதுமக்களானாலும், தொழிலாளர்களானாலும், தொழிலதிபர்

ளாலும் நிலைமையைக் கவனத்திற் கொண்டு சீரிய ஒத்துழைப்பு தந்து மின் வெட்டிலிருந்து விடுபடுவதற்கு முயற்சி யெடுக்கும்பொழுது ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இது தவிர்க்க முடியாத, எதிர்பாராத நிலைமையில் ஏற்பட்டதே தவிர வேறல்ல என்று சொல்லிக்கொண்டு, இதற்கு மேல் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(Thiru N. K. Palanisamy rose.)

MR. DEPUTY SPEAKER : The hon. Member has not given notice of the adjournment motion. Thiru K. T. K. Tangamani is asking for a clarification. The hon. Member may please sit down.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்த காரணத்தினால் வெட்டு வந்து விட்டது என்ற அளவில் கூறினார்கள். அதனால் இன்றைக்கு நாங்கள் நினைப்பது, இன்றைக்கு நாங்கள் பேசியிருப்பதால் அந்த வெட்டு இன்னும் ஜாஸ்தியாகி விடுமோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. எப்பொழுது 'ரெஸ்டோர்' பண்ணப்படும்? பேசின் பிரிட்ஜின் இன்ஸ்டால்ட் கெபாசிட்டி என்ன? எந்த அளவிற்குக் குறைந்திருக்கிறது, அதை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

THIRU N. K. PALANISAMY : Sir, ...

MR. DEPUTY SPEAKER : The hon. Member has not given notice. His leader Thiru K. T. K. Tangamani has asked for a clarification. So, the hon. Member Thiru Palanisamy may resume his seat. He is not permitted to seek any clarification.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கேட்டதற்குப் பதில் சொல்கிறேன். அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்ததாலே இந்த அறிவிப்பு என்று நான் சொல்லவில்லை.

ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுப்பதற்கு முன்னாலேயே, அதற்கு முன்னாலேயே இந்த நிலைமை ஏற்பட்டு விட்டது. நேற்று அறிக்கை கொடுக்க வேண்டுமென்று இருந்தேன். அதற்குள்ளாக மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தார்கள். நேற்றுகூட ஒத்திவைப்புத் தீர்மானம் இருக்கும் பொழுது இந்த மாதிரி அறிக்கை வழங்குவதைப் பற்றிய பிரச்னை வந்தது. இன்றைக்கு அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் சம்பந்தமாக விளக்கம் கேட்டால் கொடுப்பதாகத் தெரிவித்தேன். இன்றைக்கு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் பற்றி எடுக்கப் பட்டிருக்கிறது.

நான் ஏற்கனவே அறிக்கையில் சொல்லியதைப்போல நெய்வேலியில் இருக்கின்ற நிலைமை இன்னும் இரு வாரங்களில் சீர்படலாம் என்று சொல்கிறார்கள். எண்ணுவதைப் பொறுத்த வரையில் நான் ஏற்கனவே சொன்னதைப்போல் ஒரு யூனிட் இன்னும் ஒரு வாரத்திலே மின்சார உற்பத்திக்கு வந்துவிடும் என்று சொல்லப்படுகிறது. நான்கு யூனிட்டுகளில் இன்றைக்கு மூன்று யூனிட்டுகள் வேலை செய்துவருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மின்சார உற்பத்தி நாம் எதிர்பார்க்கின்ற இரண்டு வார காலத்திற்குள்ளேயே சீர்பாடுமேயானால் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற மின்சார வெட்டு அதிகத்தைத் தளர்த்தலாம் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதுகுறித்து டாக்டர் ஹாண்டே அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள்குறித்து விவாதிக்கப் பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்ற காரணத்தினால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(ஆ) திருச்சி தலைமை மருத்துவமனையில் அறுவை அரங்கு மூடப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, நோயாளி ஒருவர் இறந்ததன் காரணமாகத் திருச்சி தலைமை மருத்துவமனையில் ஆபரேஷன் தியேட்டர் மூடியிருப்பதனால் ஏற்பட்டுள்ள

நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று பேரவையின் 42-வது விதியின் கீழ் திரு. எ. சுப்பிரமணியம், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகிய இருவரும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இதே போன்ற கருத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு சௌந்தர பாண்டியன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றும் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அளவிற்கு பொது முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் என்பதைப்பற்றி சுருக்கமாக விளக்கிக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, சென்ற மார்ச் மாதம் கடைசி நாளில் திருச்சி அரசு மருத்துவமனையில் ஆபரேஷன் தியேட்டரில் வைத்து ஆபரேஷன் நடந்து கொண்டிருக்கும் பொழுது ஒரு நோயாளி இறந்து போனதாகவும், அதற்குக் காரணம் என்ன என்று பார்த்தபொழுது டெட்டனஸ்தான் காரணமாக இருந்ததால் இப்படிப்பட்ட திடீர் மரணம் ஏற்பட்ட தாகவும் செய்திகள் வந்தன. அதைத் தவிர, இதே மருத்துவ மனையில் இதேபோன்ற நிகழ்ச்சி இதற்கு முன்னதாகவும் பல தடவைகள் நடைபெற்று அப்பொழுதைக்கப்பொழுது மருத்துவ மனையிலுள்ள ஆபரேஷன் தியேட்டர் குளோஸ் பண்ணப்பட்டு வந்திருக்கிறது.

இந்தமாதிரி நிகழ்ச்சி இப்பொழுது ஏற்பட்டது மட்டும் முதல் தடவை அல்ல, இதற்கு முன்பும் பல தடவைகள் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஆகவே, அந்தப் பிரதேசத் திலுள்ள மக்களுக்குப் பெரும் பீதியேற்பட்டிருப்பதாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. உண்மையிலேயே ஆபரேஷன் தியேட்டரில் ஆபரேஷன் செய்யப்படுகின்ற வியாதியஸ்தர்கள் இறந்து போகிறார்கள் என்றால் நிச்சயமாக இது வருந்தத்தக்க நிகழ்ச்சி என்பது யாரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். சாதாரணமாக, ஆபரேஷன் தியேட்டரில் ஆபரேஷன் நடக்கும்பொழுது இம்மாதிரி நிகழ்ச்சி நடை பெறுவதை ஒரு மோசமான நிகழ்ச்சியாகத்தான் நாம் கருது கிறோம். அதுமட்டுமல்ல, சாதாரணமாக நமது மாநிலத்தை எடுத்துக் கொண்டால் மருத்துவர்களின் தவறினால் இப்படிப்பட்ட

நிகழ்ச்சி நடைபெறும்பொழுது இதை விசாரித்து ஒரு என்கொயரி நடத்தி இதற்குக் காரணமாக இருந்தவர்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேல்நாடுகளில் மருத்துவமனையில் யாராவது இறந்தால், ஒரு மரணம் ஏற்பட்டாலும்கூட அதற்காக ஒரு தனி என்கொயரி நடத்தி அதற்கு உண்மையிலேயே அந்த மருத்துவர்தான் பொறுப்பு என்றால் தக்க பனிஷ்மெண்ட் கூட கொடுக்கும் அளவிற்கு விதிமுறைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், நமது நாட்டைப் பொறுத்தவரையில் வியாதியஸ்தர்கள் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படுகிறார்கள் என்றால், ஏதோ சாதாரண மிருகங்களைப் போல அவர்கள் இறந்து போகிறார்கள். இதைப்பற்றிக் கவலைப்படுவதாகவும் தெரியவில்லை. இந்தமாதிரி நடைமுறை நமது மாநிலத்தில் மட்டுமல்ல, நமது தேசத்தில் இருப்பது விரும்பக்கூடிய காரியம் அல்ல. ஆகவே, இவற்றை யெல்லாம் சீர்படுத்த வேண்டிய கடமை நம்முடைய அரசுக்கு இருக்கிறது. அதற்கு இப்பொழுது திருச்சியில் நடந்த நிகழ்ச்சி வழி காட்டுகிறது. ஆகவே, இதுபோன்ற நிகழ்ச்சி மறுபடியும் நடைபெறாத வண்ணம் அரசு கண்காணிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே இந்த நிகழ்ச்சியைப்பற்றி இன்று இந்த அவைமன் இருக்கின்ற தீர்மானத்தை விவாதிக்க இதர நிகழ்ச்சிகளை யெல்லாம் நாம் ஒத்திவைத்து விவாதித்தால் உண்மையிலேயே நமது நாட்டிற்கு மிகவும் பயன்தரக்கூடியதாக இருக்கும் என்று தங்கள் மூலம் தெரிவித்து, இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, திருச்சியிலுள்ள அரசினர் பொது மருத்துவ மனையில் ஆப்பரேஷன் தியேட்டர் மூடிக் கிடப்பதால் அறுவைச் சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகள் சிரமப்படுவது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, திரு. ஜேம்ஸ் அவர்கள் இதை 42-வது விதியின் கீழ் ஒத்திவைப்பு வேண்டுகோள் தீர்மானமாகவும், திரு. சௌந்தரபாண்டியன்

அவர்கள் இதை 41-வது விதியின்கீழ் அரசின் கவனத்தை ஈர்க்கின்ற தீர்மானமாகவும் கொண்டு வந்திருப்பதிலிருந்தே இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உரியது அல்லவென்று திட்டவட்டமாக தெளிவாகப் புலனாகிறது. ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய விஷயங்கள் நடைமுறையில் எப்போதும் ஏற்பட்டு விட முடியாத இயற்கை **விபத்துக்கள் அல்லது சிக்கல்கள்** அல்லது தவறான நடவடிக்கை எடுத்ததன் விளைவாக சீர்கெட்டுப் போன நிலைமை உருவாகுமானால் அந்த நேரத்தில் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட வேண்டுமே தவிர எந்த நேரத்திலும் ஏற்படக்கூடியது பற்றிக் கொடுக்க முடியாது.

'டிட்டானஸ்' எந்த நேரத்திலும் ஏற்பட்டுவிடக் கூடிய ஒன்று. அதைத் தடுக்க எல்லா நேரத்திலும் முயற்சி இருக்கிறது. ஆனால், ஏற்பட்டுவிட்ட ஒரு நிகழ்ச்சியை வைத்து திரு. ஜேம்ஸ் அவர்கள் மிருகங்கள் எல்லாம் செத்துப் போகிறபோது கவலைப்படாதது போல் மனிதர்களுக்கு இந்த நாட்டில் நிலைமை இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருப்பதாக ஜேம்ஸ் அவர்களே கொஞ்சம் சிந்திப்பார்களானால் எண்ண மாட்டார்கள்.

ஏனென்றால் மனிதர்கள் இறந்து போகமாட்டார்கள் என்ற நிலைமை இயேசுநாதர் காலத்திலிருந்து இன்றுவரை கிடையாது. மனிதர்கள் இறந்து போகிறார்கள், அது வேறு. ஆனால் மிருகங்களைப் போல் அவர்கள் கவனிக்கப்படவில்லை என்று கூறுவது தவறு. எவ்வளவு பெரிய டாக்டர்களாக இருந்தாலும் அவர்களுடைய திறமையினால் மட்டும் உயிரைக் காப்பாற்ற முடிவதில்லை என்பது உண்மை. அறுவை சிகிச்சை நடைபெற்ற போது இறந்து விட்டார், அப்போது டிட்டானஸ் ஏற்பட்டது என்பது உண்மை அல்ல.

இயக்குநரின் அறிக்கையின்படி—நெருக்கடி கால அறுவை அரங்கம் தொடர்ந்து செயல்பட்டு வந்தது. 1—4—1975-ம் தேதியிட்ட இயக்குநரின் சமீபத்திய அறிக்கைபடி திரு. தங்கவேலு என்பவர் (வயது 30) 21—3—1975 அன்று குடலிறக்கத்திற்காக இவ்வரசு மருத்துவ மனையின் அறுவை அரங்கில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டார். அவருக்கு, 27—3—1975லிருந்து

டெட்டனஸ் பாதிப்பு ஏற்பட்டு 29—3—1975 அன்று மரண மடைந்தார். இதனால் இவ்வறுவை அரங்கு மறுபடியும் 29—3—1975 முதல் மூடிவைக்கப்பட்டது.

அறுவை சிகிச்சை நடைபெற்றது 21—3—1975-ல். டெட்டனஸ் பாதிப்பு ஏற்பட்டது 27—3—1975-ல். அவர் இறந்தது 29—3—1975-ல். அறுவை சிகிச்சையின்போது டெட்டனஸ் ஏற்பட்டு அறுவை அரங்கின் சூழல் காரணமாக இறந்திருக்கக் கூடும்.

டிட்டானஸ் எப்படி ஏற்படுகிறது? தூசிகள் பரவுவதன் மூலம் ஏற்பட்டுவிட முடிகிறது. விபத்துக்களிலே அடிபட்டவர்களுக்கு அறுவை அரங்கிலே சிகிச்சை செய்யப்படுமானால், அவர்களுக்கு டிட்டானஸ் இருந்து அங்கே சிகிச்சை பெறுகிற மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடிய நிலை இருக்கிறது. அவர்களுடைய உடம்பில் இருந்து டிட்டானஸ் தூசிகள் மூலமாக காற்றில் பரவக் கூடிய தன்மை காரணமாக அந்த நிலை ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படி ஏற்பட்டுவிடுமானால் அந்த அறுவை அரங்கு மூடப்பட்டு விடுகிறது—closed for all purposes

அதற்குப் பிறகு அறுவை அரங்கில் இருக்கக்கூடிய பொருள் என்னென்ன வகையான பொருள்களோ அவை எல்லாம் பரிசோதனைக்காக நீண்ட ஆராய்ச்சிக்காக—திருச்சியில் நடை பெற்றதன் காரணமாக தஞ்சை மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சிப் பகுதிக்கு அனுப்பப்படுகிறது. எந்தவிதமான டிட்டானஸ் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்து அவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். அதற்குப் பிறகு Complete cleaning of the Operation theatre மீண்டும் எந்தவிதமான பாதிப்பும் இருக்க முடியாத அளவுக்கு சுத்தப்படுத்தப்படுகிறது. சுத்தப் படுத்தப்படுவது என்றால் not mere washing. சாதாரணமாக வீட்டைக் கழுவிவிட்டால் போதுமானது. இங்கே சுத்தப்படுத்த ஒரு வாரம், பத்து நாள், ஒரு மாதம் கூட ஆகிறது. அதற்குப் பிறகு perfectly pure என்ற நிலை ஏற்பட்ட பிறகுதான் அந்த இடத்தை மறுபடியும் பயன்படுத்த முடியும்.

வீட்டில் நோயுற்றிருந்த அம்மையார் கிணறு வெட்டும் இடத்திலிருந்து தூசி பட்டு எதிர்பாராத விதமாக டிட்டானஸ் வந்து பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறார்கள். டிட்டானஸ்

இன்ஃபெக்ஷன் ஏற்படாமல் இருக்க அரசாங்க மருத்துவ மனைகளில் இப்படிப்பட்ட அறுவை அரங்குகளை மிகப்பெரிய அளவில் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வோடு பாதுகாக்கப் படுகிறது. கதவுகளைத் திறந்து மூடித்தான் ஆகவேண்டும். ஏர்கண்டிஷன் வைத்தால்கூட உள்ளே காற்று வரத்தான் செய்யும். இன்னும் சொல்லப் போனால் பக்கத்தில் எங்காவது தூசி சேரக்கூடிய காற்று அடிக்கும் நிலைமை இருக்குமானால் ஒன்றும் செய்ய முடியாது.

தஞ்சை மருத்துவமனையில் இதன் காரணமாக இரண்டு மூன்று முறை அறுவை அரங்குகள் மூடப்பட்டிருக்கின்றன. திருச்சியில் ஆறு வார காலத்திற்கு மூடி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறுவை அரங்கு மூடப்பட்டிருந்தாலும் டெம்பரரி அரேஞ் மென்ட்ஸ் செய்து இன்னொரு அறுவை அரங்கில் சிகிச்சைகள் தொடர்ந்து அளிக்கப்படுகின்றன. தொடர்ந்து பணிகள் நடை பெற்று வருகின்றன. அதற்குப் பிறகு 10, 20 பேருக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றிருக்கிறது. நம்முடைய நாடு பொருளாதார நிலையில் எல்லா வசதிகளையும் பெற்று வேறு வேறு பகுதிகளில் கண்ணாடியால் மூடப்பட்ட பெரிய கட்டடம் இருந்து அதற்குள்ளே மூன்று நான்கு அறைகள் இருந்தால்—the percentage of tetanus குறைக்கப்படும்.

இன்னும் சில பேருக்கு டிட்டானஸ் வந்துவிடப் போகிறதே என்று ஆன்டி டிட்டானஸ் ஊசி போட்டால் அதுவும் சில சமயங்களில் ஆபத்தாகப் போகிறது. எல்லோருக்கும் அதைப் போட முடியவில்லை. மருத்துவ உலகத்திலே நல்ல பாதுகாப்புத் தேடி தொடர்ந்து முயற்சிக்கப்படுகிறது.

திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னது போல் விலங்குகளைப் போல் மனிதர்கள் இறந்து போவதைப் பார்த்துக் கவலைப்படாமல் இருக்கவில்லை. அந்தக் கவலையோடுதான் இந்தக் காரியங்கள் எல்லாம் செய்யப்படுகின்றன. குறைகள் வரலாம். குறைகளை நிவர்த்திக்கப் போதுமான வாய்ப்பு, வசதிகள் எதிர்காலத்திலே உருவாகலாம். உடனுக்குடன் செய்ய வேண்டிய காரியங்களை அரசாங்கமும் மருத்துவத் துறையும் செய்துகொண்டிருக்கிறது. ஆகவே, ஒத்திவைப்புத் தீர்மானமாக இதைக் கொண்டுவர,

அவசியமில்லை என்று கூறி அரசாங்கத்தின் கவனத்தை இது போதுமான அளவுக்கு இழுத்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

8. நடைமுறைக் கேள்வி.

வினா நேரம் தள்ளி வைக்கப்பட்டது குறித்து.

திரு. ஏ. சுப்பிரமணியம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இன்றைக்கு நான் இந்த மின்சார வெட்டு சம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. ஹவுசில் ஏகமனதாக முடிவு செய்து குவெஸ்ச்சன் ஹவர் டிஸ்பென்ஸ் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : என்னைச் சொல்ல விடுங்கள். முதல் ஒரு மணி நேரம் கேள்வி நேரம். திடீரென்று கேள்வி நேரத்தை டிஸ்பென்ஸ் செய்து விட்டால் எப்படி? 10 மணிக்கு ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுப்பார்கள் என்று கொஞ்சம் நேரம் கழித்து வந்தால். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் சொல்லுவதில் பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் கிடையாது.

Every member is expected to be here at 9 O'clock. If a member has absented himself at 9 O'clock that is not my fault or the fault of the House.

பேரவை 41-வது விதியின்கீழ் . . .

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த மன்றத்தில் ஏற்கனவே, . .

MR. DEPUTY SPEAKER : I have already given a ruling. The Hon. member in please resume his seat.

திரு. ஏ. சுப்பிரமணியம் : Please allow me to make a submission. இந்த மன்றத்தில் பட்ஜெட் பிரசன்டேஷன்போதே எழுப்பப்பட்டிருக்கிறது. பட்ஜெட் பிரசன்டேஷன் செய்யப்

படுவதை எதிர்பார்த்து மெம்பர்கள் கொஞ்ச நேரம் கழித்து வருவார்கள். அதற்கு இடம் கொடுக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. நேற்றையதினம் குவெஸ்ச்சன் ஹவர் இருக்காது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது--2-ம் தேதியே சர்குலர் போட்டு அனுப்பினுர்கள். முன்கூட்டியே அப்படி எல்லா அங்கத்தினர்களுக்கும் அனுப்பினுல் உதவிகரமாக இருக்கும்.

(பிற்பகல் 9.30)

திரு. து. ப. அழகமுத்து: நேற்று நான் அவர்களுடைய கட்சித் துணைத் தலைவர் அவர்களிடம் சொன்னேன். அவர்களிடம் நான் குவெஸ்ச்சன் ஹவர் வேண்டாம் என்று சொன்னேன். அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அதை மெம்பர் அவர்களுக்கு அவர் அறிவிக்கவில்லை என்றுல் அது பேரவைத் தலைவரின் குற்றம் அல்ல.

திரு. ஏ. சுப்பிரமணியம்: நேற்றையதினம் குவஸ்ச்சன் ஹவர் இல்லை என்று அசெம்பிளி செகரட்டரி சர்குலர் போட்டிருக்கும் போது, நேற்று போட்ட சர்குலர் மாதிரி இப்போதும் என் போடவில்லை என்பதுதான் என் கேள்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அசெம்ப்ளி செகரட்டரிக்கு இதெல்லாம் பிஸினஸ் கிடையாது. அவர்களுக்கு இதில் பொறுப்பே கிடையாது. செகரட்டரி என்ருலும் சரி செகரெட்டேரியேட் ஆனுலும் சரி. இங்கு வந்து தீர்மானம் மூவ் செய்கிருர்கள். ஒரு மெம்பர் கூட டிஸன்ட் செய்தாலும் குவஸ்ச்சன் ஹவரை சஸ்பென்ட் செய்ய முடியாது.

'mutual understanding behind the Speaker's chair'

என்று பார்லிமென்டரி கன்வென்ஷன் இருக்கிறது.

அரசாங்கக் கொறடா மற்றவர்களிடம் கலந்துகொண்டு குவஸ்ச்சன் ஹவர் வேண்டாம் என்ற முடிவிற்கு வந்த பிறகு-- அவர்களுக்கு கட்சித் துணைத் தலைவரோடு தொடர்பு இல்லையோ என்னவோ—தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு குவஸ்ச்சன் ஹவர் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு உறுப்பினரும் கரெக்ட்டாக ஒன்பது மணிக்கு இங்கு அவைக்கு வரவேண்டும். அப்படி அவர்கள் அவைக்குச் சரியாக வரவில்லை என்ருல், அதற்காக செகரட்டரியையோ அல்லது செகரட்டேரியேட்டையோ குறை சொல்ல முடியாது.

1975 எப்ரல் 5] [மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்]

அடுத்து, பேரவை விதி 41-ன் கீழ் அவசரப் பொது முக்கிய மான காரியத்தை மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. கே. என். குமாரசாமி அவர்களும் திரு. மருதாசலம் அவர்களும் கொண்டு வருவார்கள்.

2. **ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.**

திருச்சி தலைமை மருத்துவ மனையில் அறுவை அரங்கு மூட்டப் பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து—தொடர்ச்சி.

THIRU P. SOUNDARAPANDIAN : Sir, I want some more clarification about the Tiruchirappalli Operation Theatre. தலைவர் அவர்களே, திருச்சி அரசினர் மருத்துவமனையில் இருக்கிற அறுவை சிகிச்சை அரங்கு அடிக்கடி மூடப்படுகிறது. இதனால் நோயாளிகள் மருத்துவமனைக்கு வருவதற்கே ஒரு அச்ச உணர்வு ஏற்படுகிறது. எனவே, அந்த அச்ச உணர்வைப் போக்குவதற்கு அரசு தனி முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, டெட்டனஸ் என்பது அறுவை சிகிச்சை அரங்கில் கொண்டுபோய் அறுவை சிகிச்சை நடத்தப்பட்டவர் ஒருவருக்கு ஏற்பட்டது. டெட்டனஸ் என்ற சூழல் ஏற்படுமானல், அந்த அபெக்டேஷன் ஏற்படுமானல் அது அந்த நேரத்தில் மூன்று நான்கு பேர்களைப் பாதித்து விடுகிறது. இந்த முறை நல்லவேளையாக ஒருவருக்கு ஏற்பட்டதே தவிர வேறு யாருக்கும் ஏற்படவில்லை என்று தெரி விக்கப்பட்டிருக்கிறது. அந்த அரங்கு மூடப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் டெட்டனஸ் ஏற்பட்ட பின்னல் என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்து பின்னல் அந்த அறை திறந்திருந்தால் ஒரு மாதம் கழித்து யாருக்கும் வந்துவிடும், வந்து விடலாம். ஆகவே டெட்டனஸ் முழுவதையும் ஒழிப்பதற்கு 100 சதவிகிதமும் ஒழிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லை. என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை.

அந்தத் துறையைச் சேர்ந்தவர்களை நன்ருக என்னென்ன பரி சிலனை செய்யமுடியுமோ அவற்றைச் செய்யும்படி கேட்டிருக் கிறேன். ஒருவேளை திருச்சியில் வருகிறது, தஞ்சையில் வருகிறது என்ருல் அந்த வட்டாரத்தில் கொஞ்சம் புழுதி அதிகம். அரசியல்

புழுதியோ எந்தப் புழுதியோ, திருச்சியிலும் தஞ்சையிலும் இருக்கிறது. புழுதிக் காற்று அடிக்கும் இடத்தில் பொதுவாக இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கலாம். அந்தப் புழுதியின் விளைவுகளைத் தடுப்பதற்கு என்னென்ன பாதுகாப்பு முறைகளைக் கையாள முடியுமோ அவைகளைக் கையாள்கிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியனுக்கு கேள்வி கேட்க அனுமதி அளித்த தலைவர் அவர்கள் எனக்கும் மின்சாரம் சம்பந்தமாக ஒரு விளக்கம் கேட்க அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பரஸ்ட் சப்ஜக்ட்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பர்ஸ்ட் சப்ஜக்ட் முடிந்து பர்ஸ்ட் சப்ஜக்ட்டுக்கு மறுபடியும் ரிவர்ட் செய்வது சரியல்ல. தனியாகக் கேட்டுக்கொள்ளுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இது ஒரு முக்கியமான விஷயம். சிறிது லீனியன்ஸ் காட்டுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஷார்ட் நோட்டீஸ் குவஸ்ச்சன் ஒன்று கொடுத்தால் நாளைக்கே அமைச்சர் அவர்களை விடையளிக்கச் சொல்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

(அ) பல்லடம் தாலுக்கா கூட்டுறவுத்துறை கடைகளில் நியாய விலையில் உணவுப் பொருட்கள் கிடைக்காததால் ஆலைத் தொழிலாளர் பட்டினி கிடக்க வேண்டிய நிலை குறித்து.

திரு கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, பல்லடம் தாலுக்காவில் கூட்டுறவுத் துறை கடைகளில் உணவுப் பொருட்கள் நியாய விலையில் கிடைக்காததால் மில்லில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பட்டினி கிடக்க நேரிடும் நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. என். மருதாசலம்: பல்லடம் தாலுக்காவில் கூட்டுறவுத் துறை கடைகளில் உணவுப் பொருட்கள் நியாய விலையில் கிடைக்காதால் மில்லில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பட்டினி

1975 ஏப்ரல் 5] [திரு. என். மருதாசலம்]

கிடக்க நேரிடும் நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பல்லடம் தாலுக்காவில் பொதுவாக நூற்பு ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நியாய விலையில் அரிசியும், கோதுமையும் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, அங்கு தொழிலாளர்கள் பட்டினி கிடக்க நேரிடும் என்ற நிலை இல்லை. பொதுவாக தொழிலாளர்களுக்கு குடும்பக் கார்டுகள் கொடுக்கப்பட்டு வாரம் இரண்டு கிலோ அரிசியும், இரண்டு கிலோ கோதுமையும் கார்டுக்கு வழங்க அமைப்பு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: அமைச்சர் அவர்கள் கூட்டுறவு ஸ்டோர்களில் அவர்களுக்கு மீண்டும் இரண்டு கிலோ அரிசி போட அமைப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் அங்கிருக்கிற நிலை சீர்படவில்லையென்ற தகவல் வந்திருக்கிறது. அந்தக் கார்டுகள் மில் கூட்டுறவு ஸ்டோரில் பதிவு செய்தால்தான் அரிசி கிடைக்கும். அந்த கார்டுகளைக் கொண்டுபோய் ஊரிலுள்ள கூட்டுறவுக் கடைகளுக்குப் போய் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று மில் ஸ்டோர் நிர்வாகிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இதை அவசியம் அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பார்த்து அந்த கூட்டுறவு ஸ்டோர்களிலேயே அவர்களுக்கு அரிசி விநியோகிக்கின்ற அளவிற்குச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இரண்டு கிலோ அளவில் என்பது 15 நாளைக்குக் கூட வருவது கிடையாது. ஆகவே, அதை சிறிது கூடுதலாக்கி ஒரு வாரத்திற்கு ஐந்து கிலோ அரிசியாவது கிடைக்க உத்தரவு போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் வேறு பக்கத்தில் எதுவும் வாங்கமுடியாது. மில் ஸ்டோரில்தான் கடன் பெற வேண்டியிருக்கிறது. எனவே, அங்கேயே கூடுதல் அரிசி வழங்கும் சூழ்நிலையை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆலைகளில் தொழிலாளர்கள் கூட்டுறவு அமைப்புகளின் மூலம் அரிசி, கோதுமை வழங்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகும். ஏதாவது ஒரு குறிப்பிட்ட ஆலையில் வழங்கப்படவில்லை அல்லது யாராவது

ஒரு தொழிலாளருக்கு கார்டு கிடைக்கவில்லை என்று சொன்னால் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பிவைத்து நடவடிக்கை எடுக்கச் செய்யலாம்.

பொதுவாக கிராமங்களில் நாம் இதை வழங்காவிட்டாலும் தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டும் என்று பிரத்தியேக ஏற்பாட்டின்படி இது செய்யப்படுகிறது. ஆகவே, எந்த ஆலை என்று குறிப்பிட்டு எழுதியனுப்புவார்களேயானால் அதை நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொல்கிறேன்.

திரு. என். மருதாசலம்: மில் தொழிலாளர்கள் கிராமங்களிலிருந்து வேலைக்கு வருகிறார்கள். அவர்கள் அந்தந்த கிராமங்களில் கார்டுகளை பதிவு செய்துகொண்டுள்ளார்கள். அவர்களுக்கு மில்லில் உணவு தானியம் போடுவதில்லை. கிராமப் பகுதிகளிலும் உணவு தானியங்கள் கிடைப்பதில்லை. அவர்களுக்கு உடனடியாக உணவு தானியங்கள் கிடைக்கச் செய்யவேண்டும். லே அவுட் அநேகமாகக் கொடுக்கப்படுகிறது. அதனால் உணவு தானியங்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. எனவே அவர்களுக்கு கிராமப்பகுதிகளில் கூட்டுறவுக் கடைகளில் உணவு தானியங்கள் வழங்க அரசாங்கம் உத்தரவு இடுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: லே அவுட் அல்ல, லே ஆப் என்று சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். நாம் எடுத்திருக்கிற கொள்கைப்படி சில கிராமங்களில் உணவு தானியங்கள் கிடைக்கவில்லை என்று சொல்வது தவறு. கிராமங்களில் உணவு தானியங்கள் இருக்கிற காரணத்தால் உற்பத்தி ஸ்தானங்களில் நாம் உணவு தானியம் கொடுப்பதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறோம். தொழிலாளர்கள் இருக்கிற பகுதிகளானால் கொடுக்கவேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறோம். கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொடுக்கவேண்டும் என்று போட்டிருக்கிறோம். அப்போதுதான் கட்டுப்பாடாகக் கொடுக்க வாய்ப்பு ஏற்படும்.

(ஆ) தமிழ்நாடு மின்வாரியத் தொழிலாளர்களுக்கு ஒப்பந்தப்படி ஊதிய உயர்வு அளிக்க மின்வாரியம் காலம் கடத்துவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு ஏற்கனவே செய்து கொண்டுள்ள ஒப்பந்தப்படி

1—12—1974 முதல் ஊதிய உயர்வு அளிக்கப்படாமல் மின்சார வாரியம் காலம் கடத்திக்கொண்டு வருகிறபடியால் தொழிலாளர்கள் மத்தியில் நிலவும் கொந்தளிப்பான நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு தொழில், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்த அறிக்கை @ கிட்டத்தட்ட 6 பக்கம் இருப்பதால்—இதை மன்றத்தில் வைத்து இருக்கிறேன்—மாண்புமிகு தலைவர் அனுமதி கொடுத்தால், இதை வாசிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மன்றத்தில் வைத்தால் போதும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த அறிக்கை பெரிய அறிக்கையாக 6 பக்கம் அளவில் இருக்கிறது. இதை இங்கே வந்துதான் படிக்கவேண்டியிருக்கிறது. அப்படி அந்த அறிக்கையைப் படிக்கின்றபோது பல பிரச்னைகளை, கிளாரிபிகேஷன்களை கேட்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இரண்டு, மூன்று விளக்கங்கள் கேட்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரே ஒரு கிளாரிபிகேஷன் தான் கேட்கலாம்.

திரு. நா. வீராசாமி: இரண்டு கேள்விகள் கேட்க அனுமதி அளிக்கப்பட வேண்டும். மூன்றாவதாகக் கேட்பதற்குத்தான் கன்செஷன் வேண்டும் என்று கேட்டேன்.

1—12—1974-முதல் புதிய சம்பள விகிதங்கள் பேச்சு வார்த்தைகள் மூலம் மாற்றி அமைக்கப்பட்டு இருக்கவேண்டும். ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் 1—12—1974-க்குப் பிறகு தான் அந்தத் தொழிற் சங்கங்களை அழைத்து, 6 முறை பேசியிருப்பதாக அறிக்கையில் இருக்கிறது. அப்படிப் பேசியும் எந்த விதமான முடிவுக்கும் வரவில்லை. அந்த சங்கங்களோடு பேசி எப்போது முடிவுக்கு வரும்? ஏற்கனவே 1—12—74 முதல் புதிய

@ 136–141-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

சம்பள விகிதங்கள் மாற்றி அமைத்து இருக்க வேண்டும் ஆகவே, உடனடியாக ஒரு மாத காலத்திற்குள் அந்தச் சங்கங்களை அழைத்துப் பேசி முடிவுக்கு வருமா ?

இரண்டாவதாக, அந்தச் சங்கங்களைப் பொறுத்தவரையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்தில், அந்தச் சங்கங்களுக்கு எந்த யூனியனுக்கும் ரெகக்னிஷன் இல்லாததால், மின்சார வாரியமே ரெகக்னிஷன் கொடுத்து, அந்தச் சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்தியது. இப்போது ஏற்கனவே இருந்த சங்கங்களைத் தவிர புதிதாகச் சங்கங்கள் ஏற்பட்டு உள்ளன. உறுப்பினர்கள் அதிகமாக இருக்கும் சங்கங்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அப்படிப்பட்ட சங்கங்களையும் அழைத்து நம்முடைய அரசாங்கம், வாரியம் பேச்சு வார்த்தை நடத்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல், 1—12—74-ல் ஏற்கனவே இருந்த சம்பள விகிதம், பேச்சுவார்த்தை முடிந்து, உயர்த்தி இருக்க வேண்டும். அதற்காக 'வேஜ் ரிவிஷன் குழு' என்று அமைக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல், 1 மாத காலத்திற்குள் முடித்து விடவேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல், ரெகக்னைஸ்டு சங்கங்களோடு அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறார்கள். மற்ற சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தவும் அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி எழுந்தார்)

MR. DEPUTY SPEAKER : That is not allowed.

திரு. நா. வீராசாமி : ஒரே நேரத்தில் எத்தனைக் கேள்விகள் கேட்க முடியும் ? அறிக்கை 6 பக்கத்திற்கு மேல் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறிக்கை 6 பக்கத்திற்கு மேல் இருக்கிறது என்றால், ஆப்-அவர் டிஸ்கஷன், ஒன்-அவர் டிஸ்கஷன் வேண்டுமென்று சொல்லுங்கள்.

திரு. நா. வீராசாமி : சார், ஒரு கிளாரிபிகேஷன். . . ?

MR. DEPUTY SPEAKER : You are not allowed to speak.

5. தீர்மானம்

உறுப்பினர் திரு. ஓ. என். சுந்தரம் அவர்களுக்கு விடுப்பு கொடுப்பது பற்றி

THIRU R. PONNAPPA NADAR : Sir, under rule 15 of the Tamil Nadu Legislative Assembly Rules, I move—

> 'That leave of absence be granted by this House to Thiru O. N. Sundaram, M.L.A., for a period of sixty days from 28-8-1974.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

திரு. நா. வீராசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது முடியட்டும்.

6. அரசினர் சட்ட முன் வடிவு

தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தமிழ் நாடு 1975-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(திரு. நா. வீராசாமி நின்றுகொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வீராசாமி, உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன?

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இது ரொம்ப சீரியஸ்ஸான மேட்டர். மற்றவர்களுக்கு எல்லாம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன், இந்த மாதிரி லெங்க்தி ஸ்டேட்மெண்டாக இருந்தால் 2 நாட்களுக்கு முன்னால் வைத்து விடுவது நல்லது. காலையில் கொடுத்துவிட்டு, உடனே எடுத்துக்கொண்டு விட்டால், நேரம் கொடுக்கவில்லை என்று குறை கூறுகிறார்கள். ஆகவே, லெங்க்தி ஸ்டேட்மெண்டாக இருந்தால், இரண்டு நாட்களுக்கு முன்னால் வையுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் மாண்புமிகு தலைவரின் அனுமதியைக் கேட்டேன். படிக்கட்டுமா என்று கேட்டேன். 5-6 பக்கம் இருப்பதால், காலம் விரயம் ஆகுமே என்ற காரணத்தால் கேட்டேன். மாண்புமிகு தலைவர் அனுமதி கொடுத்ததால்தான், படிக்கவில்லை. அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டேன். இல்லையென்றால் படித்து இருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்னுடைய அனுமதி பெற்றுதான் செய்தீர்கள். பெரிய ஸ்டேட்மெண்டாக இருந்தால், இரண்டு நாட்களுக்கு முன்னால் சர்க்குலேட் செய்யுங்கள். அதற்குப்பிறகு எடுத்துக்கொண்டால், டிஸ்கஸ் செய்வதற்கு வசதியாக இருக்கும்.

திரு. நா. வீராசாமி: பெரிய ஸ்டேட்மெண்டாக இருக்கிறது, அதிலே சில விளக்கங்களும் கேட்க வேண்டியிருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): ரூல் — 41 கொடுத்தவருக்கு ஒரு கேள்வி கேட்க அனுமதி அளிக்கிறபோது, பாராளுமன்றத்தில் கூட, ஒரு கேள்வியில் ஏ, பி, சி, டி என்று உப கேள்வி போட்டுக் கேட்டு விடுவார்கள். அந்த வகையில் கேட்டு இருக்கலாம். இன்று கேட்கவில்லையென்றாலும், எதிர்காலத்தில் அவர் அப்படிக் கேட்கலாம்.

1975 ஏப்ரல் 5]

திரு. நா. வீராசாமி : எனக்குக் கேள்வி கேட்பது எப்படி என்று திரு. கிருஷ்ணமூர்த்தி சொல்லவேண்டாம் அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டு பதில் அளிக்க வேண்டும். இதிலே முக்கியமான பிரச்னை என்னவென்றால், அறிக்கையில் சில குறிப்புகள் கொடுத்து இருக்கிறார்கள். அந்தக் குறிப்பில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், "வேஜ் கைய்ட்லைன்ஸ் கமிட்டி".

MR. DEPUTY SPEAKER : I have passed over to the next subject. உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. நா. வீராசாமி : 6 பக்கம் அறிக்கையைப் படித்து விட்டு, கேள்வி போட வேண்டும் என்றால், ஒரு கேள்வி தான் அனுமதி கொடுத்தீர்கள். ரூல் 41-ன் கீழ் இது கொண்டு வரப்பட்டிருக்கிற ஒரு முக்கியமான விஷயம் ஆகும். இப்படிக் கேள்வி கேட்க அனுமதிக்காமல் செல்வது நியாயமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தப் பிரச்னையைவிட்டு, அடுத்த நிகழ்ச்சிக்குச் சென்றாகி விட்டது. மாண்புமிகு உறுப்பினர் கோருகிற விஷயங்களைப் பெறவேண்டு மென்றால், குறுகிய கால கேள்வி போடலாம். குறுகிய கால கேள்வி என்று வருகிறபோது, வருகின்ற நாட்களில் அமைச்சர் பதில் அளிப்பார்கள்.

7. 1975-76-ம் ஆண்டு நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு— தொடர்ச்சி

நிதிக்கோரிக்கை எண் 28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,00,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

THIRU K. P. GOPAL: Sir, to discuss about the necessity to reorganise the Town and Village Panchayats as viable units, I move—

'That the allotment of Rs. 29,00,09,000 underr Demand No. 28 — Community Development Projects, etc., be reduced by Rs. 100.'

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, வளர்ச்சித் திட்டங்களில் மக்களை இணைத்துச் செயல்படுத்த வழிகாண்பது பற்றி விவாதிக்க

"நிதிக் கோரிக்கை எண் 28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பகின்ற ரூ. 29,00,09,000-ல் ரூ. 100 குறைக்கப்பட வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, சமுதாய வளர்ச்சிப் பணிகள் விரைவாகவும், சீராகவும் நடைபெற துறையில் ஏற்படும் நீண்டகாலத் தாமதங்களை தவிர்ப்பது குறித்து விவாதிக்க---

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,00,09,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் உள்ள புனவாசிப்பட்டியில் சமுதாயக் கிணறு வெட்டும் பணியை விரைவுபடுத்தவேண்டும் என்பதை வலியுறுத்த—

"நிதிக் கோரிக்கை எண் 28, சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,00,09,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, கோவில்பட்டி, தாலுக்கா போன்ற வறட்சிப் பகுதிகளில் அதிகமான குழாய்க் கிணறுகளைப் பாசன ஏற்பாட்டிற்காக அமைக்க விசேடத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சி திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,00,09,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

1975 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், கிராமப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு வேளாண்மையில் நல்ல ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்டுவதற்கும், இந்தத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்துவதன் மூலம், அந்த கிராம மக்கள், உழைக்கின்ற மக்கள் வளர்ச்சி அடையவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் 1958-லே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டு வருகிறபோது அதற்கான செலவினங்கள், அதற்கான வரவினங்கள்—1958-லே நிர்ணயித்து இருந்தாலும்—நாளடைவில் அது மிக வேகமாக வளர்ந்து, இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நல்ல வளர்ச்சியைப் பெற்று இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்வேன்.

கல்விக்காக 1958-லே 3.50 என்ற அளவிலே செலவினங்கள் ஒரு நபருக்கு வைத்து இருந்தாலும், 1975-76-லே இந்த ஆண்டிலே அது 13.50 என்ற அளவிலே உயர்த்தப்பட்டு இருக்கிறது. வருமானம் என்ற அளவிலே, உள்ளூர் மேல் வரியில் 50 பைசா என்று இருந்தது, இன்று 2.50 பைசா என்ற வகையிலே நாம் உயர்த்திக் கொள்வதற்கு அந்த மன்றங்களுக்கு அனுமதி கொடுத்து இருக்கிறோம். அதேபோல், வீட்டு வரி 30 பைசா என்று இருந்தது, 1975-76-லே 60 பைசா என்று உயர்ந்து இருக்கிறது. அதுபோல், மேல்வரி, இணைமானியம் 50 பைசா என்று இருந்தது. இப்போது 3.75 என்று உயர்வு பெற்று இருக்கிறது. இன்று ஊராட்சிகள், ஒன்றியங்கள் மக்களுக்கு செய்கிற எல்லாக் காரியங்களிலும், நம்முடைய மாநிலம் தான் முதன்மையாக இருக்கிற வகையில் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல 1958-ல் மேல்வரி இணை மானியம் ரூ. 0.50 ஆக இருந்தது. இப்பொழுது ரூ. 3.75 ஆகியுள்ளது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்டங்களுக்காக உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்ட மொத்த நிதி ரூ. 156 கோடி. இது 4-வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 330 கோடியாகவும் 5-ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 500 கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. தமிழகம் எந்த அளவிற்கு மிக வேகமாக முன்னேறி இருக்கிறது என்பதற்கு நான் காட்டிய புள்ளிவிவரங்கள் போதும் என்றே கருதுகிறேன். மகாத்மா காந்தி, சுதந்திரம் பெற்றதும், கிராம ராஜ்யம் ஏற்பட-

வேண்டுமென்று விரும்பினர். நகரத்திலுள்ள மக்களுக்குக் கிடைத்துள்ள வசதிகள் கிராமத்தில் உள்ளவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற லட்சியம் வளர்ந்தது. 1958-லேயே இதற்கென திட்டங்கள் ஏற்பாடு செய்தார்கள். என்றாலும் இந்த அரசு வந்த பிறகுதான் அவைகள் நிறைவேற்றப்படுகின்றன. 1975-76-வது ஆண்டில் கூட ரூ. 29 கோடி அளவில் அவைகளுக்கு செலவிட அரசு திட்டங்கள் தயாரித்துள்ளது. எனவே, இத்திட்டங்களில் உள்ள குறைகள், ஏற்படக் கூடிய செலவினங்கள், அரசின் நிதிவசதிக்குத் தகுந்த மாதிரியான ஆலோசனைகளை உறுப்பினர்கள் இங்கே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கும், அவர்கள் யோசனைகளுக்குப் பதில் அளிக்க அதிக நேரம் ஒதுக்கித் தரும்படியும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

* **திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது எங்கள் கட்சி கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டில் 80 சதவிகிதத்தினர் கிராமவாசிகள். கிராமம் முன்னேறினால் தான் நாடு முன்னேறினதாகக் கருத முடியும். கிராமங்களை முன்னேற்ற வேண்டுமென்பதற்காக, அரசியல் சட்டத்தில் 40-ஆவது ஷரத்தில், பஞ்சாயத்து முறைகள் மூலம் கிராமங்கள் வாழ வழிவகுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் போன்றவற்றை அதிக அளவில் அமைக்க வழிவகுக்கப்பட்டிருக்கிறது. நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க வேண்டும். கல்வி வசதி, ரோடு வசதி, குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டியது மிக அவசியம். ஆனால் இந்த லட்சியங்கள் பூரணமாக நிறைவேற முடியாமல் பல சிக்கல்கள் இருந்து வருகின்றன.

அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பதற்காக மாநில சுயாட்சி கேட்கின்ற இந்த அரசு அதன் கீழ் உள்ள பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதன் அலுவல்களை நிறைவேற்ற அதிகாரம் இருக்கிறதா என்றால் பூரணமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஜெனரல் ஃபண்ட்டை பயன்படுத்த வேண்டுமென்றால் கூட மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அனுமதி கோர வேண்டியிருக்கிறது.

1975 ஏப்ரல் 5] [திரு. என். டென்னிஸ்]

பஞ்சாயத்து யூனியன் கட்டடங்கள் பழுது பார்க்கக்கூட அரசின் அனுமதி கோர வேண்டியிருக்கிறது.

இதுவரை பஞ்சாயத்துக் கமிட்டியின் மூலம் நியமனங்கள் நடைபெற்று வந்தன. இப்பொழுது அந்த அதிகாரமும் போய், அதுவும் கலெக்டரிடம் போய்விட்டது. இப்படி அதிகாரங்கள் உள்ளாட்சி ஸ்தாபனங்களுக்கு இல்லாததால் வேலைப் பணிகளை நிறைவேற்ற நிறைய காலதாமதங்கள் ஏற்பட்டு வருகின்றன.

பஞ்சாயத்து ஒன்றியத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் மறைமுக தேர்தல் இருந்து வருகிறது. டைரக்டர் எலக்‌ஷனுக்கு வழி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தேர்தல் ஒழுங்கீனங்கள் குறையும்.

சட்டசபை உறுப்பினர்களுக்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் ஓட்டுரிமை அதிகாரம் கொண்ட பூரண அங்கத்துவம் வழங்கவேண்டும். இப்பொழுது அவர்களுக்கு அந்த உரிமை இல்லை.

பஞ்சாயத்து யூனியன் ஏரியா வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட பொது காரியங்களுக்கு பஞ்சாயத்து யூனியன் ஜீப்பை மாதத்திற்கு இரண்டு தடவையாவது அவர்கள் பயன்படுத்த அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.

இன்று பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் பெரிய பஞ்சாயத்திற்கும் சிறிய பஞ்சாயத்திற்கும் ஒரு பிரதிநிதிதான். 300 ஜனத்தொகை கொண்ட கிராமப் பஞ்சாயத்துக்கும் 2,000 ஜனத்தொகை கொண்ட ஒரு டவுன் பஞ்சாயத்திற்கும் ஒரு பிரதிநிதி. இந்த நிலை மாறி அவர்களுக்கு ஜனத்தொகைக்கு பொருத்தமாக பஞ்சாயத்து யூனியனில் பிரதிநிதித்துவம் கொடுக்க வழிவகுக்க வேண்டும்.

நகரசபைத் தேர்தல் நடக்கவில்லை. பஞ்சாயத்துக்கான தேர்தல்கள் ஆகஸ்ட் செப்டம்பரில் நடக்க வேண்டும். அதற்கான வாக்காளர் பட்டியல் தயார் செய்யும் வேலை இப்பொழுதே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் ஜீப்புக்கள் வேறு காரியங்களுக்காகப் பஞ்சாயத்து யூனியன் பகுதிக்கு வெளியில் பயன்படுத்தப்படுகின்றன. வளர்ச்சிப் பணிகளுக்கு அவைகளைப் பயன்படுத்த வழிவகுக்க வேண்டும்.

1975 எப்ரல் 5] [திரு. என். டென்னிஸ்]

பஞ்சாயத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கு பதவி உயர்வுக்கு வாய்ப்பில்லை. செகன்ட் கிரேட் கிராம சேவக் முதல் வகுப்பு. கிராம சேவக் ஆவதற்கு 12, 15 ஆண்டுகள் ஆகிவிடுகின்றன.

டிராவலிங் அலவன்ஸ் ஃபர்ஸ்ட் கிரேட் கிராம சேவக்கிற்கு ரூ. 20, செகன்ட் கிரேட்டிற்கு ரூ. 15 என்று இருப்பதை, ரூ. 40, ரூ. 20 என்ற அளவிற்கு உயர்த்த வேண்டும்.

எ.ஆர்.சி. சிபாரிசுப்படி, கிராம சேவக்குகளில் 200 பேருக்கு டிபுடி அக்ரிகல்சுரல் ஆபீசர்களாக பதவி உயர்வு தரப்பட வேண்டும்.

கோளத்தில் கிராம சேவக்குகளுக்கு வில்லெஜ் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் எனப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இங்கே அவர்களுக்கு ரூரல் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் என்ற பெயர் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஃபாமிலி பிளானிங்கில் ஹெல்த் எடுகேட்டர் வேலையில் கிராம சேவக்குகள் அமர்த்தப்பட வேண்டும். அவர்கள்தான் இன்று இந்த வேலையில் எண்பது சதவித வேலையைச் செய்கிறார்கள்.

ப்ரொடக்டட் வாட்டர் சப்ளைக்காக இன்வெஸ்டிகேஷன் சார்ஜ்ஜஸ் கட்ட வேண்டுமென்ற ஒரு விதி இருக்கிறது. அது, பஞ்சாயத்து நிதி வசதிகளுக்கு அதிக நஷ்டத்தை ஏற்படுத்தி விடுகிறது. நிதிநிலை குறைந்த உள்ளாட்சிகளுக்கு அதைக் கட்ட முடியவில்லை.

(முற்பகல் 10-00)

ஆதலால், பல திட்டங்களை அமுல் நடத்த முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இன்வெஸ்டிகேஷன் சார்ஜை அரசு ஏற்று நிர்வகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல ஊராட்சிகள் சிறியதாக இருக்கின்றன. ஆகையால் அவைகள் எகனமிகலி வையபில் யூனிட்டாக செயல்பட முடியாத நிலை இருக்கிறது. நிதி நிலை இல்லாத காரணத்தினால் நெருக்கடியான நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்தச் சிறியப் பஞ்சாயத்துக்களை அமல்கமேட் செய்யும் வேலையை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில

1975 ஏப்ரல் 5] [திரு. என். டென்னிஸ்]

ஊராட்சி எல்லைகள் அட்மினிஸ்ட்ரேடிவ் கன்வினயன்ஸ் இல்லாத நிலையில் இருக்கின்றன. அவைகளை அட்மினிஸ்ட்ரேடிவ் கன்வீனியன்ஸ் உள்ளதாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மாதர் சங்கங்களை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மாதர் சங்கங்களுக்கு மாத்திரம் மானியம் வழங்கப்படுகிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தை இந்த அடிப்படையில் பார்த்தால் ஏகதேசம் ஒரு லட்சம் என்பதினாயிரம் ஜனத்தொகை கொண்ட பஞ்சாயத்து யூனியனுக்கு 5 ஆயிரம் பேர்களுக்கு ஒரு மாதர் சங்கம் இருக்கிறது. இது போதாது. ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு மாதர் சங்கமாவது கொடுக்க வழி வகுக்க வேண்டும். அதிக மாதர் சங்கங்கள் ஏற்படுத்த அதிக மானியம் வழங்கக் கேட்டுக்கொள்வதோடு அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதைப் போல சோஷியல் எஜுகேஷன் செண்டர் குறைவாக இருக்கிறது. இது ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு செண்டர் என்று இருக்க வேண்டும். இப்போது அப்படி இல்லை. மேலும் சோஷியல் எஜுகேஷன் செண்டருக்கு கொடுக்கக்கூடிய நிதி, மானியம் குறைவாக இருக்கிறது, அதனால் அவைகள் ஒரு பத்திரிகையும் வாங்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே அவைகளுக்கு மானியத்தை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரைமரி ஹெல்த் செண்டரில் மூன்றாவது மருத்துவ அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் இரண்டாவது பிரைமரி ஹெல்த் செண்டரை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். பிளாக் டெவலப்மெண்ட் கமிட்டி ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் செண்டருக்கும் இருக்கிறது. ஆனால் இது நடைமுறையில் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, இதைச் செயல்முறைப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். டென்னிஸ்] [1975 ஏப்ரல் 5

மதிய உணவுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் இதைச் சரிவர கண்காணிக்காத நிலை இருக்கிற காரணத்தினால் பலவிதமான ஒழுங்கீனங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஊராட்சித் தலைவரை இந்தத் திட்டத்திற்குத் தலைவராகவும், தலைமை ஆசிரியரை செயலாளராகவும் கொண்டு இந்தக் கமிட்டி இருக்கிறது. ஆனால் நடைமுறையில் செயல்படவில்லை. இது பேப்பர் கமிட்டியாகவே இருக்கிறது. ஆகவே, இதைச் செயல்படுத்தச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செயல்படுத்தி, இந்த ஒழுங்கீனங்களை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதிய உணவிற்கான மானியத்தையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை, லோகல் ரோடு கிராண்ட்ஸ் குறைவாக இருக்கிறது. இந்த மானியம் மூன்று தரங்களாக சாலை பிரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. நபருக்கு 18 காசு என்ற அளவில் கொடுக்கப்படுகிறது. அதோடு சாலையின் நீளம் கணக்கிடப்படுகிறது. எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, மேடு, பள்ளம் நிறைந்த இடமாக அந்தப் பிரதேசம் இருக்கிறது. இந்தக் காரணத்தினால், இதை 3 ஆவது தரத்தில் சேர்த்து அதாவது மலை பாகத்திற்கான 1,340 ரூபாய் வழங்கக் கூடிய சாலைகளாக இதை கிளாசிபிகேஷன் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவ்விதமாக கிளாசிபிகேஷன் செய்யப்பட்டால்தான் அந்தச் சாலைகள் நல்ல விதமாகப் பராமரிக்கப்பட இயலும் என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னபடி, லோகல் ரோடு கிராண்ட்சுக்கான மானியம் போதுமானதாக இல்லை. இதனால் பாலங்கள் அமைக்க முடியவில்லை, ரோடுகளைப் பராமரிக்க முடியவில்லை. ஆகவே இந்த மானியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோல வில்லேஜ் வொர்க்ஸ் புரோக்கிராமில் குடி தண்ணீர் சப்ளை, இணைப்புச் சாலைகளுக்கான மானியமும் போதுமானதாக இல்லை. பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் இவைகளைப் பராமரிக்க நிதிநிலை போதுமானதாக இல்லை. ஆதலால்,

1975 ஏப்ரல் 5] [திரு. என். டென்னிஸ்]

இவைகளுக்கான வழி வகைகளை வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஸ் போகும் சாலைகளை எல்லாம் ஹைவேஸ் சாலைகளாக மாற்ற வேண்டும்.

மைனர் இர்ரிகேஷனைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால், எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி மிகவும் குறைவாக இருந்ததால் அந்தத் தொகை செலவு செய்யப்படாமல் லாப்ஸ் ஆனது. இந்த ஆண்டு இதுவரையிலும் மைனர் இர்ரிகேஷனுக்காக தொகை ஒதுக்கப்பட வில்லை. ஆகவே, தொகை ஒதுக்கப்பட்டு, அந்த வேலைகள் நடைபெறுவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அனிமெல் ஹஸ்பெண்டரி சப்-செண்டரை எடுத்துக் காண்டால், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும், இரண்டு அனிமெல் ஹஸ்பெண்டரி சப்-செண்டர்கள் இருக்கின்றன. இவைகள் போதாது. இவைகளை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள சங்கை என்ற இடத்தில் ஒரு அனிமெல் ஹஸ்பெண்டரி சப்-செண்டரை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரூரல் ரோட்ஸ் ப்ரொக்கிராமை எடுத்துக் கொண்டால் சில பஞ்சாயத்து யூனியனில் பல சாலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியனில் ஒரு வேலையும் நடக்காத நிலை இருக்கிறது. ரூரல் ரோட்ஸ் ப்ரொக்கிராமில் ரோடுகள் எடுக்கப்படாத பஞ்சாயத்துகளுக்கு கூடுதல் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அப்ளைட் ந்யூட்ரிஷன் ப்ரொக்கிராமை எடுத்துக் கொண்டால் அப்ளைட் ந்யூட்ரிஷன் ப்ரொக்கிராம், ரூரல் மேன் பவர் ஆகியவைகள் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியனுக்கு சில ஆண்டுகளுக்கு முன்னலேயே மாவட்ட ஆட்சித் தலைவர் ரெகமண்ட் செய்தார்கள். அதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஹால் இன்னும் கட்டப்படாத பல பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் போன்ற பஞ்சாயத்து யூனியன்களுக்கு கவுன்சில் ஹால் இல்லாத நிலை இருக்கிறது. அதை ஏற்படுத்துவதற்கு வழி வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சிரணி வேலைகளை எடுத்துக் கொண்டால் ஒரு உயர்ந்த நோக்கத்தோடு இந்த சிரணி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இன்று கண்டிராக்ட் மூலம் இந்த வேலைகள் நடத்தப்படுகின்றன. சிரணித் தொண்டர்களைக் கொண்டே வேலைகளை நடத்துவதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நகரப் பஞ்சாயத்துக்களின் நிதி போதுமானதாக இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் மிக ஆத்திரம் ஆத்திரமாக, சில பஞ்சாயத்துக்கள் நகரப் பஞ்சாயத்துக்களாகத் தரம் பிரிக்கப்பட்டன. பிரிக்கப்பட்ட அவைகளை திரும்பவும் வில்லேஜ் பஞ்சாயத்து ஆக்கவும் அப்போது அந்த நகரப் பஞ்சாயத்திலுவுள்ள ஊழியர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. ரா. ரா. முனுசாமி: பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் ஓரிரு கருத்துக்களை வைக்க முன்வந்திருக்கிறேன்.

இன்றைய தமிழகத்தில் 374 பஞ்சாயத்து ஒன்றியங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த 374 பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் 1967-க்கு முன்பு இருந்த நிலையை மாற்றி 1967-க்குப் பிறகு இந்த 7, 8 ஆண்டு காலத்தில் அந்த ஒன்றியங்களெல்லாம் இப்போது எந்த அளவிற்குச் செம்மையாகச் செயல்படுகின்றன என்பதைப் பார்க்கிறபோது நாடும், நாட்டு மக்களும் இந்த அரசைப் பாராட்டிப் புகழ்ந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் வறட்சி வந்து நம்மைத் தாக்கிக் கொண்டிருக்கிறது. அப்படி வறட்சி உள்ள இந்த நேரத்திலும் கூட ஒன்றியங்கள் மூலமாக நாட்டு மக்களுக்குச் செய்யப்படுகிற தொண்டுகள் மிக ஏராளம்.

1975 ஏப்ரல் 5] [திரு. ரா. ரா. முனுசாமி]

குறிப்பாகக் கூறவேண்டுமானால் இப்போது வறட்சி உள்ள இந்த நேரத்தில், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் கூட, ஒன்றியங்கள் மூலமாக மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து தர சுறுசுறுப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்கிறபோது மகிழ்ச்சியாக இருக்கிறது.

எங்கள் பகுதியான தென்னாற்காடு மாவட்டத்தில் செஞ்சி பகுதிகளில் கிணறுகளிலே கற்கள் மட்டும் இருந்து கொண்டிருக்கிற நிலையில் வறட்சி இருக்கிறது. தமிழகத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற தலைவரவர்கள் சுறுசுறுப்பாக இயங்கி அந்த செஞ்சிப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் வசதியைச் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிற போது எங்கள் பகுதி மக்கள் தமிழக அரசையும், குடிநீர் வடிகால் வாரியத் தலைவரவர்களையும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் பகுதியில் உள்ள ஒன்றியத்தில் குடி தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு அந்த மக்களெல்லாம் இந்த ஆண்டு திருவிழா நடைபெறாது என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரவர்களோடு தொடர்பு கொண்டு, குடிநீர் வடிகால் வாரியத் தலைவரவர்களோடு தொடர்பு கொண்டு எடுத்துச் சொல்லி, உடனடியாக இரண்டு வார காலத்தில் அங்கே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகக் குடி தண்ணீர் தந்திருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய வட்டார மக்கள் தமிழக அரசையும், குடிநீர் வடிகால் வாரியத் தலைவரவர்களையும் பாராட்டுகிறார்கள். நாங்கள் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

குறிப்பாக, ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற கல்வி இலாகா பற்றி நாம் தயவுசெய்து சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற கல்வி இலாகாவுக்கும், ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற மக்களுக்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு சில அடிப்படை பிரச்சனைகளை கவனிக்கிறபோது கல்வி இலாகா தடை போட்டு, ஒன்றியம் அவர்களுக்குச் செய்வதை செய்ய முடியாத

நிலையை ஏற்படுத்துகிறது. அதை உடனடியாக மாற்ற வேண்டும். இந்த இரட்டை ஆட்சி முறை இன்றைக்குக் கல்வி இலாகாவில் இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற கல்வி இலாகா அந்த ஒன்றிய அதிகாரி களுக்கும் மக்களுக்கும் உட்பட்டு செயல்பட வேண்டும். இல்லை என்றால், ஒன்றியத்தில் இருக்கிற பள்ளிகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி அரசாங்கமே எடுத்துக்கொள்வதாக இருந்தால் கொஞ்சம் நிம்மதியாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற இணைப்புச் சாலைகள் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இப்போது 1,500 மக்கள் தொகை கொண்ட கிராமத்திற்கு இணைப்புச் சாலைகள் போடுகிறார்கள். அப்படி இணைப்புச் சாலை போடும் போது அது அந்த ஒன்றியத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் படுவதில்லை. அதனால் எப்படி, யாரால் அந்த இணைப்புச் சாலை போடப்படுகிறது என்ற விவரம் ஒன்றியத்தின் தலைவருக்கும், அதிகாரிகளுக்கும் தெரியாமல் போய்விடுகிறது. ஒன்றியத்தின் பொறியாளருக்குக் கூட தெரிவதில்லை. அந்த வேலையை ஒன்றியத்தில் இருக்கிற தலைவருக்கும் அதிகாரிகளுக்கும் தெரிவித்துவிட்டுச் செய்வதாக இருந்தால், எதை எதை எப்போது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சரியான முறையில் எடுத்துச் சொல்லப்பட்டு, முறைபடுத்தித் தர ஏதுவாக இருக்கும். அதற்குக் கூட சந்தர்ப்பம் இல்லாமல் ரூரல் ரோட்ஸ் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வேலைகள் ஒன்றியத்தின் கவனத்திற்கு வந்த பின்னால் செய்யப் படும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற சாலைகளுக்கு ஊராட்சி ஒன்றியமே பராமரிப்புச் செலவு செய்கிறது. ஆனால் ஓடுகிற பஸ்களிலிருந்து கிடைக்கும் வருமானம் முழுவதும் அரசாங்கத்திற்கு வருகிறது. சாலைகளுக்குச் செலவு செய்வது, ஊராட்சி ஒன்றியம். ஆனால் வருமானம் அரசாங்கத்திற்கு. அதனால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பணக் கஷ்டம் ஏற்படுகிறது.

ஆகவே, ஊராட்சி ஒன்றிய ரோடுகளில் பஸ்கள் ஓடத் தொடங்கி, 1, 2, 3 ஆண்டுகளில் அந்த ரோடுகளை ஹைவேஸ் எடுத்துக் கொள்ள வேண்டும். 3 ஆண்டுகளுக்குள் எப்படியாவது எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக்கொள்ளும்போது அங்கே வேலை செய்து கொண்டிருக்கும் 'கேங்' கூலிகளையும் அரசாங்கத்தில் அல்லது ஹைவேசில் எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் டென்னிஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு 374 ஊராட்சி ஒன்றியங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இந்த ஒன்றியங்களில் ஒன்றிய வேலைகளைச் செய்வதற்கு ஜீப்புகள் உண்டா என்றால் இல்லை. சில ஒன்றியங்களில் இருக்கிற ஜீப்புகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். அப்படி எடுத்துக்கொள்ளப்படும் ஜீப்புகள் ஒரு மாதம், இரண்டு மாதமானாலும் திரும்ப வருவதில்லை.

குறிப்பாக, என்னுடைய ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு மாதமாக ஜீப் இல்லை. அதனால் ஒன்றியத்தில் செயல்பட வேண்டிய வேலைகள் தடைப்பட்டுக் கிடக்கின்றன. அங்கு இருக்கிற பொறியாளர்கள் ஒன்றியத்தில் நடைபெற வேண்டிய வேலைகளைப் பார்வையிட்டு, செயல்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது ஜீப் வசதி இல்லாததால் வேலைகள் தடைபடுகின்றன. அதனால் ஒன்றியத்தில் இருக்கிற ஜீப்புகளை ஒன்றிய வேலைகளுக்கே பயன்படுத்த வேண்டும். ஒன்றிய வேலைகளுக்கு ஜீப் பயன்படுத்தப்படவில்லையானால் அரசாங்கம் போடுகின்ற திட்டங்களை நாட்டு மக்களுக்குச் சரியான முறையில் எடுத்துச் சொல்ல இயலாது, நாட்டு மக்கள் அரசாங்கம் செய்யும் நன்மைகளை அனுபவிக்க முடியாது. அரசாங்கம் போடுகிற திட்டங்களைக் கிராமப்புறங்களில், பட்டி தொட்டிகளில் இருக்கிற மக்கள் எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஆகையால் ஒன்றியங்களுக்குக் கண்டிப்பாக ஜீப்புகள் இருக்க வேண்டும். ஒன்றியங்களுக்குச் சொந்தமான ஜீப்புகளை ஒன்றிய வேலைகளுக்கே பயன்படுத்த வேண்டும். அரசாங்கத்திற்கும் அந்த ஜீப்புகளுக்கும் தொடர்பு இருக்கக்கூடாது. இன்னும் சில ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஜீப்புகள் இல்லை. அந்தக் குறையைப் போக்க வேண்டும். அதற்கு இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிற

நிதி போதாது. ஆகவே, இன்னும் அதிகத் தொகை ஒதுக்கி, 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஜீப்புகள் தந்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜீப்புகள் இருந்தால்தான் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற சில பல துறை வேலைகளை எல்லாம் செய்ய முடியும். ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற ஆணையாளரும், பொறியாளரும் செம்மையாக வேலைகளைக் கவனித்து, முடிப்பதற்கு ஜீப் இருந்தால்தான் ஏதுவாக இருக்கும்.

இன்னொரு முக்கியமான பிரச்னையைக் குறிப்பிட விரும்புகிறேன். 1967-ல் இந்த மன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது அந்தப் பிரச்னையை வைத்தேன். அது முடிக்கப்பட்டிருக்கிறது, ஆனால் இன்னும் செயல் வடிவத்தில் வரவில்லை. ஊராட்சி ஒன்றியத்தில் எரிகிற தெரு விளக்குகளுக்கு மீட்டர் பொருத்த வேண்டுமென்று இந்த மன்றத்திலே பலமுறை பேசியிருக்கிறேன். அதை இந்த அரசு ஏற்று, உடனடியாக மீட்டர் பொருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் அந்த வேலை செய்யப்படவில்லை. எல்லாக் கிராமப்புற மக்களுக்கும் மின்சாரம் தரப்பட்டும் ஊராட்சி ஒன்றிய தெரு விளக்குகள் எரியவில்லை என்ற குறை மக்களிடம் இருந்து கொண்டிருக்கிறது. தெரு விளக்கு எரியவில்லை என்று ஒன்றியத்தில் புகார் கூறுகிறார்கள். ஆனால் மின்சாரக் கட்டணம் மட்டும் எல்லா விளக்குகளுக்கும் கட்ட வேண்டியிருக்கிறது. இந்தப் புகாருக்கு இடமில்லாமல் செய்ய வேண்டும். எரிகின்ற விளக்குகளுக்கு மட்டும் கட்டணம் செலுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு மீட்டர் பொருத்த வேண்டும். அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, இந்த உள்ளாட்சித் துறை மானியத்தை வரவேற்று, அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி போதாது என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த கம்யூனிட்டி டெவலப்மென்ட் மானியத்தில் என்னுடைய சில கருத்துக்களை நான் சொல்ல முன்வந்துள்ளேன்.

1975 ஏப்ரல் 5] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இந்த கம்யூனிட்டி டெவலப்மென்ட் என்பது, பஞ்சாயத்து இராஜ்யம் என்ற காந்தியடிகளின் ஜீவாதாரமான லட்சியத்தை வைத்து, நாட்டிலே பரவலாக அடித்தளத்தில் கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுடைய நிலையை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டம். அந்தத் திட்டத்தின் பலனாக கிராமப்புறங்களில் இருக்கிற மக்களை உற்சாகப்படுத்தி, செயல்பட வைத்து, கிராமப்புற மக்கள் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சி இன்றையதினம் தேய்ந்து, தேய்ந்து, கவனக் குறைவு ஏற்பட்டு, ஆரம்பக் காலத்தில் என்ன உற்சாகம் காட்டி, எந்த நேரத்தில் இந்த அமைப்பு வேண்டுமென்று உற்சாகத்தோடு ஊக்கத்தோடு கருதினோமோ அதெல்லாம் குறைந்து போய், இன்றைக்கு ஏதோ அதிகாரிகள் மட்டத்தில் செயல்படக்கூடிய (இதர துறைகளில் இருப்பதைப் போல) அளவில் இந்த கம்யூனிட்டி டெவலப்மென்ட் ஆகிவிட்டது என்று காணும்போது வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை. ஏதோ அதிகாரிகள் அதிகாரம் செலுத்தக்கூடிய ஒரு ஸ்தாபனமாக இது ஆகிவிட்டதே தவிர, மக்கள் நலனைக் கருதி, நாட்டின் நிலையை உயர்த்துவதற்கு ஒரு உணர்ச்சியை மக்களிடையே தூண்டுவதற்கு இந்த அமைப்பு தவறிவிட்டது.

இன்னும் சொல்லப் போனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு இம்மாதிரி மக்களை உற்சாகத்தோடு செயல்பட வைக்க வேண்டுமென்ற எண்ணம் குறைந்துவிட்டது. இப்படி பஞ்சாயத்துக்கள், யூனியன்கள் எல்லாம் ஏதோ உயிர் இல்லாத ஒரு ஜடம் போலாகிவிட்டது என்று கூறும் நிலை வந்து விட்டது. ஆகையால் நமக்கு ஏற்பட்டிருக்கிற புதிய சிந்தனையின் பயனாக, அனுபவத்தின் பயனாக இதை எப்படி மேம்படுத்தி, மக்களை உற்சாகத்தோடு கிராமப்புற வேலைகளில் ஆர்வத்தோடு ஈடுபடச் செய்கின்ற வகையில் செயல்படுவது என்பதை புதிய நோக்கத்தோடு இந்தப் பிரச்னையை அரசு அணுக வேண்டுமே தவிர, கடந்த காலத்தில் இருப்பதை அப்படியே நடைமுறைப் படுத்தி, புதிய சிந்தனை இல்லாமல் போய்க் கொண்டிருப்பது இந்த பஞ்சாயத்து இராஜ்யத்தை எப்படி உருவாக்க வேண்டுமென்று கருதினோமோ அதைச் செய்யவில்லை என்பதைத் தான் குறிக்கும்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 ஏப்ரல் 5

அட்மினிஸ்டிரேட்டிவ் ரீஃபார்ம்ஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் இப்போது இருக்கிற பஞ்சாயத்து அமைப்பு, சரியான முறையில் பஞ்சாயத்தை நடத்த போதிய நிதிவசதி தயார் செய்துகொள்ளக் கூடிய ஒரு அமைப்பாக இல்லாததால் இந்த அமைப்புகளை ஒரு வயபிள் யூனிட்டாக மாற்றி அமைக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அந்தச் சிபாரிசு பற்றி இந்த அரசு எந்தவிதமான முடிவும் இதுவரை செய்யவில்லை. இது ரொம்ப அடிப்படையாகச் செய்ய வேண்டிய ஒரு பெரும் மாறுதல். இந்தப் பஞ்சாயத்துக்களை மாற்றி அமைத்து, வயபிள் யூனிட்டாகச் செய்யவில்லை என்றால் ஏதோ ஒரு தலைவர் இருக்கிறார்; அவர் தலைவராக நடித்துக் கொண்டிருக்கிறார் என்ற நிலைதான் இருக்குமே தவிர, அவர் கடமையைச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

ஆகையால், அட்மினிஸ்டிரேட்டிவ் ரீஃபார்ம்ஸ் கமிஷன் எப்படி 5,000 மக்கள் தொகை கொண்டதாக ஒரு பஞ்சாயத்து இருக்க வேண்டுமென்றும், அதற்குக் குறைவாக இருக்கக் கூடாது என்றும் சொல்லியிருக்கிறதோ அதைப்போல பஞ்சாயத்துக்களை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் நல்ல முறையில் இந்த அமைப்புகள் இயங்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு, அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே சில சிரமங்கள் இருக்கின்றன. பஞ்சாயத்துத் தலைவர்களாக சில வேண்டியவர்கள் இருக்கலாம். அவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடும். "எங்கள் தலைமை போய்விடும்" என்று சொல்லக்கூடும். மாற்றங்கள் ஏற்படுகிறபோது சில எதிர்ப்புகள் வரத்தான் செய்யும். அதைப் பொருட்படுத்தக் கூடாது, வயபிள் யூனிட்டுகளாக பஞ்சாயத்துக்களை எல்லாம் மாற்றி அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கப்படுகிற நிதி மிக மிகக் குறைவானது. தெருவிளக்குகளுக்குக் கூட பணம் கட்ட முடியாத நிலையில் பல பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஒரு கிளார்க்கைப் போட்டுக் கொள்ள வேண்டுமென்றால் கூட நிதி

1975 ஏப்ரல் 5] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

போதவில்லை. எப்படி இந்தப் பஞ்சாயத்துக்களின் நிதி ஆதாரத்தைப் பெருக்க முடியும் என்பதை அரசு கவனித்தாக வேண்டும். அரசு நிதியில் இருந்தாவது இன்னும் அதிக உதவி அளித்தாக வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்போதுதான் பஞ்சாயத்துக்கள் சரியான முறையில் செயல்பட உதவியாக இருக்கும்.

அதோடு மட்டுமல்லாமல் பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுத்தாகவேண்டும். இன்றைக்கு எல்லாவற்றையும் சேர்த்து கோட்டையில் இருந்துகொண்டு மூக்கணாங் கயிறைப் பிடித்து இழுப்பதைப் போல — எதுவாக இருந்தாலும் அவர்கள் இங்கே டி.ஆர்.டி. இடம் அனுமதி பெற்றே செய்ய வேண்டுமென்ற நிலையில் வைத்திருக்கக்கூடாது. எதைச் செய்ய வேண்டுமென்றாலும் இங்கே எழுதி—ஆறு மாதங்கள் கழித்தே அனுமதி வந்தால் செய்யவேண்டும் என்ற நிலை இருந்தால் அவர்களால் எதைச் செய்ய முடியும்? ஆகவே அவர்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். தவறுகள் நடக்காமல் இருக்க வேண்டுமென்பதற்காக இப்போது இங்கே மூக்கணாங்கயிறு போட்டு பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறோம் என்றால் — இப்போது தவறு நடக்கவில்லையா என்ன? அது ஒரு சரியான காரணமாக இருக்க முடியாது. ஊராட்சிகளுக்கு இன்றைக்கு இருக்கிற அதிகாரங்கள் போதாது. பரவலாக அவர்களுக்கு வேண்டிய அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படவேண்டும்.

அடுத்து, அவர்களுடைய நிதி வசதியை அதிகப்படுத்திக் கொள்ள லோகல் செஸ்ஸை ரூபாய்க்கு 2½ போட்டுக் கொள்ளலாம் என்று அதிகாரம் கொடுத்திருக்கிறோம். இது மிகமிக அதிகமான தொகை என்று கருதுகிறார்கள். ஒரு ஏக்கருக்கு 30 ரூபாய் மேல் வரி கொடுத்து வந்தால் இந்த 2½ லோகல் செஸ் 75 ரூபாய் அளவுக்கு கொடுக்க வேண்டிய நிலைமை வந்து விடுகிறது. பலயிடங்களில் இந்த அதிகப்பட்ச அளவு வரியைப் போட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. கட்டாயப்படுத்தப்படவில்லை என்றாலும் இதைப்போல போடச் சொல்லி மேலே இருக்கிற அதிகாரிகள் தீர்மானம் போடுங்கள் என்று சொல்கிறபோது ஊராட்சியில் உள்ளவர்கள் தாங்கள்

போடவில்லை என்றால் அந்த அதிகாரிகளால் என்ன துன்பம் வருமோ என்று போட்டுவிடக்கூடிய நிலைமைகளையும் பார்க்கிறோம். இது கிராமப் புறங்களில் இருப்பவர்களுக்கு மிகுந்த சிரமம் அளிக்கும். கட்டாயப்படுத்தப்படுவது—மறைமுகமாகக் கூட—தவிர்க்கப்பட வேண்டும்.

அடுத்து—இணைப்பு ரோடுகள் போடுவது—இரண்டாண்டுகளாக நாம் ரோடுகளைப் போட்டுக்கொண்டுதான் வருகிறோம். இது ரொம்ப முக்கியம். எத்தனை நாட்கள் தான் ஒரு கிராமம் இன்னொரு கிராமத்தோடு ரோடு இணைப்புக் கூட இல்லாமல் இருப்பது ? ரோடு இணைப்பு இல்லாத கிராமங்களே—இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் இருக்கக் கூடாது என்கிற அடிப்படையில் திட்டமிட்டு இன்னும் வேகமாக இந்தப் பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும்.

இன்னும் குடிநீர் திட்டத்திற்காக பணம் ஒதுக்கப்படுகிறது. இன்றைக்கு மேஜர் பஞ்சாயத்துக்களை எடுத்துக்கொண்டாலும் கூட தங்களுடைய வருவாயை வைத்துக் கொண்டு செயல்பட முடியாத நிலைமைகளில் தான் இருக்கின்றன. குடிநீர் வாரியம் இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸைக் கட்ட வேண்டும் என்கிறார்கள். அதைக் கட்டினால்தான் இன்வெஸ்டிகேஷனையே எடுத்துக் கொள்வோம் என்கிறார்கள். வசதி உள்ளவர்களைப் பற்றி கவலையில்லை. வசதி இல்லாத பஞ்சாயத்துகளிலாவது அவர்கள் இன்வெஸ்டிகேஷனை நடத்தி—பிறகு ஸ்கீமிற்கு லோன் சாங்ஷன் செய்கிறபோது இதையும் சேர்த்து லோனாக வசூலித்துக் கொள்ளலாம்.

திரு. செ. கந்தப்பன் : ஒரு சின்ன விளக்கம்—பொதுவாக மேஜர் பஞ்சாயத்துக்களிடம் தான் ஆய்வுக் கட்டணம் கேட்கப்படுகிறது. மைனர் பஞ்சாயத்துக்களில் கேட்பது இல்லை. இன்னும் இந்த ஆய்வுக் கட்டணத்தை தவணை முறையில் செலுத்த முன்வந்தாலும் மேஜர் பஞ்சாயத்துக்களின் இந்தக் கோரிக்கையை இப்போது ஏற்றுக்கொள்கிறோம். முன்னால் வசூலிக்கவில்லை என்றால்—பின்னால் அந்தத் திட்டத்தை கைவிடுகிற நிலை வந்தால்—இந்த ஆய்வுக் கட்டணத்தை

1975 ஏப்ரல் 5] [திரு. செ. கந்தப்பன்]

அவர்களிடம் இருந்து எப்படி வசூலிப்பது என்பதில் நடைமுறைச் சிக்கல் வரும். ஆகவேதான் இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: நிதி வசதி இல்லாத மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு மட்டும் இதை கன்சிடர் பண்ணினால் போதும். ஆய்வுக் கட்டணத்தைக் கட்ட முடியாத நிலையில் இருக்கிற பஞ்சாயத்துக்களுக்கு இம்மாதிரியான சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் இன்றைக்கு எல்லாக் காரியங்களையும்—மீன் வளர்ப்பு—பழத் தோட்டம் என்பதாக—பஞ்சாயத்துக்களில் ஒப்படைத்து இருக்கிறோம் என்றாலும் செலவழிக்கப்படுகின்ற பணம் ஒழுங்கான முறையில் செலவழிக்கப்படுகின்றதா என்பதைப் பார்க்க வேண்டும். அங்கங்கே நிரம்ப தவறுகள் ஏற்படுகிற சூழ்நிலை எல்லா இடங்களிலும் வளர்ந்து விட்டது.

சத்துணவுத் திட்டம் என்பதாக—பழத் தோட்டங்களை அங்கங்கே ஏற்படுத்துகிறோம் என்றால் அங்கே உற்பத்தியாகிற பழங்கள் ஏழைகளுக்காகப் போய்ச் சேருகின்றன? பணத்தைச் செலவழிக்கிறோம். ஒருசில இடங்களில் பழத் தோட்டங்கள் நல்லமுறையில் கவனிக்கப்படுகின்றன. பலயிடங்களில் கிணறு இல்லாது — பம்புசெட்டு இல்லாது, சரியான முறையில் கவனித்து பராமரிக்கப்படவே இல்லை. பொதுப் பணம்—இப்படி வீணடிக்கப்பட்டால் அது நாட்டுக்குத்தான் நஷ்டம் என்பதை சிந்திக்க வேண்டும்.

மீன் உற்பத்தி செய்கிறோம் என்று அங்கங்கே தொட்டிகள் மீன் குஞ்சு வளர்ப்புக்காக கட்டப்பட்டன. தொட்டிக்கு ஐயாயிரம் செலவு—அவை எல்லாம் இடிந்துபோய் கிடக்கின்றன. இடிந்து நாசமாகப் போனதைப்பற்றி கவலையில்லை. எஞ்சி இருக்கக் கூடியவற்றையாவது எப்படி பராமரிப்பது என்பதைப் பார்க்க வேண்டும். உள்நாட்டு மீன் வளர்ப்புத் திட்டம் என்று ஆரம்பித்தார்கள். அதைக் கொஞ்சம் சரியான முறையில் நடைமுறைப்படுத்த கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்து, ஆசிரியர்களை மாற்றம் செய்வது—இப்போது ஒரு மாநகராட்சியில் இருந்து இன்னொரு மாநகராட்சிக்கு—ஒரு முனிசிபாலிட்டியில் இருந்து இன்னொரு முனிசிபாலிட்டிக்கு மாற்றம் செய்யலாம் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். முனிசிபாலிட்டியில் இருந்து மாநகராட்சிக்கும், மாநகராட்சியில் இருந்து முனிசிபாலிட்டிக்கும் மாற்றம் செய்வதற்கும் வழிவகை செய்தாக வேண்டும்.

இன்னும் கோவை சிங்காநல்லூர் பகுதியில் குடிதண்ணீரே இல்லை—மக்கள் கஷ்டப்படுகிறார்கள். குடிதண்ணீர் வாரியம் உடனடியாக அந்தப் பகுதிக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 10.30)

* **திரு. எஸ். கணேசன்**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

கிராம மக்களுடைய நல்வாழ்வை, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டிருக்கிற இந்த உள்ளாட்சித் துறை மக்களுக்கு அத்தியாவசியமான சேவைகளைச் செய்து வருகிறது என்பதை யாரும் மறுத்துப் பேசுவதற்கு இயலாது. அந்த அளவுக்கு, நகரப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் போல், கல்வி, சமூக நலம், வேளாண்மை இவைகளிலெல்லாம் உற்சாகப்படுத்துகின்ற முறையிலே இந்தத் துறை சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறதென்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

1960-வது ஆண்டிலிருந்து படிப்படியாக தமிழகத்திலே இப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் துவக்கப்பட்டு, இன்றைக்குத் தமிழ்நாடு பூராவிலும் ஏறத்தாழ 374 ஊராட்சி ஒன்றியங்கள் பணிபுரிந்து கொண்டிருக்கின்றன. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், அரசினால் அறிமுகப்படுத்தப்படுகின்ற பல்வேறு புதிய புதிய திட்டங்களையும் இன்றைக்குச் செயல்

1975 ஏப்ரல் 5] [திரு. எஸ். கணேசன்]

படுத்துகின்ற முக்கியமான துறை-உள்ளாட்சித் துறையென்று சொன்னால் அது மிகைப்படுத்திச் சொல்வதாக நிச்சயமாக இருக்கமுடியாது.

ஆனால், இன்றைக்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 1960-வது ஆண்டிலே எவ்வளவு பணியாளர்கள் இருந்தார்களோ அந்த அளவுக்குத்தான் இருக்கிறார்கள். துவக்கக் காலத்திலே ஊராட்சி ஒன்றியங்களுடைய வேலை மிகக்குறைவாக இருந்தது. இன்றைக்கு வளர்ந்து வருகிற நமது சமுதாய அமைப்பில் ஊராட்சி ஒன்றியங்களின் பணிகள் அதிகமாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பணிபுரிகின்ற அலுவலாளர்களின் எண்ணிக்கை அதே அளவில் தானிருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, ஊராட்சி ஒன்றியங்களில் எந்த அளவு பணிகள் வளர்ந்திருக்கின்றனவோ அந்த அளவு அலுவலாளர்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்த வேண்டுமென்ற என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை இங்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குப் பல்வேறு நலத் திட்டங்களால், கிராம சேவக்குகள் முழுவதுமாகத் தங்களுடைய வேளாண்மை உற்பத்தியை கவனிக்கமுடியாத நிலையில் அவர்களுக்குக் குடும்ப நலத் திட்டம், சிறு சேமிப்புத் திட்டம், இவற்றால் உழைப்பு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. என்னுடைய கருத்தெல்லாம் இந்தத் துறைக்கென்று இருக்கிற அந்த இலாகா சம்பந்தப்பட்டவர்களும் குடும்ப நலத் திட்டம், வேளாண்மைத் துறை இவைகளில் அதிகமாக நாட்டம் செலுத்துவதில்லையென்ற குறை இருந்து கொண்டிருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பி கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்றைக்கு ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஊர் நல ஊழியர்கள், அதாவது, கிராம சேவக்குகள் பணி அத்தியாவசியமாக இருக்கின்றது. அவர்கள், கிராமங்களுக்குப் பிரித்து அனுப்பப்படுகிற நேரத்தில் வீடுகள் கிடைக்காமல் கஷ்டப்படுகிற நிலையிருப்பதை அரசு ஆராய்ந்து, எந்தெந்த இடங்களிலே தலைமை நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்தந்த இடங்களிலே அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். கணேசன்] [1975 ஏப்ரல் 5

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உபரி நிதியிலிருந்து பல வளர்ச்சித் திட்டங்கள், சாலே அமைப்பது, அல்லது கட்டிடங்கள் கட்டுவது போன்ற அந்தப் பணிகளுக்குப் பொது நிதியிலிருந்து செலவிடப்பட வேண்டிய அந்தத் தொகையை, சில மாதங்களுக்கு முன்பு வரை, மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலே அனுமதி வாங்கி முடித்துக் கொள்ளலாம் என்ற தாக்கீது இருந்தது. ஆனால், அண்மைக் காலத்திலே, மறுபடியும் டி.ஆர்.டி. அவர்களுக்குச் சென்றுதான் வரவேண்டும் என்று மாற்றியிருப்பதாக நான் அறிகிறேன். இங்கே பேசியவர்களும் குறிப்பிட்டார்கள். பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் என்ற அடிப்படையிலே, சாலே அமைப்பது போன்றவற்றிற்கு ஊராட்சிப் பொது நிதியிலிருந்து ரூ. 50,000, ரூ. 1 இலட்சம் செலவு செய்ய வேண்டுமென்ற நிலை வரும்போது, உதவிப் பொறியாளர்களுக்குச் சென்று, மதிப்பீடு அங்கே தங்கி, அதற்குப் பிறகு கோட்டப் பொறியாளருக்குச் சென்று, அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சென்று, டி.ஆர்.டி.-க்கு வந்து திரும்புவதற்கு ஓராண்டுக்காலம் பிடித்து விடுகிறது. ஓராண்டுக்கு மேலேயும் ஆகிறது. ஆகவே, அப்படி உபரி நிதியிலிருந்து, பொது நிதியிலிருந்து வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடப்படுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலே அனுமதி இருந்தால் போதுமென்றால், நிச்சயமாகப் பல வளர்ச்சித் திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் சிறப்பாகச் செய்து முடிக்கலாம் என்ற கருத்தை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

இன்னும் ஒன்று, இப்படிச் சாலைகள் அமைக்கிற நோத்தில், ரூ. 10,000 மதிப்பீடு வரையிலே உதவிப் பொறியாளர்கள் அதற்கு ஒப்புதல் அளிக்கலாம். அதற்கு மேற்பட்ட தொகைக்கு கோட்டப் பொறியாளர் ரூ. 50,000 வரையிலும், ரூ. 1 இலட்சம் என்றால் எஸ்.இ. ஒப்புதல் அளிக்க வேண்டுமென்ற நிலையிருக்கிறது. இன்றைக்கு என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையிலே, மாயூரத்தில் ஒரே ஒரு உதவிப் பொறியாளர் இருக்கிறார். அங்கே 5 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இரண்டு தாலுகாக்களையும் சேர்த்து 5 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒரே ஒரு உதவிப் பொறியாளர் நெடுஞ்சாலையையும் பார்த்துக் கொள்ளவேண்டும், ஊராட்சி ஒன்றிய சாலைகளையும்

1975 ஏப்ரல் 5] [திரு. எஸ். கணேசன்]

பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்குச் செல்லவேண்டுமென்றால், அவர் வேறு ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்குச் செல்கிறேன், நாளைக்கு வருகிறேன், நாளைய மறுதினம் வருகிறேன் என்று கூறத்தக்க அளவுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிற காரணத்தாலே, குறிப்பிட்ட திட்டங்களைச் செயல் படுத்த முடியவில்லை. எனவே, ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக போடப்படுகிற சாலை, கல்விக் கூடங்கள் இவைகளுக்கென ஒரு தனி உதவிப் பொறியாளர் நியமிக்கப்பட்டால் பொருத்தமாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தைச் சொல்லக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

இன்னும் ஒன்று, இந்த ஆசிரியர் மாற்றங்கள் நீண்ட காலமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன்கள் சங்கத்தினரால் அது வற்புறுத்தப்பட்டு வருகிறது. அண்மைக்காலத்திலே அதைப்பற்றி நிச்சயமாகச் செய்கிறோம் என்ற ஒப்புதலை அரசு தந்திருக்கிறது. ஆசிரியர் மாற்றம் கல்வித் துறையிலே இருப்பதன் காரணமாக ஊராட்சி ஒன்றியத் தலைவரவர்கள் நிர்வாகச் சங்கடங்கள் காரணமாக ஒரு ஆசிரியரை வேறு ஓரிடத்திற்கு அல்லது பொதுமக்கள் குறை கூறுகிறார்கள் என்ற அடிப்படையிலே ஆசிரியர்களை மாற்ற வேண்டுமென்றால் கல்வி இலாகாவிற்குச் சென்று வருவதால், மிகுந்த காலதாமதம் ஆகிறது. ஆசிரியர்களை மாற்றுகிற அந்தப் பணி ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவருக்கே இருக்கும் என்று, உத்தரவை மாற்ற வேண்டுமாய் இந்த நேரத்தில் நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சிகளுக்கு மின் விளக்குகள் கட்டணம் பற்றி ஒன்று கூறவிரும்புகிறேன். உள்ளாட்சித்துறை பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த மாண்புமிகு அன்பில் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு—அவரிடத்திலே பல்வேறு இடங்களிலே சொல்லப்பட்டதற்கு—மீட்டர் பொருத்தித் தருகிறேன் என்று உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். என்னுடைய ஊராட்சியைப் பொறுத்தவரையிலே ஏறத்தாழ ரூ. 6,000 வருமானம் வருகிறது. ஆண்டொன்றுக்கு எரிகின்ற விளக்குகள், எரியாத விளக்குகள் எல்லாவற்றிற்கும் ரூ. 5, ரூ. 2½ என்று பிளாட் ரேட்டாகப் போட்டு விடுகிறார்கள். எரியாத லைட்டுக்கும்

கட்டணம் போட்டுவிடுகிறார்கள். அன்றைக்கிருந்த அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட சங்கடங்களைக் கேட்டு, மீட்டர் பொருத்தித் தருவதாகச் சொன்னார்கள். அதையும் விரைவாகச் செய்து தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பேரூராட்சிகளுக்குத் தற்பொழுது நிதி வசதி சரியாக இல்லாத காரணத்தால், இன்று வளர்ச்சிப் பணிகளை அவர்களால் செய்ய முடியவில்லை. எனவே, சிற்றூர்களுக்கு ஈட்டு வரி கொடுப்பதைப் போலவே, பேரூராட்சிகளுக்கும் கொடுக்க வேண்டுமென்று என்னுடைய தாழ்மையான வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நாடு எதிர்நோக்கியிருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க 3 அல்லது 4 ஊராட்சிகளை இணைத்து, நாட்டிலே வேலையில்லாமலிருக்கிற எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை —அவர்கள் நிறைய இருக்கிறார்கள்—நியமிக்கலாம். அது பணியாளர்கள் சிறந்தவகையில் பணியாற்ற ஏற்றதாக இருக்கும். எனவே அப்படிப்பட்ட மாற்றத்தைச் செய்ய வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

தாய்-சேய் நல விடுதிகள். இந்த விடுதிகளுக்கு மருத்துவத் தாதிகள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. என்னுடைய பகுதியில் பல சென்டர்களுக்கு ஏறத்தாழ ஓராண்டுக்காலமாக மருத்துவத் தாதிகள் இல்லாமலிருக்கிறார்கள். வேலை தேடித் தரும் நிலையத்திலே கேட்டோம். அவர்கள் அப்படிப்பட்ட தாதிகள் இல்லையென்று பதில் கொடுக்கிறார்கள். தினசரியிலே விளம்பரம் போட்டுப் பார்த்தோம்--தாதிகள் கிடைக்கவில்லை—அப்பதவிகள் நிரப்பப்படவில்லை. அதற்குக் காரணம், அரசு மருத்துவ மனைகளிலே பயின்றவர்கள்தான் அப்படிப்பட்ட வேலைக்கு வரவேண்டுமென்ற நிலையிருக்கிறது. தனியார்கள்கூட அப்படிப்பட்ட பள்ளிகளை நடத்துவதாக அறிகிறோம். அதிலே பயின்று வருகின்றவர்களையாவது, இந்தத் தாய் சேய் நல விடுதிகளுக்கு நியமிக்க அரசு அனுமதிக்க வேண்டும். இறுதியாக ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

1975 ஏப்ரல் 5] [திரு. எஸ். கணேசன்]

தமிழ்நாட்டிலேயுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பணியாற்றி வரும் கிராம சேவக்குகள் கிராமப் புறங்களில் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். மற்றும், அரசாங்கத்தினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் நல்ல திட்டங்களுக்கு உறுதுணை புரிவதற்காக அவர்கள் இருக்கிறார்கள். அரசாங்க அலுவலாளர்கள் 8 மணி நேரம் வேலை செய்யக்கூடிய சமயத்தில், இவர்கள் இரவு பகலாக பணிபுரியக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசின் அடிப்படைப் பணியாளர்களுக்குக் கொடுக்கின்ற ஊதியமும், பயணப் படியும் நிரந்தரத் தன்மையும் மற்ற உதவிகளும் அளிக்க அரசு முன்வரவேண்டுமென்று கூறி இந்த அளவோடு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி மானியத்தின் பேரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்து இருக்கிற இந்த மானியத்தைப் பற்றி என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அண்ணல் காந்தியடிகள் சொன்னார்கள், இந்த நாட்டிலே ஆறு லட்சம் இதயங்கள் இருக்கின்றன, 6 லட்சம் இதயங்களும் நல்ல முறையிலே செயல்பட்டால்தான் இந்த நாடு நல்லபடியாக இருக்கும் என்று சொன்னார்கள். அந்த 6 லட்சம் இதயங்கள், இந்த நாட்டிலேயுள்ள 6 லட்சம் கிராமங்கள்தான், இதயம் கெட்டுவிட்டால் அதோடு கூட சேர்ந்து எப்படி உடம்பும் கெட்டு சோர்வு அடைந்து விடுகிறதோ அதைப் போன்று இந்த நாட்டிலே கிராமங்கள் வளர்ச்சியடையவில்லையென்றால் நாடு முன்னேற முடியாது என்ற நிலைமையில்தான் அவர்கள் கிராம ராஜ்யம் என்றும் ராமராஜ்யம் என்றும் பஞ்சாயத்து ராஜ்யம் என்றும் சொன்னார்கள். அந்த முறையிலேதான் இந்தத் திட்டங்களையெல்லாம் கொண்டு வந்தார்கள். கிராமங்களிலே இருக்கிற மக்களிடத்திலே மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் அவர்களிடம் தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டுமென்று நல்ல நோக்கத்திலே கூறியிருக்கிறார்கள்.

ஆனால், 20 ஆண்டுக் கால சமுதாய வளர்ச்சியைப் பார்த்தால், அந்த நம்பிக்கை வளர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் தளர்ந்திருக்கிறது என்று சொல்லக்கூடிய போக்கில்தான் அமைந்

[திரு. கே. எ. வகாப்] [1975 எப்ரல் 5

திருக்கின்றது. அது மட்டுமல்லாமல் எந்த அரசாக இருந்தாலும் அவர்களுடைய கவனமெல்லாம் கிராமங்களைவிட நகரங்களில்தான் அதிகமாகச் செல்கிறது. வளர்ச்சித் திட்டங்கள் அதிகமாக நகரங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றன. நகரங்கள் முகத்தைப் போன்றவை, பவுடர் போட்டு வெளிப்படைக்குக் காட்டுவதாக அமைந்துள்ளவை. நகரங்களுக்கு அதிகமாக ஒதுக்கி நகரங்களைப் பளிச்சிட்டுக் காட்டச் செய்கிறோமே தவிர நாட்டின் இதயங்களாக இருக்கிற கிராமங்களில் உள்ள கோளாறுகளைப் போக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அப்படிச் செய்யப்பட்டால்தான் ஒன்றியங்கள் எல்லாம் தீவிரமாகச் செயல்படமுடியும். எந்த எந்தக் கொள்கைகள் சமுதாய வளர்ச்சிக்கு அடிப்படை என்று கருதுகிறோமோ அந்தக் கொள்கைகள் சீர்கெட்டிருக்கின்றன இன்று என்பதையெல்லாம் உணர்ந்து அதைப் போக்குகிற வகையில் தீவிரத் திட்டம் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் சில திட்டங்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியடைக்கூடிய வகையில் நடந்துள்ளன. கல்விப் பணிகள், சாலை இணைப்புப் பணிகள், சிறு பாசன வசதிகள் எல்லாம் சிறப்பாக இருக்கின்றன. ஆனால், அந்தப் பணிகள் செய்யப்படக்கூடிய முறைகள்தான் சீர்கேடாக இருக்கின்றன. இதைப்பற்றி இங்கே பல உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். அப்படிப்பட்ட தவறுகளை எல்லாம் போக்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பஞ்சாயத்து ஒன்றியத்திற்கு தலைவர் ஒருவர் இருக்கிறார், பி.டி.ஓ. ஒருவரும் இருக்கிறார். அந்தத் தலைவர், தலைவர் பொறுப்பிலே இருந்தாலும்—அது ஊராட்சித் தலைவராக இருந்தாலும் சரி, பேரூராட்சித் தலைவராக இருந்தாலும் சரி—வெறும் ரப்பர் ஸ்டாம்பாகத்தான் இருக்கிறாரே தவிர எங்களுக்கு அதிகாரம் போதுமான அளவிற்கு இல்லை. நாங்கள் தீர்மானத்தைப் போட்டுக் கொடுக்க முடியும், அவர்கள் வைக்கின்ற தீர்மானத்தை நிறைவேற்றிக் கொடுக்க முடியும். அவ்வளவுதான். எங்களுக்கு அதிகமான பொறுப்புக்களைக் கொடுங்கள் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்,

1975 எப்ரல் 5] [திரு. செ. கந்தப்பன்]

ஊராட்சி ஒன்றியங்களினுடைய நடைமுறைகளிலே—இணைப்புச் சாலை வசதிகள், குடிநீர் வசதிகள் எல்லாம் சிறப்பாக இருக்கின்றன, நான் இல்லையென்று சொல்லவில்லை—குடி-நீர் வாரியத்தின் மூலமாகத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, குடிநீர் வாரியத் தலைவர் ஒரு செய்தியை இங்கே சொன்னார்கள், எனக்கு ஆச்சரியமாக இருந்தது, சென்டேஜ் வாங்குகிறார்கள், இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் வாங்குகிறார்கள்; இல்லையென்று சொன்னார்கள்...

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : டவுன் பஞ்சாயத்துக்குத்தான் வாங்குகிறார்கள், மைனர் பஞ்சாயத்துக்கு வாங்குவதில்லை.

திரு. கே. எ. வகாப் : மைனர் பஞ்சாயத்துக்களுக்கும் வாங்குகிறார்கள்.

திரு. செ. கந்தப்பன் : மைனர் பஞ்சாயத்துக்களுக்குப் பொதுவாக வாங்குகிற நடைமுறை இல்லை. சில நேரங்களிலே மைனர் பஞ்சாயத்துக்கள், வறட்சிப் பகுதிகளின் கீழே வருகிற போது அல்லது தொத்து நோய்ப் பகுதி என்ற அடிப்படையிலோ அல்லது வேறு வழியில்லாமல் ஒன்றியத்தின் மூலமாக பயன்பெறமுடியாத நிலைமை ஏற்படுகிறபோதோ எதோ ஒரு காரணத்தினாலோ நீர் வசதியைப் பெற வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறபோது வேறு ஊராட்சிகளோடு சேர்ந்து அவர்களாகவே விரும்பி எங்களுக்கும் அந்த வசதிகளைத் தாருங்கள் என்று சொல்கிறபோதுதான் இந்தப் பிரச்னை வந்திருக்குமென நினைக்கிறேன். பொதுவாக நடைமுறையிலே மைனர் பஞ்சாயத்துக்களிடமிருந்து வாங்குவதில்லை. கொடுக்கப் பட்டிருக்குமானால் அதைப்பற்றி கவனத்திற்குக் கொண்டுவந்தால் சீர்படுத்தலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, மைனர் பஞ்சாயத்துக்களுக்கு வேண்டுமென்று அவர்களாக வருகிறபோது வாங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி அவர்களாகவே வலிய வந்து கேட்கிறார்கள் என்றால் வேலை சீக்கிரமாக முடியவேண்டுமென்ற எண்ணத்திலே கேட்கிறார்கள். என்னுடைய தொகுதி

யிலே திருப்பாற்கடலில் செய்து கொடுத்து இருக்கிறார்கள். இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கட்டியிருக்கிறார்கள், இப்படி பல உதாரணங்கள் இருக்கின்றன, சிறு கிராமங்களுக்கு அதிலிருந்து விதிவிலக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

பஞ்சாயத்து ஒன்றியங்களில் டிராக்டர்கள், பிளாஸ்டிங் யூனிட், எல்லாம் வைத்திருக்கிறார்கள். சரியாகப் பயன்படுத்தப் படுவதில்லை. உதாரணம் எத்தனையோ சொல்லமுடியும். குறிப்பாக என்னுடைய வந்தவாசி ஒன்றியத்திலே டிராக்டர் இருக்கிறது, வருமானம் ஒரு ஆண்டுக்கு 30 ஆயிரம் ரூபாய் வந்தால் செலவு 40 ஆயிரம் ரூபாய் ஆகிறது. அடிக்கடி ரிப்பேர் ஆகிற சூழ்நிலை இருக்கிறது. பழைய டிராக்டராக இருக்கிறது, கண்காணிப்பு சரியாக இல்லை, ஆகவே எஞ்சினியரிங் டிபார்ட்மெண்ட்டிடமே ஒப்படைத்துவிடலாம், அவற்றையெல்லாம் ஒன்றியங்கள் வைத்துக் கொண்டு சிரமப்பட வேண்டியதில்லை.

ஒன்றியங்களிலே உள்ள ஊராட்சிகளில் அவற்றின் தலைவர்களே கான்ட்ராக்ட் எடுத்துச் செய்யக்கூடிய முறை இருக்கிறது. அதனால் என்ன ஏற்படுகிறது என்றால், ஊராட்சித் தலைவர்கள் நல்ல முறையில் செய்கிறார்கள் இல்லையென்று சொல்லவில்லை, ஆனால் சில நேரங்களிலே தவறுகள் ஏற்படுகின்றன. பி.டி.ஓ. வினிடத்திலே ஒரு தலைவர் சென்று மதிப்போடு நிற்க முடியவில்லை என்பது மட்டுமல்ல, அந்த பி.டி.ஓ க்கள் ஊராட்சித் தலைவர்களை சாதாரண ஒரு பியூன் தோரணையிலேதான் பார்க்கிறார்கள், அவர்களை உட்கார வைத்துக்கூட பேசுவதில்லை என்ற நிலைமை இருக்கிறது. காரணம் இவர்கள் அவர்களிடத்திலே செக் வாங்க பணம் வாங்க போய் கேட்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, தலைவராக இருக்கிறவர் கான்ட்ராக்டர்களை எடுக்காமல் இருக்கச் செய்ய வேண்டும், அப்படிச் செய்தால்தான் கௌரவமாக தலைவர்கள் இருக்க முடியும் என்பதால் வேறு முறையைக் கையாண்டு கான்ட்ராக்ட்டுகளை விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரூராட்சிகள் இன்றைய தினம் அனாதைக் குழந்தைகளாக இருக்கின்றன. எந்தவிதமான நிதியும் இல்லை. ஊராட்சிகளுக்காவது மேட்சிங் கிராண்ட் போன்றவை தருகிறீர்கள். பேரூராட்சிகளுக்கு அப்படிப்பட்ட வசதிகள் இல்லை, தன்னுடைய

1975 ஏப்ரல் 5] [திரு. கே. எ. வகாப்]

காலிலேயே நிற்கவேண்டியவைகளாக இருக்கின்றன. சினிமா கொட்டகைகள் மூலமாக பேரூராட்சிகளுக்கு வருமானம் வந்தால் அதிலிருந்து யூனியன்கள் எடுத்துக்கொள்கின்றன. ஆனால் யூனியன்கள் உதவுவதற்கு எந்தவிதமான சட்டமும் இல்லை என்று சொல்கிறார்கள், பஞ்சாயத்து யூனியன்கள் நிதியிலிருந்து சாலைகள், குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள், கொசு ஒழிப்புத் திட்டம் இவற்றிற்கு எல்லாம் பணம் கொடுப்பதில்லை. ஊராட்சிகளுக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் பேரூராட்சிகளுக்கும் கொடுப்பதில்லை, அவைகளுக்கும் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று சென்ற முறையே நான் சொன்னேன். செக்கிலே கையெழுத்துப் போடுவது எக்ஸிகியூடிவ் ஆபீஸர், தலைவர் செய்யலாம் என்று இருக்கிறது. தலைவர் பேரில் நம்பிக்கையில்லாமல் இப்போது ஏ.பி.ஓ. அனுமதி பெற வேண்டும் அல்லது டி.டி.ஓ. அனுமதி பெற வேண்டும் என்று இருக்கிறது. தலைவர் என்று இருந்தால் சிறிய பொறுப்பாவது கொடுக்கப்பட வேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் அவர்கள் அக்கறையோடு செயல்படுவார்கள்.

தியேட்டர்களில் வரி ஏய்ப்புகள் நடக்கின்றன, எங்கள் பகுதியிலே ஒரு இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டு அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. கலெக்டருக்கு எழுதி 6 மாதம் ஆகிவிட்டது. கலெக்டர் வருவாய்த் துறைக்கு எழுதி, பிறகு அவர்களும் கலெக்டருக்கு எழுதி இப்போது அந்த பைலையே குளோஸ் பண்ணிவிட்டார்கள் என்ற நிலைமைதான் இருக்கிறது. செல்வாக்குப் படைத்தவர்கள், வசதியுள்ளவர்கள் இப்படி வரி ஏய்ப்பு செய்வது என்றால், கலெக்டருக்குத் தெரிவிக்கப்பட்டு ஒரு ஆண்டு கிட்டத்தட்ட ஆகியும் கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே, இம்மாதிரி நிலைமைகளையெல்லாம் திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காலதாமதத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன், கலெக்டர் ஆபீஸுக்கு அனுப்பினால் கலெக்டர் ஆபீஸிலிருந்து திரும்பி சில விஷயங்கள் ஊராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்குச் சென்றுவிடுகின்றன. வந்தவாசியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்

[திரு. கே. ஏ. வகாப்] [1975 ஏப்ரல் 5

தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அதற்காக இடத்தைக் கேட்டார்கள், கொடுத்தோம். பிறகு கட்டடத்திற்குப் பணம் இல்லை, நீங்களே ஏதாவது கட்டிக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள், ஊராட்சியும் பேரூராட்சியும் சேர்ந்து டெம்பரரி ஷெட் 20 ஆயிரம் ரூபாயிலே கட்ட முடிவு செய்து இருக்கிறோம். அது மாவட்ட வளர்ச்சி அலுவலகத்திலிருந்து டி.ஆர்.டி.க்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அவர்கள் அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள், அவர்களே செய்யக் கூடிய பொறுப்பிலே இருந்தும்கூட அரசாங்கத்திற்கு அதை அனுப்பியிருக்கிறார்கள், என்னவோ தெரியவில்லை. ஏனென்றால், பண விஷயம் என்று ஒருவேளை அனுப்பியிருக்கலாம்.

இன்றைக்கு அரசாங்கத்திலே உள்ள ஆர்.டி.எல்.ஏ., டிபார்ட்மெண்ட்டுக்கு போய், பிறகு ஹோம் டிபார்ட்மெண்டுக்குப் போய் பிறகு பைனான்ஸ் டிபார்ட்மெண்டுக்குப் போய் பிறகு பயர் சர்விஸ் டைரக்டருக்குப் போய் அது இப்பொழுது எங்கேயிருக்கிறது என்ற தெரியவில்லை. நான் திறப்பு விழாவிற்காகக்கூட மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்திலே ஜனவரி மாதத்தில் தேதி கேட்டேன். தீ அணைப்பு விஷயமாகிய இதிலேயாவது கொஞ்சம் அக்கறையோடு அந்த அதிகாரிகள் உடனடியாகத் தீர்க்க வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டு கொள்கிறேன்.

பேரூராட்சிகளின் சார்பில் தார்ச்சாலைகள் போடுவதற்கு மானியம் அளிக்கப்படுவதை நான் வரவேற்கிறேன். ஏனென்றால் மண்ணைப் போட்டுபோட்டுப் பல ஊழல்கள் நடந்திருக்கின்றன இறந்த காலத்தில். ஆனால் இன்றைக்குத் தார்ச்சாலை போடுவதால் ஐந்தாறு ஆண்டுகளுக்குப் பஞ்சாயத்தின் நிதியும் மிச்சப்படுகிறது, சாலைகளும் நல்லமுறையில் இருக்கின்றன. அந்த மானியத்தை இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டும்.

அதே நேரத்தில் பேரூராட்சிகளின் பல சாலைகளைப் பொதுப் பணித்துறை, ஹைவேஸ் எடுக்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானம் போட்டுக் கொடுத்தும்கூட இன்னும் அதில் காலதாமதமாகி எடுக்கப்படாமல் இருக்கிறது. அவற்றையும் உடனடியாக எடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1975 ஏப்ரல் 5] [திரு. கெ. எ. வகாப்]

ஏழைகளின் வாகனமாக சைக்கிள் இருக்கிறது. அதற்கான வரியை எடுக்கலாம் என்று நகராட்சிகளுக்கு உரிமை கொடுத்திருக்கிறார்கள். பொருளாதார வசதி உள்ள பேரூராட்சிகள் கேட்டாலும்கூட வரி விலக்கு அளிக்க வேண்டிய உத்தரவைக் கொடுக்க வேண்டும். பேரூராட்சிகள் அப்படிப்பட்ட வரிவிலக்கைக் கொடுத்தால் அதனால் அதிக நஷ்டம் வராது. ஆயிரம், இரண்டாயிரம்தான் வரும். அதனால் மக்களுக்கும், அங்கத்தினர்களுக்கும், தலைவர்களுக்கும் பிடிப்பு ஏற்படும், எனவே இதைச செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்றையதினம் ரெவின்யூ டிபார்ட்மெண்டில் எல்லாவிதமான வேலைகளும் குவிக்கப்பட்டிருக்கின்றன. தாசில்தார் போன்றவர்கள் பட்டாக்கள் தரும் நேரத்தில் ஊராட்சித் தலைவர்களைக் கலந்துகொண்டு அவர்களே கொடுத்து விடுகிறார்கள். அந்த முறையில் இல்லாமல் கவுன்சிலில் வைத்து அவர்கள் சொல்லும் அந்தத் தீர்மானங்களின்படி செய்ய வேண்டும்.

பேரூராட்சி, ஊராட்சிகளின் எல்லைகளில் செல்லும் பஸ்களின் மூலம் வரும் வருமானத்தில் ஒரு பகுதியை அவர்களுக்குக் கொடுத்தால் அவைகளின் வளர்ச்சிக்குச் சாதகமாக இருக்கும். இப்பொழுது தியேட்டர்களில் வரும் வரியில் பங்கு கொடுப்பதைப் போல இதையும் கொடுத்தால் இன்னும் பேரூராட்சிகளின் நிதி வசதி பெருகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : மாண்புமிகு துணைச் சபாநாயகரவர்களே, ஊரக வளர்ச்சி, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களிலே இருப்பதைவிடச் சிறந்த முறையிலே நடந்து வருகின்றது என்பது அகில இந்தியாவிலேயும் பல மாநிலங்களிலே சுற்றிப் பார்த்தவர்களுக்கு நன்கு புரியும். அந்த அளவிற்குச் சிறந்த முறையிலே பஞ்சாயத்து நிர்வாகத்தை--ஒன்றியங்களுடைய அமைப்புகளை ஏற்படுத்தி சிறந்த முறையிலே செயல்பட்டு வருகிறோம். விரைவிலே தேர்தல் வரக்கூடிய சூழ்நிலையிருப்பதால், பஞ்சாயத்து யூனியன்கள் 374 என்று இருப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. சில பஞ்சாயத்து யூனியன்களில் 50, 60 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கியிருப்பதால் சரிவர அவை செயல்பட முடியவில்லை. ஆகவே, அதைப்பற்றி

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)]

மத்திய அரசாங்கத்தோடு கலந்தாலோசித்து இன்னும் அதிகப்படுத்தலாமா, 400, 450 என்று ஆக்கலாமா உயர்த்தலாமா என்பதை அரசு ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடுகூட, பக்கத்திலே உள்ள ஆந்திர மாநிலத்திலே ஏற்பட்டிருப்பதைப்போல பஞ்சாயத்து யூனியன் சேர்மன்கள் கூடப் பொதுமக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு நிலையைத் தமிழ்நாட்டிலேயும் உண்டாக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்களெல்லாம் சொன்னார்கள். ஆசிரியர்கள் விஷயத்திலே அரசாங்கம் ஒரு இறுதி முடிவை இன்னும் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். கொடைக் கானலிலேகூட ஹை லெவல் கான்ஃபரன்ஸ் என்ற முறையிலே, நம்முடைய நாவலர் அவர்கள் அப்பொழுது அமைச்சராக இருந்தார்கள், இரண்டாண்டுகளுக்கு முன்பு, எங்கள் எல்லோரையும் அழைத்துப் பேசி முடிவெடுத்தார்கள். அந்த முடிவுகளில் சிலவற்றை அரசாங்கம் அமல்படுத்தியிருக்கிறார்கள். ஆர்.டி.ஓ. விடத்தில் இருந்ததை, தனியாக இந்த வளர்ச்சிக் கென்று டெவலப்மெண்ட் ஆபீசரை ஏற்பாடு செய்திருக் கிறார்கள். இப்பொழுதுகூட டெவலப்மென்ட் ஆபீசர்கள் கலெக்டருக்கு இருக்கும் நேர்முக உதவியாளர்கள் மூலம்தான் கலெக்டரோடு தொடர்புகொள்ள வேண்டியிருக்கிறது. அவரும் கெஜட்டெட் ஆபீசர், ஆர்.டி.ஓ.வும் அப்படி இருப்பதால் நேரடியாக டெவலப்மென்ட் ஆபீசர் கலெக்டரோடு தொடர்பு கொள்ளும்படி செய்யலாம், இவைகளில் பிளானிங் பி.ஏ. தேவையில்லை என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அந்தச் சமயத்திலே சொன்னார்கள், ஆசிரியர்கள் சம்பந்த மாகவும் அங்கே உயர் மட்டக் குழுவிலே முடிவெடுத்தார்கள். பஞ்சாயத்து யூனியன்களில் சேர்மன்களின் கட்டுப்பாட்டில் ஆசிரியர்களை வைக்க வேண்டுமென்ற கருத்தை இரண்டு வருஷமாக நான் பேசும்பொழுது சொன்னேன். பொதுமக்களின் பணம் ஏறத்தாழ 50 கோடி ரூபாய்க்குமேல் செலவு செய்யப் படுகிறது. அதில் பெரும்பகுதியைப் பஞ்சாயத்து யூனியர்களின் மூலமாகத்தான் செய்கிறோம். அப்படி மக்களின் பணம்

[1975 ஏப்ரல் 5

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)]

செலவு செய்யப்படும் நேரத்தில் அந்த நல்ல காரியத்தில் ஒழுங்காக, முழுப்பலனும் கிடைக்கும்படி பெருமளவில் செலவு செய்யப்படுகிறதா என்று பார்த்தால் குறைபாடு இருக்கத்தான் செய்கிறது.

அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று தான், ஏற்கனவே பஞ்சாயத்து யூனியன் சேர்மன்கள் மூலம் அங்கே முடிவு செய்தது மட்டுமல்லாமல், மாநிலப் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சங்கமும் பல தடவைகள் கேட்டிருக்கிறது. மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும், நாவலர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் ஒரு சமயத்திலே பேசினார்கள், நானும் உடன் இருந்தேன். அப்போது ஒரு முடிவெடுத்தார்கள். அந்த முடிவு, கமிஷனர்கள் ஆசிரியர்களை மாற்றலாம், இப்பொழுது உள்ள மாதிரி அட்ஹாக் கமிட்டி, டி.இ.ஓ. வைக் கேட்க வேண்டியதில்லை. பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள 300 ஆசிரியர் களில் சிலபேர் சரியாக வேலை செய்யவில்லையென்றால் அவர்களை வேறு கிராமங்களுக்கு மாற்றினால் அவர்கள் சரியாக வேலை செய்வார்கள், நல்லமுறையில் சொல்லிக் கொடுப்பார்கள் என்று தெரிந்தால் கமிஷனரே மாற்றலாம் in Consultation with the Chairman) என்று போடலாம் என்று நம்முடைய முதல்வரவர்களும் அன்றையதினம் அதை ஒரு 'இன்ஃபார்மலாக' முடிவு செய்தார்கள்.

ஆனால் அது இவ்வளவு காலமாகியும் வரவில்லையே, ஏன் காலதாமதமாகிறது? அதை விரைவில் செய்தால் நம்முடைய பணத்தை முறைப்படி செலவு செய்து நல்ல கல்வியைக் கொடுக்க முடியுமே என்ற ஆலோசனையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். 14,000 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. பஞ்சாயத்துக்களில் வரி வசூல் செய்வது கிராம மணியக்காரர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் இருக்கிறது. அரசாங்கம் 90 ரூபாய் ஏறத்தாழ ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் கொடுக்கிறார்கள், ஆவரேஜாகக் கொடுக்கிறார்கள். ஆகவே, நான் சொல்கிறேன். ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு கிளார்க் என்று போடுங்கள். அப்படிப் போட வேண்டுமென்று முயற்சித்தால் 14,000

கிளார்க்குகளை அதில் உண்டாக்கலாம், அத்தகைய எம்ப்ளாய்மெண்ட் ஆப்பர்சுனிட்டிஸ் இருக்கிறது. அப்படி நேரடியாகப் போட்டால், எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை, அந்தந்தப் பஞ்சாயத்து யூனியனின் எல்லைக்குள்ளேயே இருப்பவர்களை ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒவ்வொரு கிளார்க் என்று நியமனம் செய்யலாம். இப்பொழுது அரசாங்கம் கொடுக்கும் பணத்தைவிட, அதற்காக ஒரு காசுகூட மேலே நாங்கள் கேட்கவில்லை. மொத்த பணத்திலேயிருந்து பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள அந்தந்தப் பஞ்சாயத்துக்களே பகிர்ந்துகொண்டு செய்து கொள்கிறோம், அரசாங்கத்திலிருந்து வேறு எந்தவிதமான உதவியையும் கேட்கவில்லை. இதற்கு அனுமதி கொடுப்பதில் என்ன இடைஞ்சல் இருக்கிறது. அருமை நண்பர் அன்பில் அவர்கள் இந்தத் துறை அமைச்சராக இருந்த பொழுது பத்திரிகையில் தெரிவித்தார்கள். 14,00 கிளார்க்குகளைப் போடுவதைப்பற்றிப் பரிசீலனையில் இருக்கிறது என்று. இன்னும் அதற்கு முடிவு வராமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. விரைவில் அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன்களில் நிறைய ரோடுகள் இருக்கின்றன. பராமரிப்பு வேலைகள், ஏரிகளைப் பராமரிக்கின்ற வேலைகள் இருக்கின்றன. இப்பொழுது ஹைவேஸிலுள்ள அசிஸ்டண்ட் எஞ்சினியர் (ரூரல் ரோட் ஒர்க்ஸ்) இருக்கிறார்கள். அவர்கள் அரசாங்க ரோடுகளையும், பஞ்சாயத்து ரோடுகளையும் கவனிக்க வேண்டும். பஞ்சாயத்துக் கட்டடங்களையும் செக்மெஷர் செய்ய வேண்டும். ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு அசிஸ்டண்ட் எஞ்சினியர் (ரூரல் ரோட் ஒர்க்ஸ்) என்ற முறையிலே போட்டால் வேலைகள் நல்லமுறையிலே நடப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிரைமரி ஹெல்த் செண்டர் பஞ்சாயத்து யூனியனில் இருக்கிறது என்றாலும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கும் பிரைமரி ஹெல்த் செண்டருக்கும் என்ன தொடர்பு இருக்கிறது. அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களுக்கு வருகிறார்களா டாக்டர்கள்? ஏதோ செய்கிறார்கள்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)]

அதேபோலத்தான் கூட்டுறவுத் துறையிலே உள்ளவர்களும் இருக்கிறார்கள். அவர்களோடு என்ன தொடர்பு இருக்கிறது? சம்பளம் வாங்கிப் போகத்தான் வருகிறோம் என்று சொல்கிறார்கள். அங்கே சரியான கோ-ஆர்டினேஷன் இல்லை. கூட்டுறவுத் துறையும், மருத்துவத் துறையும் அப்படியிருக்கிறது. அப்படியில்லாமல் அவர்கள் பஞ்சாயத்து யூனியன்களில் கூட்டத்தில் கலந்துகொண்டு, அந்தப் பகுதியில் என்ன வேலை செய்கிறார்கள்? யூனியன் ஜெனரல் கவுன்சில் என்ன விரும்புகிறதோ அவைகளை அமல்படுத்த, நேரடியாக அந்த ஆணையாளர்களின் பொறுப்பின்கீழ் இவர்கள் வர வேண்டுமென்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில் ஏற்கனவே சொன்னேன். மீட்டர் பொருத்துவதைப்பற்றி. நிறைய விளக்குகளைப் போட்டிருக்கிறோம். ஆனால் அவை எரிந்தாலும், எரியவில்லை என்றாலும் கட்டணம் கொடுக்கும் நிலை ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. மீட்டர் பொருத்த வேண்டும், மீட்டர் பொருத்த வேண்டும் என்று அடிக்கடிச் சொல்லிக்கொண்டிருக்கிறோமே தவிர இன்னும் மீட்டர் பொருத்தப்படவில்லை.

(முற்பகல் 11-00)

அதற்காக மின்சார வாரியத்தைக் கேட்டால் அவர்களைக் கேள், இவர்களைக் கேள் என்று பிங் பாங் விளையாடுகிறார்களே தவிர, ஒழுங்கான முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. மீட்டர் கிடைக்கவில்லை என்றால் பஞ்சாயத்துக்களே மீட்டர்களை வாங்கிக் கொடுத்துவிட வேண்டுமென்று உத்தரவு போடுங்களேன். ஒரு மீட்டர் 40 ரூபாய்; 3 மீட்டர்கள் வைக்க வேண்டியிருக்கும். 120 ரூபாய் கொடுத்து வாங்கிக் கொடுத்து விடுகிறோம். டெஸ்ட் பண்ணி வைத்து விடுங்கள். எரியாத விளக்குகளுக்கு எதற்காகப் பஞ்சாயத்திலிருந்து பணம் கொடுக்கவேண்டும்? இதிலே சீக்கிரமாக ஒரு முடிவு செய்ய வேண்டும்.

ஃபேமிலி பிளானிங் ஒர்க்ஸ், ஸ்மால் சேவிங்ஸ் ஒர்க்ஸ் இரண்டும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அண்ணா கிராமப் பஞ்சாயத்து கமிஷனரை எப்போது கேட்டாலும் கலெக்டர் கூப்பிட்டார், அவர் கூப்பிட்டார், இவர் கூப்பிட்டார் என்று இந்த வேலைகளிலேதான்

[1975 ஏப்ரல் 5

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)]

ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். கிராமப் பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகளைச் சரியாகச் செய்ய முடிவதில்லை. ஃபாமிலி பிளானிங் வேலைக்கென்று தனியாகவாவது ஒரு கெசடட் ஆபீசரைப் போட்டுக் கொள்ளுங்கள். ஸ்மால் சேவிங்ஸ் கலெக்ஷனை ஆர்.ஐ.-யிடம் கொடுங்கள் அல்லது ஏ.சி.டி.ஓ.-விடம் கொடுங்கள். நல்ல கறக்கிற இடம். பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களிடம் சொல்லி நாலு ஆளைப் பிடித்துக் கொண்டு வா என்றால் அவர் என்ன செய்வது?

இந்தியாவிலேயே நம்முடைய தமிழகத்தில்தான் பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையில் நடக்கின்றன. இன்னும் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்று சொன்னால் ஸ்மால் சேவிங்ஸ் கலெக்ஷன், ஃபாமிலி பிளானிங் வேலை இரண்டையும் பஞ்சாயத்து யூனியன் ஆணையர் பொறுப்பில் ஒப்படைக்கக்கூடாது. அவரைப் பஞ்சாயத்து யூனியன் அபிவிருத்தி வேலைகளை மட்டும் செய்ய உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு ஜீப் பசுமாடு மாதிரிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. புல்போட நாங்கள்—கறப்பது கலெக்டர், தாசில்தார்; ஆர்.டி.ஓ. தான் பயன்படுத்திக் கொண்டிருப்பார். குழந்தைபெற பெண் நம் வீட்டுக்கு வந்து அனுப்புவதுமாதிரி. இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் எங்களுக்கு ஜீப்பே வேண்டாம். நாங்கள் நடந்து போகிறோம், சைக்கிளில் போகிறோம். மோட்டார் சைக்கிளில் போகிறோம் அல்லது மாட்டு வண்டியில் போகிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு உறுப்பினர் பஞ்சாயத்து யூனியனுக்கு ஜீப் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் தலையாட்டுகிறார்கள். எங்களுக்குப் பயமாக இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஜீப் நிச்சயமாகத் தேவை. அதுவும் வறட்சிப் பணிகள் நடைபெறும் சமயத்தில் ஜீப் நிச்சயமாகத் தேவை. தயவுசெய்து அதை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): முதலமைச்சர் அவர்கள் தலையாட்டுகிறார்கள் என்றால் பஞ்சாயத்து யூனியன் ஜீப்பை வேறு வேலைகளுக்குப் பயன்படுத்த அனுமதிக்கப்படாது,

பஞ்சாயத்து யூனியன் வேலைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதற்காகத் தலையாட்டுகிறார்கள் என்று ஏன் நினைக்கக் கூடாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஜீப் பசுமாடு மாதிரி இருக்கிறது என்று சொன்னார்கள். இனிமேல் காளைமாடு மாதிரி வழங்க ஏற்பாடு செய்யலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): பஞ்சாயத்து யூனியன் மெயின்டைன் பண்ணுகிற ஜீப் பஞ்சாயத்து யூனியன் வேலைகளுக்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். மற்ற வேலைகளுக்குப் பயன்படுத்துவது என்றால் எங்களுக்கு ஜீப் வேண்டாம். ஜீப் இருக்க வேண்டுமென்ற ஆசை எங்களுக்கு இல்லை.

மிட்-டே மீல்ஸ் ஸ்கீம் சிறந்த முறையில் செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சை போன்ற நகரங்களில் நடக்கிறது. கோதுமையை வெளிநாட்டிலிருந்து கொடுக்கிறார்கள். அதை ஸ்டோர் பண்ணி வைப்பதால் நிறைய புழு இருக்கிறது. புழுவை எடுக்க மூட்டைக்கு ஒரு ரூபாய் புடைப்பதற்காகக் கொடுத்தாலும் புடைப்பதில்லை. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு ஒரு நாள் அரிசி, ஒரு நாள் கோதுமை, ஆல்டர்நேட்டிவ் ஆகக் கோதுமை கொடுக்கிற அன்று "அம்மா, என்னுடைய சாப்பாட்டில் இன்று 7 புழு இருந்தது, 3 புழு இருந்தது, 5 புழு இருந்தது" என்று பிள்ளைகள் சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. முதலமைச்சருக்கு நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். டி.இ.ஓ. டெபுடி இன்ஸ்பெக்டரிடம் இந்தப் பொறுப்பு இருப்பதைவிட பஞ்சாயத்து யூனியன்களிடமே கொடுத்துவிட்டால் நாங்கள் அதிகமாகச் செலவு கூடச் செய்ய முடியும்.

அண்ணா கிராமத்தைப் பொறுத்தவரை குறைகள் அதிகம் கிடையாது. அங்கே 40 லட்சம் ரூபாய் செலவு செய்து மாண்புமிகு கந்தப்பன் அவர்கள் குடிநீர் வாரியத்தின் மூலமாகச் சிறந்த முறையில் மாநிலத்திலே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு எல்லா இடங்களிலும் குடிநீர் வசதி செய்தாகிவிட்டது. மற்ற வசதிகளும் செய்தாகிவிட்டது. நான் கேட்பது மற்றப் பஞ்சாயத்துக்களுக்காக.

வில்லேஜ் ஓர்க்சுக்காக 39,000 ரூபாய் கொடுக்கிறார்கள். குடிதண்ணீர்த் திட்டத்திற்காக 29,000 ரூபாய்; மீதி இருப்பது கிணறு வெட்ட. இந்த அளவில் சென்றால் எல்லாக் கிராமங்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி நெல்லிக்குப்பம்] 1975 ஏப்ரல் 5]

களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க 40, 50 வருஷங்கள் ஆகும். ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் இரண்டு லட்சம் ரூபாயாவது கொடுக்கவேண்டும்.

ஏற்கனவே, பஞ்சாயத்து யூனியன் சேர்மன்கள் எல்லாம் சேர்ந்து முடிவு செய்தோம். ரூரல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் வைக்க வேண்டும். ரோடு போடுவதுகூட அவசியமில்லை; ஆனால் பள்ளிக்கூடம் கட்டவேண்டும், பிள்ளைகள் படிக்க அதற்கு 13 கோடி ரூபாய் ஆகிறது என்று எஸ்டிமேட் போட்டார்கள். குடிதண்ணீர் வசதி எல்லாக் கிராமங்களுக்கும் செய்யவேண்டு மென்றால் 31 கோடி ரூபாய் ஆகும். ஏறக்குறைய 44 கோடி ரூபாய் தமிழகத்தில் இருக்கும் 374 பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பள்ளிக்கூடம் கட்டவும், குடிதண்ணீர் வசதி செய்யவும் கொடுக்க வேண்டும். மெட்ராசுக்குத் தண்ணீர் கொண்டுவர வீராணம் பிராஜக்டுக்கே 40 கோடி ரூபாய் வரும்போல் இருக்கிறது. அந்த அளவுக்குத் தொகை செலவழித்தால் தமிழகம் பூராவமே அந்த வேலை முடிந்து விடும். ரூரல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் வையுங்கள். அதன் மூலமாக ஃபினான்ஷியல் இன்ஸ்டிட்யூஷன்ஸ், பாங்குகளில் இருந்து கடனுவது வாங்கிக் கொடுங்கள். அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் திருப்பிக் கட்டட்டும்.

1,500 ஜனத்தொகை உள்ள ஊர்களுக்கெல்லாம் ரோடு போடுகிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். சில கிராமங்கள் விடப்பட்டிருக்கின்றன. திரு. குமாரசாமி, எம்.எல்.ஏ. அவர்கள் தொகுதியில் 3,050 ஜனத் தொகையுள்ள புதுப்பாளையம் விடப்பட்டிருக்கிறது. ரெவின்யூ அபிஷியல்ஸ் வழக்கம்போல் 1,050 ஜனத்தொகை என்று கொடுத்து விட்டார்களோ என்னவோ தெரியவில்லை. மந்திரியிடம் சொன்ன பிறகு பரிசீலனை பண்ணுவதாகச் சொன்னார்கள்.

டவுன் பஞ்சாயத்துக்களுக்கு எல்லாம் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் ரெகமென்டேஷன் வந்தது. 40,000 ரூபாய் 50,000 ரூபாய் வருமானம் வரக்கூடிய பஞ்சாயத்துக்களை மறுபடியும் வில்லேஜ் பஞ்சாயத்துக்களாக மாற்றிவிடலாம், டவுன் பஞ்சாயத்துக்களாக இருந்தால் அட்மினிஸ்ட்ரேட்டிவ் எக்ஸ்பென்ஸஸே 25,000 ரூ., 30,000 ரூ. ஆகிறது. அந்த நிலையில் எப்படி டெவலப்மென்ட் ஆக்டிவிடிஸ் நடக்கும்? ஏ.ஆர்.சி. ரெகமன்டேஷனை ஃபினான்ஸ் செகரடரி ஒத்துக் கொண்டார்கள்.

1975 ஏப்ரல் 5]

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)]

7,000 ரூபாய் டாக்ஸ் போடுகிறார்கள் என்றால் 7,000 ரூபாய் மாச்சிங் கிரான்ட் வரவேண்டும். அப்படி டவுன் பஞ்சாயத்துக்களுக்கும் மாச்சிங் கிரான்ட் கொடுக்கிற முடிவை அரசாங்கம் அறிவித்தால் டவுன் பஞ்சாயத்துக்களாகவே இருக்கலாம். இது சம்பந்தமான முடிவுகளை அமைச்சர் அவர்கள் உடனடியாக எடுக்க வேண்டும்.

இதிலே ஒரு பெரிய நெருக்கடி. ஒரே மந்திரி தொடர்ந்து இதைப் பார்த்து வந்தால் ஏதாவது செய்வார்கள். 'டக் டக்' என்று ஒரு மந்திரியிடமிருந்து இன்னொரு மந்திரிக்கு இதை மாற்றிக் கொண்டே இருக்கிறார்கள். நாவலர் பார்த்து வந்தார்; அதற்குப் பிறகு அன்பில் அண்ணைச்சி அவர்கள் பார்த்து வந்தார்கள். அன்பில் அண்ணைச்சி செய்கிறேன் என்று சொன்னார்கள். உத்தரவு போடுகிறேன் என்று சொன்னார்கள். அதற்குள் இது அவர் கையை விட்டுப் போய்விட்டது. இந்த மந்திரியாவது இது சம்பந்தமாகக் கலந்து பேசி நல்ல முடிவுகளை எடுக்கவேண்டும். தமிழகத்தில் இருக்கக்கூடிய கிராமராஜ்யம், காந்தி கண்ட கிராம ராஜ்யம் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது என்று மீண்டும் சொல்லி இந்த அளவோடு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்திலே 12,632 ஊராட்சிகள், 591 பேரூராட்சிகள், 12 நகரியங்கள் செயல்பட்டு வருகின்றன. 374 ஊராட்சி ஒன்றியங்கள் நம்முடைய மாநிலத்தினுடைய முன்னேற்றத்திற்காகப் பல்வேறு துறைகளுடைய பொறுப்பை ஏற்று வேலை செய்து கொண்டிருக்கின்றன. இம்மாதிரி வேலை செய்கிறபோது உண்மையிலேயே கிராமப் புறத்திலே அபிவிருத்தி ஏற்பட்டு கிராமங்கள் செழிப்பாக இருக்கவேண்டுமென்று சொன்னால் இந்த ஊராட்சி ஒன்றியங்களுடைய வேலைகள்தான் அதற்கு ஆதாரமாக அமைகின்றன. அதற்குரிய முறையிலே ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரங்கள் நிறைய வழங்கப்பட வேண்டும். அதிகாரங்கள்

[திரு. ஆ. கு. சுப்பையா]

நிறைய வழங்கப்படுவதன் மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கு தடை இல்லாமல் அபிவிருத்தி வேலைகளில் வேகமாகச் செயல்பட முடியும் என்று பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிர்வாக அமைப்புப் புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது. நீண்ட நாட்களாகக் கேட்டு வரப்பட்ட ஒரு கோரிக்கையை தமிழக அரசு ஏற்று இன்றையதினம் உள்ளாட்சித் துறையை அதில் சம்பந்தப்பட்ட நிர்வாகங்கள் தனியாக இயங்கக் கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது பாராட்டக்கூடிய ஒன்றாகும். அதேபோல் மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் அதிகாரியாக கலெக்டர் அவர்கள் இருக்கிறார். அதைப்பற்றிப் பல ஆண்டுகளாக இந்தச் சபையில் அனுபவம் பெற்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதில் பெரிய தவறு எதுவும் வந்துவிடப்போவதில்லை. கலெக்டர் வேண்டுமென்றால் செயலாளர் போல் இருக்கலாம். முன்பு ஜில்லா போர்டுகள் எப்படி இயங்கி வந்தனவோ அதேபோல் அதற்கு அதிகாரப் பற்றற்ற ஒருவர்தான் தலைவராக இருப்பது மிகப் பொருத்தமாக இருக்கமுடியும்.

இன்றையதினம் இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலத்திலும் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவன் சேர்மனாக வருவதில்லை. வேறு மாநிலங்களில் இருக்கவே இருக்காது என்று நினைக்கிறேன். தமிழ்நாட்டில் ஒரே ஒருவர்தான் அத்திபூத்தாற் போல் என்னுடைய தொகுதியில் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அதேபோல் மற்ற இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இதற்கான வாய்ப்பு வசதிகள் அளிப்பதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியமில்லை. பஞ்சாயத்துச் சட்டத்தை திருத்தினால் போதும். திருத்தலாம். பஞ்சாயத்துச் சட்டம் திருத்தப்பட்டு எங்கெங்கெல்லாம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஒரு யூனியன் வீதம் ஒதுக்கி அதில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒருவர் தான் சேர்மனாக வரமுடியும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்த இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் பஞ்சாயத்து யூனியனில், ஆணையரின்கீழ் பல்வேறு இலாகாக்களைச் சேர்ந்தவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். விஸ்தரிப்பு அதிகாரிகள் அனைவரும் பஞ்சாயத்து யூனியனுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்க

[திரு. ஆ. கு. சுப்பையா]

வேண்டும். அந்த நிலை இன்றையதினம் இல்லை. அவர்கள் பல்வேறு நிர்வாகங்களுக்குக் கட்டுப்பட்டிருப்பதால் அவர்கள் ஆணையர் சொல்வதைக் கேட்பதில்லை, அலட்சியப்படுத்துகிறார்கள். அதையும் அரசாங்கம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மற்றொன்று. சாலைகள், கட்டடங்கள் கட்டுவதற்குரிய மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு பஞ்சாயத்து யூனியனில் ஒரு யூ.இ. இருக்கிறார். அவர் மதிப்பீடு தயார் செய்து ஏ.இ. அனுமதி பெற்று டி.இ.-க்குப் போய் இந்த வேலைகள் முடிந்து கண்கரன்ஸ் வழங்க ஒரு ஆண்டுக் காலமாகிறது. அப்படிக் காலம் கடத்திக் கொண்டு போவதைத் தவிர்த்து இரண்டு மாதங்களுக்குள் கண்கரன்ஸ் வழங்க வேண்டும் என்று செய்தால்தான் அபிவிருத்தி வேலைகள் தடங்கல் இல்லாமல் நடக்கமுடியும்.

ஊர் நல உதவியாளர் என்று சொல்பவர்கள் சகல வேலைகளையும் அவர்களே பார்க்கிறார்கள். கிராம சேவக்ஸ் என்பவர்களின் பெயர் மாற்றம் இது. ஊர் நல உதவியாளர் என்று பெயரை மாற்றியிருக்கிறார்கள். அவர்கள் இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். நமது அமைச்சர் அவர்கள் மேலும் 427 பேர்களை முதல் நிலைக்கு மாற்றப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். இம்மாதிரி அறிவிப்பது மட்டுமல்ல. வேலை கிடைக்காத காரணத்தால் பி.ஏ. படித்தவர்கள் கூட ஊர் நல உதவியாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கோரக் கூடிய சம்பள உயர்வு, பதவி உயர்வு, படி உயர்வு போன்றவற்றை அரசு நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள்தான் கிராம மக்களோடு ஜீவியத்தொடர்பு வைத்துக் கொண்டிருப்பவர்கள். அரசாங்கம் என்னென்ன திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று விரும்புகிறதோ அந்தத் திட்டங்களை எல்லாம் மக்களிடம் எடுத்துக் கூறிக் கிராம மக்களோடு ஜீவியத் தொடர்புகொண்டு பணியாற்றி வருகிறார்கள். எனவே, அவர்களது கோரிக்கைகளை அரசு ஏற்று நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பஞ்சாயத்து ஒன்றியங்களை எடுத்துக் கொண்டால் பல பெரிய பஞ்சாயத்து ஒன்றியங்கள் இருக்கின்றன. 60, 70 பஞ்சாயத்துக்களைக் கொண்ட யூனியன்கள்கூட இருக்கின்றன. ஆகவே முப்பது பஞ்சாயத்துக்களைக் கொண்டதாக ஒரு பஞ்சாயத்து யூனியன் அமைந்தால்தான் வேலைகளைத் துரிதமாக நிறைவேற்ற முடியும்.

[ஆ. கு. சுப்பையா]

அதேபோல் பெரிய பெரிய பஞ்சாயத்துக்களும் இருக்கின்றன. நமது சட்டமன்றத்தில்கூட ஒரு உறுப்பினர் குறிப்பிட்டார். நாலாயிரம், ஐயாயிரம் மக்கள் தொகையைக் கொண்ட பஞ்சாயத்துக்கள்கூட இருக்கின்றன, எனவே அப்படிப்பட்ட பெரிய பஞ்சாயத்துக்களேயும் பிரிக்கவேண்டும். அப்படிப் பிரிக்காததற்குக் காரணம் சொல்லப்படுகிறது. வாக்காளர்கள் பட்டியல்கள் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள், மத்திய சர்க்காரி லிருந்து தாக்கீது வந்திருக்கிறது, அதனால் பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் இவை பிரிக்கப்படுவது தள்ளி வைக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இந்தக் காரணங்கள் பொருத்தமான காரணங்கள் அல்ல. ஆகவே பெரிய பஞ்சாயத்து யூனியன்களை இரண்டாகவும், பெரிய பஞ்சாயத்துக்களை இரண்டாகவும் பிரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட வளர்ச்சி மன்றங்களைத் திருத்தியமைக்க வேண்டு மென்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. அதை கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுவிட்டது. தர்மபுரி, தஞ்சை மாவட்டங் களில் அந்தக் கழகத்தை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். விரைவில் அந்தக் கழகங்களை ஆரம்பிக்க உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கழகங்களின் தலைவர்களாக உத்தியோகப் பற்றற்றவர்கள் இருக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட சிப்பந்திகள் அத்தனை பேர்களும் குடும்பக் கட்டுப்பாடு வேலைகளில் அதிகமாக அக்கறை செலுத்துகிறார்கள். அதனால் இதர அபிவிருத்தி வேலைகள் தடைபடுகின்றன. எனவே, குடும்பக் கட்டுப்பாடு வேலைகள் என்று சொல்கிறபோது அதை சுகாதார இலாகாவின் பொறுப்பில் விடவேண்டும். அவர்கள் இப்போது பொறுப்பற்றவர் களாக இருக்கிறார்கள். ஆள்களைத் தயார் செய்து கொண்டு வந்து அறுவைச் சிகிச்சைக்கு அனுப்புகிற இடங்களில்கூட, இவர்கள் ஆட்களைக் கொண்டு வந்து கொடுத்தபோதிலும் அவர்கள் அலட்சியமாகப் பணியாற்றக்கூடிய நிலைதான் இருக்கிறது. அவர்களுக்கு அந்த உற்சாகம் வருவதில்லை.

[ஆ. கு. சுப்பையா]

ஒவ்வொரு யூனியனில் அல்லது ஒவ்வொரு தாலுகாவில் இவ்வளவு பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும், அல்லது குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமல்படுத்தவேண்டும் என்று பொதுச் சுகாதாரத் துறையில் இருப்பவர்களை ஈடுபடுத்துவதன் மூலம்தான் அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் அக்கறை கொண்டு செயல்பட வகைசெய்யமுடியும்.

பின்னர், செஸ் விதிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக விதிக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். ரூபாய்க்கு ரூபாய் 2.50 வரையில் விதிக்கலாம் என்ற உத்தரவைச் சர்க்கார் போட்டிருக்கிறார்கள். ரூ. 2.50 வரையில் விதிக்கலாம் என்று சொல்வது காரணமாக என்ன ஆகிறது என்றால் சில பஞ்சாயத்து யூனியன்களில் அப்படி விதிக்கிறார்கள், பல பஞ்சாயத்து யூனியன்களில் 75 பைசாவிற்கு மேல் விதிப்பதில்லை. சகட்டுமேனிக்கு விதிக்கவேண்டும். இல்லையென்றால், ஒரு யூனியனில் 75 பைசா என்று போடுகிறார்கள், சில இடங்களில் ஒரு ரூபாய் என்று விதிக்கிறார்கள், சில யூனியன்களில் ரூ. 2.50 என்று போடுகிறார்கள். அது சரியல்ல. அதையும் அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன் நிர்வாகிகளுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கவேண்டும். நமது ராஜ்யத்தில் உள்ள பள்ளிக்கூடங்களை எடுத்துக்கொண்டால் 22,587 பள்ளிக்கூடங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இவ்வளவு பள்ளிகளை யூனியன் அளவில் நிர்வகித்து வருகிறார்கள். அவர்களுக்குப் பள்ளிக்கூட ஆசிரியர் தவறு செய்தால் அதைப்பற்றிக் கேட்பதற்கு யூனியன் நிர்வாகத்தினருக்கு அதிகாரம் இல்லை. இருந்த அதிகாரத்தைப் பறித்து விட்டார்கள். ஆசிரியர்கள் என்ன தவறு செய்தாலும் அதைப் பற்றிக் கேட்பதற்கு யூனியன் சேர்மனுக்கோ அல்லது கமிஷனருக்கோ அதிகாரம் இல்லை. ஆசிரியர்களை இவர்கள் நியமனம் செய்கிறார்கள். அப்படி நியமனம் செய்யக்கூடிய ஒரு ஸ்தாபனத்திற்கு நல்லபடியாக வேலை செய்யவேண்டுமென்று சொல்ல அல்லது தவறு செய்தால் கண்டிக்க உரிமை இல்லாத ஒரு சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அந்நிலை மாற்றப்படவேண்டும்.

1975 ஏப்ரல் 5]

[ஆ. கு. சுப்பையா]

அதேபோல் மெட்டர்னிட்டி சென்டர்களில் வேலை பார்க்கும் ஆயாக்கள், தாதிகள் இவர்கள் தவறு செய்தால் அவர்களைக் கண்டிக்க சேர்மனுக்கோ அல்லது ஆணையாளருக்கோ அதிகாரம் இல்லை. அதை அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்து இப்போது எடுத்து விட்டதாகச் சொல்கிறார்கள். டி.டி.ஓ., பி.டி.ஓ., சேர்மன் மூன்று பேர்களும் உட்கார்ந்து பேசி ஆறு மாதங்களுக்குப் பிறகு நடவடிக்கை எடுப்பது என்றால் செய்யக்கூடிய வேலைகளில் தாமதம் ஏற்படும். எனவே யூனியன் நிர்வாகத்தினருக்கு இருக்கிற அதிகாரங்களைப் பறிப்பது நல்லதல்ல என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பூ. எட்டியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த சமுதாய வளர்ச்சித் திட்ட மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சமுதாய வளர்ச்சித் திட்ட மானியத்தைக் கொண்டு வந்து இருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்தனை ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு இதிலே பல புரட்சிகரமான திட்டங்களைப் புகுத்தியிருப்பது கிராம அடித்தளத்தில் இருக்கும் மக்களெல்லாம் வரவேற்கத் தக்க வகையில் அமைந்து இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். சமீபத்தில், எங்கும் என்றும் காணாத அளவுக்கு வறட்சிப் பணிகளை ஒன்றியங்கள் மேற்கொண்டு செய்து வருகின்றன. அந்தப் பணிகளைச் செய்வதற்கு ஒன்றியங்களுக்கு எவ்வளவோ இடையூறுகள் இருக்கின்றன.

இதிலே உடனடியாகக் கவனிக்கப்படவேண்டிய பிரச்னை குடிநீர் வசதி. பல கிராமங்களில் மேல்நிலைத் தொட்டி கட்டி இருக்கிறார்கள். ஆனால் தெருக்களில் பைப் வசதி இல்லாத காரணத்தால் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி எங்கெங்கே மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு இருக்கின்றதோ அங்கேயெல்லாம் பைப் வசதி செய்து தரப் படுவது, வறட்சி நிவாரணப் பணியில் முதலிடமாக வைத்துச்
படுவது, வறட்சி நிவாரணப் பணியில் முதலிடமாக வைத்துச்
செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பூ. எட்டியப்பன்]

மக்கள் குடிப்பதற்காக ஒரு மைல், இரண்டு மைல்கள் என்று சென்று தண்ணீர் கொண்டு வந்தாலும், கால்நடைகளுக்குத் தண்ணீர் இல்லாத அவல நிலை ஏற்பட்டு இருக்கிறது. பழைய குளங்களை ஆழப்படுத்தவேண்டும். ஏரிகளில் தண்ணீர் வரும் வசதியுள்ள இடங்களில், ஏரிகளில் கிணறு வெட்டியும், குட்டைகள் வெட்டியும்,அந்தக் கால்நடைகளுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்றுச் செய்து தருவார்கள் என்று நம்புகிறேன்.

பல கிராமங்களில் எவ்வளவு ஆழம் வெட்டினாலும், குடிப்பதற்குத் தண்ணீர் கிடைப்பது இல்லை. அப்படிப்பட்ட இடங்களில், ஏரிகளில் தனியாகக் கிணறு வெட்டித் தந்தாவது, அல்லது பைப் மூலமாவது குடிநீர் கொடுக்க, அந்தப் பிரச்னையைத் தீர்க்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது எல்லா இடங்களிலும் மக்கள் பேசுகிற செய்தியாக இருக்கிற காரணத்தால், அதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

குறிப்பாக, இந்த நேரத்தில் மண் வேலை செய்யலாம் என்று சொல்கிறார்கள். அதிலே அபிவிருத்தி வேலை செய்யக்கூடாது, புதிய சாலைகளை அமைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். புதிய சாலைகள் அமைப்பதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. இன்று ரூ. 10 கூலி கொடுத்தாலும் ரூ. 5 வேலை தான் நடைபெறுகிறது. இயற்கை நிலையால் இப்படி இருக்கிறது. மண் காய்ந்து போய் இருப்பதால், மக்கள் அங்கே வேலை செய்தாலும், சரிவர அதைச் செய்ய முடியவில்லை. சில இடங்களில் 500-400 ஏக்கர் நிலம் இருக்கிற இடத்தில் கூட சரியானபடி பாதை வசதி இல்லை. அப்படிப்பட்ட நிலங்களுக்குச் சாலை அமைத்துக்கொடுக்க இந்தத் திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது ரூரல் ஹைவேஸ் என்று சொல்லப்பட்டு வருகிறது. இந்த ரூரல் ஹைவேஸ் என்பது சென்ற ஆண்டு 1,500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு எல்லாம் நேரடி இணைப்புச் சாலை போடும் என்று சொல்லப்பட்டது. சில இடங்களில் தார் ரோடுகூட போட்டார்கள். ஆனல் வேலை பாதியில் நின்று விட்டது. அதே சாலையில் பஸ் போக்குவரத்துகூட இருக்கிறது.

[திரு. பூ. எட்டியப்பன்]

சிலஒன்றியங்களில் இந்த வேலையைத் தொடர்ந்து செய்ய நிதி வசதி இல்லை. ஆகவே, இதையெல்லாம் ஹைவேஸ் உடனடியாக ஏற்றுக்கொள்ள ஆவன செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நூரல் ஹைவேஸில்கூட குறிப்பாகச் சில இடங்களில் நல்ல வேலை நடைபெற்று வருகிறது. சில இடங்களில் அப்படி நிலைமை இல்லை. இதை எந்த மனப்பான்மையோடு செய்கிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு தொகுதியை எடுத்துக்கொண்டால் 2 குறுகிய சாலைகூட இல்லை. மற்றத் தொகுதிகளைப் பார்த்தால் பல லட்சம் ரூபாய் செலவில் சாலைகளைப் போட்டு இருக்கிறார்கள். இது என்ன காரணத்தால் என்பதை என்னால் யூகித்துச் சொல்ல முடியவில்லை.

கிராமப்புறங்களில் பள்ளிக்கூடங்களுக்கு கட்டடங்கள் இல்லாத நிலை இருக்கிறது. கிராமப் பஞ்சாயத்துக்களிடத்தில் நிதி வசதி இல்லாததால் வெறும் குடிசைகளில், மரத்தடியில் பள்ளிகளை நடத்துகிறார்கள். அதற்காக அரசு ஒதுக்கியிருக்கும் தொகையை இரண்டு மடங்காக உயர்த்தி அதைச் செய்து தரவேண்டுமென்ற கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் சர்சார்ஜ் போட்டதால் பல ஒன்றியங் களுக்கு சர்ப்ளஸ் பணம் வந்துகொண்டு இருக்கிறது. அந்தப் பணத்தை எடுத்து அந்தப் பள்ளி இல்லாத ஊர்களில் பள்ளி கட்டுவதற்கும், சாலை இல்லாத ஊர்களுக்கு சாலை போடுவதற்கும் வேண்டுகோள் வருமானால், அதை அனுமதிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இணங்கவேண்டுமென்ற உத்தரவை அரசு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்றியங்களில் ஏராளமாக நிதி இருக்கிறபோது, அவர்களிடமிருந்து கான்ட்ரி பியூஷன் வாங்கிக்கொண்டு அதை நிறைவேற்றிக் கொடுத்தால் வசதி வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தால் பற்றி சொல்லி இருக்கிறார்கள், அதையே நான் திரும்பச்சொல்ல எதுவும் இல்லை என்று நினைக்கிறேன். 1974-75-ல் கிராம சேவக்குகள் இரண்டாம் நிலையில் இருப்பவர்களை முதல் நிலையாக மாற்றி இருக்கிறார்கள். ழி1975-75-ல் 427 பேரை மாற்றுவதற்காக வழி வகை செய்து இருக்கிறார்கள் இந்தத் திட்டத்திலே. ஆனால்

1975 ஏப்ரல் 5] [திரு. பூ. எட்டியப்பன்]

ஏ.ஆர்.சி. ரிப்போர்ட்டில் அவர்கள் விவசாயத்துறையில் அதிகமாகப் பணியாற்றுவதால் 10 ஆண்டுக் காலத்திற்கு மேலாகப் பணியாற்றியுள்ள கிராம சேவக்குகளை எல்லாம் ஏதாவது நல்ல முறையில் அவர்களுக்குத் தேர்வுநிலைத் தகுதி கொடுத்து அவர்களுக்கு ஊக்கம் தரவேண்டும் என்று சிபார்சு செய்து இருக்கிறார்கள். அதை உடனடியாக அமல் நடத்தினால் அவர்களுக்கு நல்ல முறையில் பணியாற்ற ஊக்கம் கொடுத்ததாக இருக்கும். ஒன்றியங்களில் குடும்பக் கட்டுப்பாடு நல அமைப்புத் திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்தி, எந்தெந்தக் கிராமங்களில் அவர்கள் செல்லவேண்டி இருக்கிறதோ அங்கேயெல்லாம் செய்யச் சொல்லலாம். ஏனென்றால், ஒரு கிராமத்தில் இருக்கும் தலைவருக்கும், அதிகாரிக்கும் ஏதோ தகராறு இருக்கிற காரணத்தால் ஆரம்பத்திலிருந்து தகராறு இருப்பதால், அந்தக் கிராம அதிகாரிகள் வேலை செய்வது இல்லை, அசட்டை செய்கிறார்கள்.

மேலும் இப்போது, ஊராட்சி பிரிவானது ஆர்.டி.ஓ.விடமிருந்து, டி.டி.ஓ.-க்கு மாற்றப்பட்டு இருப்பதிலிருந்து இந்த வரி வசூல் பற்றிப் யாரும் கேட்பது இல்லை. பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரி, அந்த பஞ்சாயத்துக்களில் உள்ள ஆடிட் ஆட்சேபணைகளை பார்ப்பதற்கு செல்கிறார்களே தவிர, அவர்கள் இதிலே ஒன்றும் அக்கறை காட்டுவது இல்லை. வரிவசூலுக்கு முனைப்பாக வேலை செய்யவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் திட்டங்கள் எல்லாம் நல்லமுறையில் உருவாக்கப்பட்டு செயல்முறையில் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு நல்ல முறையில் சிறந்து இருக்கிறது, அதை யாரும் மறுக்க முடியாது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆடிட் ஆட்சேபணைகள் கூட பல கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு இருப்பதாகப் புகார் இருக்கிறது. அப்படிப்பட்ட குறைகளையெல்லாம் கூடியவரையில் டி.டி.ஓ. அளவில் நிவர்த்திப்பதற்குப் பதிலாக தனி அலுவலர் நியமித்துச் செய்தால் நல்ல முறையில் செயல்படும் என்று தெரிவித்துக்கொண்டு, இந்த மானியத்தை வரவேற்று, இந்த மானியத்தில் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

(முற்பகல் 11-30) [1975 ஏப்ரல் 5

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, சமுதாய வளர்ச்சி மானியக் கோரிக்கைமீது எதிர்க்கட்சியினரால் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து எனது ஓரிரு கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

முதலாவதாக இன்று நம் மாநிலத்திற்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டும், சுயாட்சி வேண்டுமென்று கூறிக் கொண்டிருக்கிறோம். ஆனால் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் மிகக் குறைவாக இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை அங்குள்ள அதிகாரிகள் மதிப்பதில்லை. ஆகையினால் தலைவர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். தலைவர்களுக்கும், அந்த அதிகாரிகளுக்கு கூட்டுப் பொறுப்புகள் அதிகமாக இருக்கவேண்டும். செக் போடுவது போன்ற விவகாரங்களில் இரண்டு பேர்களும் இணைந்து செயல்படும் நிலையில் ஆணைகள் பிறப்பிக்கப்படவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலை நேரடியாக மக்களிடம் வைத்து நடத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மக்கள் நேரடியாகத் தேர்தல் நடத்தப்படுமென்று ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பல முறை நேரடியாகத் தேர்தல் நடத்துவதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமென்று கூறப்பட்டது. ஆனால் இது வரை எந்தவிதமான ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. ஆந்திராவில் நேரடியாகத் தேர்தல் நடைபெறுகிறது என்று கேள்விப்படுகிறோம். அந்த முறையில் இங்கேயும் நேரடியாக இந்தத் தேர்தல் நடத்தப்படவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். இப்படி செய்யாததினால் சாதாரணமாக மக்களிடம் செல்வாக்கு அற்றவர்கள், பண வசதி உள்ளவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்களை எப்படியாவது வளைத்துப் பிடித்து யூனியன் தலைவராக வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அடாவடிக்காரர்கள் யூனியன் தலைவராக வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, பஞ்சாயத்து யூனியன் தலைவர் பதவிக்கு நேரடியாகத் தேர்தல் நடத்தித் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

1975 ஏப்ரல் 5] [திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்]

அரசு அடிக்கடி என்.ஜி.ஓ.-க்களுக்கு சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்கிறது. இது ஒரு வருஷத்தில் இரண்டு, மூன்று தடவை ஏற்பட்டு விடுகிறது. இப்படிக் கூட்டுவதன் காரணமாக, பஞ்சாயத்துக்களுக்கு, பஞ்சாயத்துக்களில் வேலை பார்க்கும் என்.ஜி.ஓ.-க்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இப்போது பல பஞ்சாயத்துக்களில் அவை வரியாக வசூல் பண்ணக்கூடிய பணம் முழுவதும் அந்த ஊழியர்களுக்குச் சம்பளமாகவே கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதைத் தவிர்க்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். கிராமப் பஞ்சாயத்துக்களுக்குப் பண உதவியை அரசாங்கம் செய்வதைப் போல டவுன் பஞ்சாயத்துக்களுக்குப் பண உதவியை அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மொத்த வருமானத்தில் 25 சதவீதத்திற்கு மேல் சிப்பந்திகளின் சம்பளமாக வந்தால் அதை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல ஒன்றியத்தில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் இறந்துவிட்டால் அவர்கள் பெறவேண்டிய ஃபேமிலி பென்ஷன், பிராவிடெண்ட் ஃபண்டு இவைகள் உடனடியாக அவர்கள் குடும்பங்களுக்குக் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். இவைகள் கிடைக்க கிட்டத்தட்ட 3, 4 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிடுகிறது. இப்படிப்பட்ட நிலை இருப்பதால் இதில் உடனடியாகத் தலையிட்டு மாற்றவேண்டும். யாராவது இறந்துவிட்டால் 3 மாத காலத்திற்குள் அவர் பெறவேண்டிய பிராவிடண்ட் ஃபண்டு, ஃபேமிலி பென்ஷன் கிடைக்க அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல செலக்ஷன் கிரேடு பஞ்சாயத்துக்களுக்கு இ.ஓ.பி.க்களைப் பஞ்சாயத்து அதிகாரிகளாக நியமிப்பதற்குப் பதிலாக ஃபர்ஸ்ட் கிரேடு, செகண்ட் கிரேடு நிர்வாக அதிகாரிகளாகப் போட்டால் போதுமானது. இதனால் நிர்வாகச் செலவு குறையும். சம்பளச் செலவுகள் போன்றவைகள் குறையும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, அதிகமான ரோடுகள் உள்ள மேஜர் பஞ்சாயத்து ரோடுகளை ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் எடுத்துக் கொள்ள வேண்டும். என்னுடைய தொகுதியில் வீரவநல்லூர், கல்லிடைக் குறிச்சி போன்ற மேஜர் பஞ்சாயத்துக்களில் அதிகமான ரோடுகள் உள்ளன. அவைகள் சரியான முறையில் செப்பனிடப்படாத நிலையில் உள்ளன. காரணம் பண வசதி இல்லாத நிலைதான். அப்படிப்பட்ட ரோடுகளை ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் மூலம் எடுத்து, நல்ல முறையில் பராமரிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, பஞ்சாயத்துக்களில் தெரு விளக்குகள் போடப்படுகின்றன. இந்தத் தெரு விளக்குகளைப் பொறுத்தவரை பாதிக்கு மேல் எரிவதில்லை. அது மட்டுமல்லாமல் வருஷத்திற்கு 6 மாதம் மின்சார வெட்டு இருந்து கொண்டிருக்கிறது. இப்படி நிலைமைகள் இருப்பினும் எத்தனை விளக்குகள் ஒரு பஞ்சாயத்தில் போடப்பட்டிருக்கிறதோ அவைகளுக்குத் தகுந்தாற்போல அந்தப் பஞ்சாயத்துக்கள் பணம் கொடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தெரு விளக்குகளுக்காக மீட்டர் பொருத்தவேண்டுமென்ற கோரிக்கை இப்போதல்ல, இரண்டு, மூன்று ஆண்டுகளாகவே பல உறுப்பினர்களால் இந்தச் சபையில் எழுப்பப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்களும் சிக்கிரம் இதற்கான ஆணை பிறப்பிக்கப்படு மென்று இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பே கூறியது என் ஞாபகத்திற்கு வருகிறது. தெரு விளக்குகளுக்கு மீட்டர் பொருத்தப்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல, கிராம சேவக்குகளை பி.டி.ஓ. பதவிக்கு உயர்த்தவேண்டும். அவர்களைப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி களாகப் போட வேண்டாமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்து எழுத்தர்களை நிர்வாக அதிகாரிகளாகப் போட்டால் நல்ல அனுபவம் கிடைக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியில் சேர்மாதேவி, விரவநல்லூர் பத்தமடை போன்ற பஞ்சாயத்துக்களில் குடிநீர்த் திட்டம் போட்டு அரசாங்க அனுமதி கேட்டு, குடிநீர் வாரியத்திற்கு அனுப்பி, அந்தத் திட்டத்தை அங்கே எதிர்பார்த்துக் கொண்டி

ருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய முழு ஒத்துழைப்பை அரசாங்கம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, பஞ்சாயத்துக்களில் இப்போது பூச்சி மருந்துகள் அடிப்பது கிடையாது. ஊருக்குச் செல்லவேண்டுமென்றால் பயமாக இருக்கிறது, அவ்வளவு கொசு தொந்தரவு இருக்கிறது. கேட்டால் அரசாங்கத்திடமிருந்து பூச்சி மருந்துகள் சரியான முறையில் வருவதில்லையென்று கூறுகிறார்கள். ஆகவே, பூச்சி மருந்துகள் பஞ்சாயத்துக்களுக்கு உடனடியாகக் கிடைப்பதற்கு ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. மு. இரத்தினசபாபதி:** மாற்றுத் தலைவரவர்களே, இன்று உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கும் மானியக் கோரிக்கை முக்கியமான மானியக் கோரிக்கையாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் இருக்கிற கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகிய எல்லாம் அடங்கிய ஒரு பொதுவான கோரிக்கையாக இது இருக்கிற காரணத்தினால் இந்த இலாகாவின் கீழ் செய்யப்படுகிற காரியங்கள் தமிழ்நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும் சம்பந்தப்பட்டதாக இருக்கிற காரணத்தினால் இது முக்கியமான கோரிக்கையாக இருக்கிறது.

இருந்தாலும், இன்று சமுதாய வளர்ச்சி என்ற முறையில் நகர்ப் பகுதிகள் தவிர கிராமப் பகுதிகளில் இருக்கிற மக்களை மிக மிக வேகமாக நல்ல முறையில் அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று இந்தச் சமுதாய வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடங்கப்பெற்று நடைபெற்று வருகின்றன.

சமுதாய வளர்ச்சிப் பணிகள் தொடங்கப் பெறுவதற்கு 1961 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் இருக்கிற எல்லாப் பகுதிகளிலும் ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டு, அதன் மூலம் சமுதாய வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இன்று நலிவுற்ற மக்களுடைய நிலையை உயர்த்துவதற்கு இந்த அமைப்பு முறை பலதுறைகளிலே அவர்களுக்காக நல்ல காரியங்களைச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு

அது வேளாண்மைத் துறையானாலும் சரி கால்நடை வளர்ச்சித் துறையானாலும் சரி, கல்வித் துறையானாலும் சரி, இவைகள் மூலம் கைத் தொழில் அமைத்துக் கொடுத்தல், குடி நீர் வசதிகளைச் செய்து கொடுத்தல், பாசன வசதிகளைச் செய்தல் போன்ற நல்ல காரியங்களை இந்த அரசு செய்து கொண்டு வருகிறது. இப்படிச் செய்கிற இந்தத் திட்டத்திற்கு இந்தச் சமுதாய வளர்ச்சியின்கீழ் 29 கோடி ரூபாய் மானியமாக போட்டிருந்தாலும் வேறு பல துறைகளின் மூலம் கல்வித் துறை மூலம், பொதுப் பணித் துறை மூலம் போன்ற பல துறைகளில் மூலம் ஏறக்குறைய 111 கோடி ரூபாய் அளவிற்கு இந்தத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டு வருகிறது. இதன் மூலம் கிராமப் புறங்களில் இன்றைக்கு இருக்கிற மக்கள் எல்லோரும் தங்களுடைய கோரிக்கைகளை, ஊராட்சி மூலமாகவோ அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவோ உரிமையோடு கேட்கிற அளவிற்கு இப்படி விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருப்பதை நாம் எல்லோரும் அறிந்து வருகிறோம். அவர்களுக்கு எந்தக் குறைகளாவது நிவர்த்திக்கப்பட வேண்டுமென்றால் அவைகளைப் பஞ்சாயத்தையோ அல்லது ஒன்றியத்தையோ நேரடியாக அணுகி நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய ஒரு அமைப்பு முறையையும் அமைத்து இருக்கிறோம். இதன் மூலம் கீழ் மட்டத்தில் இருக்கிற விவசாயிகளானாலும் சரி, பின்தங்கிய மக்களானாலும் சரி, அவர்கள் தங்களுடைய நிலையை உயர்த்திக்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த நிர்வாக அமைப்பின் மூலம் நாம் எந்த அளவிற்குக் கிராமப்புறங்களில் வளர்ச்சி பெற்றிருக்கிறோம் என்பதை அங்கே சென்று பார்த்தால் தெரியும். நிச்சயமாக நல்ல முறையில் கிராமப் பகுதிகளை முன்னேற்றியிருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. கிராமப் புறங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து வருகிறோம்.

குடி நீர் வாரியத்தின் மூலம் நீர் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். கிராமப் புறங்களில் சில பகுதிகளில் 50, 100 ஆண்டுகளாக அவர்கள் தங்கள் ஊருக்கு குடி தண்ணீர் கிடைக்காமல் ஏங்கிய நிலை இருந்தது. இப்போது அந்தப் பகுதிகளுக்குக் குடி நீர் வாரியத்தின் மூலம் குடி நீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மறந்து விட முடியாது.

1975 ஏப்ரல் 5] [திரு. மு. இரத்தினசபாபதி]

எனது பகுதியில் கடற்கரை ஓரங்களில் மீனவர் அதிகமாக வாழ்கிற கீழவைப்பாறு, சிப்பிக்குளம் போன்ற பகுதிகளில் குடி நீர் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. பக்கத்தில் உள்ள ஆற்றில் தண்ணீர் எடுத்து, 7 லட்சம் ரூபாய் செலவில் வாரியத்தின் மூலம் குடி நீர் திட்டத்தை உருவாக்கி, 7 கிராமங்களுக்குக் குடி நீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்றால் அந்த வாரியத்தைப் பாராட்டியாகவேண்டும். இந்தத் திட்டம் அந்தப் பகுதி மக்களுக்கு எந்த அளவிற்குப் பயன்பட்டிருக்கிறது என்பதை நிச்சயமாக அந்தப் பகுதியில் வாழ்கிறவன் என்ற முறையில் உணர்கிறேன். இப்படிப்பட்டத் திட்டங்களின் மூலம் கிராமப்புறங்களில் மக்கள் தங்கள் வாழ்நாளில் குடி தண்ணீர் கிடைக்குமா, கிடைக்காதா என்று எங்கிக் கொண்டிருந்த மக்களுக்கு இப்போது குடி தண்ணீர் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிற குடிநீர் வாரியத்திற்கு ஒரு வேண்டுகோளை விடக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று விளாத்திக்குளம் பகுதியில் குறிப்பாக இராமநாதபுரத்தை ஒட்டியிருக்கிற பகுதிகளில் மிகப் பெரும்பான்மையான கிராமங்கள் குடிநீர் வசதியற்ற கிராமங்களாக இருக்கின்றன. அங்கே அறவே குடிநீர் கிடைக்காத கிராமங்கள் இருக்கின்றன. அப்படி நீர் இருந்தாலும், அந்த நீரைக் குடித்தால் தொத்து நோய் வரக் கூடிய பகுதியாக அவைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பகுதிகளாக ஏறக்குறைய 13 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு குடிநீர் வசதி செய்து தரவேண்டும். 1968-ம் ஆண்டே பொதுச் சுகாதாரத் துறை மூலம் கேட்டுக் கொண்டது, இது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதியில் குடிநீர் வழங்குவதற்கான திட்டத்தை குடிநீர் வாரியம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமப் புறங்களில் 1,500 மக்கள் தொகைக்கு மேற்பட்ட கிராமங்களை இணைப்பதற்கு எல்லாப் பருவ காலங்களிலும் பயன்படக் கூடிய சாலைகளை அமைத்து வருகிறார்கள். மற்ற கிராமங்களுக்கு, அறவே இணைப்புச் சாலை இல்லாத கிராமங்களுக்கு, சீரான பருவகாலங்களுக்கு ஏற்ற சாளைச் சாலை அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படிச் செயல்படுத்தும் நேரத்தில் 'நில உரிமைப்படுத்தலுக்கு உட்படாத'

இடங்களில் மட்டும் சாலைகள் அமைக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. சரளைச் சாலைகள் அமைக்க முடியாதபடி சில இடையூறுகள் ஏற்படுகின்றன. ஒரு சில கெடுமதியாளர்கள் வேண்டுமென்றே இந்தக் காரியங்களை ஆற்றி வருகிறார்கள். காழ்ப்புணர்ச்சி காரணமாகவும் இந்தமாதிரி சாலைகள் அமைப்புப் பணிகளுக்கு விரோதமாகச் செயல்பட்டு வருகிறார்கள். வக்கீல் நோட்டீஸ் கொடுக்கிறார்கள். ஸ்டே வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட நிலைகளை, இடையூறுகளை மாற்ற, அந்தமாதிரியான இடங்களைக் கையகப்படுத்த அரசு ஒரு அவசரச் சட்டத்தைப் பிரகடனப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாசன வசதி பெற்ற குளங்களைச் செப்பனிடுவதற்கு ஊராட்சி ஒன்றியங்களிலே நிதி வசதியில்லாமையால், 100 எக்கருக்கு மேல் ஆயக்கட்டு உள்ள பாசன குளங்களை அரசே எடுத்துக் கொண்டுள்ளது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. அப்படிப் பொதுப் பணித் துறையால் எடுத்துக் கொண்டது போக எஞ்சிய குளங்களைப் பராமரிப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் மானியத் தொகைகளை அரசு குறைக்காமல் இருப்பதையும் நாம் நிச்சயமாகப் பாராட்ட வேண்டும். இதன் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களால் சில குளங்கள் நல்ல முறையில் சீராக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகின்றேன்.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், இருக்கின்ற 28,300 ஆரம்ப உயர் தொடக்கப் பள்ளிகளில் 22,600 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நேரிடையாக நடத்தப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு இந்தப் பள்ளிகளுக்கு ஆசிரியர் நியமனம் செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்களை முறைப்படி நியமிக்க வகை எதுவும் இல்லாத நிலை இருக்கிறது. எனக்கு முன்பு பேசிய திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் கூறியது போன்று பெருந்தன்மையுள்ளவர்கள், பொது சமுதாயப் பணித் துறையில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் தலைவராக வருகின்ற நேரத்தில், சாதி பலத்தை வைத்துத்தான் தலைவர்களாக தேர்தலில் வெற்றிபெற வேண்டியுள்ள காரணத்தால் அவர்களை ஆதரித்தவர்களின் வேண்டுகோளை நிராகரிக்க முடியாத சூழ்நிலையில்

தங்களால் நியமனம் செய்யப்படும்போது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு போதுமான விகிதாசாரத்தில் ஆசிரியர் வேலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியாமல் போய் விடுகிறது. அரசாங்கம் இந்த விஷயத்திற்காக ரூ. 39 கோடி செலவு செய்தும் கூட, அங்கே நியாயமான முறையில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை என்ற ஒரு நிலை இருக்கிறது. அரிசன வகுப்பைச் சார்ந்த எவ்வளவோ பேர், ஆசிரியர் பயிற்சி பெற்றிருந்தும் அவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருந்து வருகிறார்கள். 18 சதவிகித வேலை வாய்ப்புகள் கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் கணக்கு எடுத்து தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சரியான பிரதிநிதித்துவம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்குக் கொடுக்காமல் வேறு யாருக்கும் அந்தப் பதவிகள் கொடுக்கப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட ஆசிரியர்களை கண்டிப்பாக வேலையிலிருந்து நீக்கி, அந்த இடத்தில் அரிசன வகுப்பு ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாக வருவதற்கு அரிசன வகுப்பு மக்களுக்கு வாய்ப்புகள் தரப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சென்னை மாநகராட்சியில் இருப்பதுபோல், இந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு ஆண்டு அரிசன வகுப்பைச் சேர்ந்தவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஏற்ற முறையில் அரிசன மக்களுக்கு சரியான பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்ற முறையில் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, கிராமப் பஞ்சாயத்துக்களிலே, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த, அருந்ததியர்கள் என்பவர்கள் பள்ளிக்கூடங்களில் வேலை பெருத நிலை இன்றைக்கும் நிலவி வருகிறது.

வருமானம் இல்லாத பஞ்சாயத்துகள், இருக்கிற பஞ்சாயத்துகள் என்று இரண்டு வகை இருக்கின்றன. வருமானம் இல்லாத பஞ்சாயத்துக்களினால் சில நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியாத சில குறைபாடுகள் இருந்து வருகின்றன. அவற்றைச்

சமாளித்து, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அதிக வசதிகள் கிடைப்பதற்காக, அப்படிப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு அதிகப் படியான பணத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள், பள்ளிகளில், மற்ற வகுப்புக் குழந்தைகளோடு சமமாக உட்காரும் நிலைகூட இன்றைக்கு கிடைக்கவில்லை. இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டும்.

பஞ்சாயத்துக்களிலே வேலை செய்கின்ற கீழ்நிலை சிப்பந்தி களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டும்.

ஊராட்சி ஒன்றியங்களில் அரிசன வகுப்பினர் தலைவராக வந்தால் தான், அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகமாகும். மற்றவர்களுக்குக் கொடுத்தால் அந்த அந்த சாதியினருக்குத் தான் வேலைகள் கிடைத்து வருகின்றன என்று நான் திட்ட வட்டமாகக் கூறுவேன்.

பஞ்சாயத்து மாதிரியில் நகரியங்கள் இருக்கின்றன. இதற்கு யாரும் தேர்ந்தெடுக்கப்படுவது இல்லை. கலெக்டரோ, ஆர்.டி.ஓ.-வோ ஆட்களை நியமிக்கிறார்கள். அங்குள்ள வருமானம் முழுவதும் அந்த நகரியத்தில் தேங்கிக் கிடக்கிறது. அதனால் மற்ற பஞ்சாயத்துக் களுக்கும் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. அந்த நகரியத்தை விரிவுபடுத்துவதற்கும் அந்தப் பணம் உபயோகப் படவில்லை. எதற்குமே பயன்படாமல் அந்த நகரியத்தின் வருமானம் தேங்கிக் கிடக்கிறது. அந்தப் பணம் வருமானம் இல்லாத மற்ற பஞ்சாயத்துக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்ற முறையில் அந்த நகரியத்தை ஒரு பஞ்சாயத்தாக மாற்றி அமைக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கிற முனிசிப்பாலிட்டிகளை எடுத்துக் கொண்டால் எந்த இடத்திலும் நகரசபையை விரிவு படுத்துவதற்கான சாத்தியக்கூறு இல்லை. நகரசபை ஆரம்பிக்கப் பட்ட காலத்தில் அங்கு எவ்வளவு சிப்பந்திகள் இருந்தார்களோ அதே அளவு சிப்பந்திகள்தான் இப்போதும் இருக்கிறார்கள்.

1975 ஏப்ரல் 5] [திரு. என். மருதாசலம்]

ஒன்றிரண்டு பேர்கள் கூட அதிகம் கிடையாது. எவ்வளவுக்கு எவ்வளவு முனிசிப்பாலிட்டிகளை விரிவுபடுத்த முடியுமோ அந்த அளவுக்கு விரிவுபடுத்தி, அதற்கு ஏற்றமுறையில் சிப்பந்திகளையும் அதிகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு நகரசபை சிப்பந்திகளின் சம்பளம் குறிப்பாக கீழ்த்தர சிப்பந்திகளின் சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. நகரசபை கீழ்த்தர சிப்பந்திகளுக்கு 100 ரூபாய் உயர்ந்தப் பட்டிருக்கிறது. ஆனால் பஞ்சாயத்துக்களில் வேலை செய்யும் கீழ்த்தர சிப்பந்திகளுக்கு அடிப்படைச் சம்பளம் 28 ரூபாய் தான். இதை மாற்ற வேண்டும். நகரசபை கீழ்த்தர சிப்பந்தி களுக்கு கொடுக்கப்படுவதைப்போல பஞ்சாயத்து கீழ்த்தர சிப்பந்திகளின் சம்பளத்தையும் 100 ரூபாயாக உயர்த்த வேண்டும்.

கோவை நகரசபையை எடுத்துக்கொண்டால், குடி தண்ணீருக்கும் பெரும் தட்டுப்பாடாக இருக்கிறது. இப்போது தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள், கட்டிடங்கள் எல்லாம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் குடி தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது. அதை உடனடியாகத் தீர்ப்பதற்கு குழாய்க் கிணறுகள் போட்டு தண்ணீர் வசதி உண்டுபண்ணிக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் 3½ லட்சம் மக்கள் தொகை கொண்ட கோவை நகரசபையை அபிவிருத்தி செய்ய முடியும். கோவை நகரம் இன்று மாநகராட்சி ஆக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. அப்படிப்பட்ட அந்த நகரசபையில் 2, 3 வார்டுகளுக்கு மட்டும் பாதாள சாக்கடை வசதி இருக்கிறது. மற்ற வார்டுகளுக்கு பாதாள சாக்கடை வசதி இல்லை. எல்லா வார்டுகளுக்கும் பாதாள சாக்கடை வசதி செய்து தரவேண்டும்; சுகாதார வசதிகளை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த பஞ்சாயத்துக்களிலும், நகரசபை களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகை கொடுப்பதில்லை. எனக்கு முன்னாலே பேசிய அங்கத்தினர் கூட அதுபற்றி சொன்னார்கள். பஞ்சாயத்துக்களிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரசிடெண்டாக வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கோவை நகரசபையில் ஒரு தடவைகூட நகரசபைத் தலைவராகத் தாழ்த்தப் பட்டவர்கள் வரவில்லை. பஞ்சாயத்துக்களிலும், நகரசபைகளிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவராக வாய்ப்பு இல்லை. அதற்குக்

காரணம், ஜாதி இந்துக்கள் விடுவதில்லை. இப்போது சென்னை மாநகராட்சியில் வருஷத்திற்கு ஒரு ஜாதிக்காரர் தலைவராக வருவதற்கு சட்டம் போட்டிருப்பதைப்போல பஞ்சாயத்துக்களிலும், நகரசபைகளிலும் வரவேண்டுமென்று, சர்க்கார் சட்டம் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையில் மட்டும் தான் இப்போது அந்தச் சட்டம் இருக்கிறது. அதனால் இங்கே மட்டும் ஆண்டுதோறும் ஒவ்வொரு ஜாதிக்காரராக வர வாய்ப்பு இருக்கிறது. இந்த முறை எல்லா இடங்களிலும் கொண்டுவரப்பட வேண்டும். அதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்யவும் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. டி. கணபதி:** மாண்புமிகு தலைவரவர்களே. ஊராட்சித் துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த 29 கோடி ரூபாய் மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பல துறைகளிலும் சேர்த்து, 1966–67-ல் 47 கோடிக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டது. அது ஒரு வட்டாரத்திற்கு 12 லட்சம் ரூபாய் என்ற அளவுக்குத் தான் கிடைத்தது. பின்னால் கழக அரசு வந்து படிப்படியாக உயர்த்தி, இன்று 1975-76 ஆம் ஆண்டில் 111.24 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 29.74 லட்சம் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது சமுதாய வளர்ச்சியில் கழக அரசு எவ்வளவு நல்ல எண்ணம் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

1952-ம் ஆண்டில் சமுதாய வளர்ச்சித் திட்டம் ஊர்ப்புறங்களில் வாழும் நலிவுற்ற மக்கள் நிலையை உயர்த்தவும், தன்னம்பிக்கையை வளர்க்கவும் தொடங்கப்பட்டது. அதனால் ஓரளவு மக்கள் நிலை உயர்ந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் தன்னம்பிக்கை வளர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. அதற்குக் காரணம் இப்பொழுது எல்லாம் 'ஸ்பூன் ஃபீடிங்' மாதிரி அரசே செய்துவிடுகிறது. தன்னம்பிக்கையை வளர்ப்பதற்காக, இந்த முறையை மாற்ற 1958-ல் பஞ்சாயத்துச் சட்டம் உருவானது. அதனுடைய 'பிரியாம்பிள்' முக்கியக் குறிக்கோளாக உற்பத்தியைப் பெருக்கவும், மக்கள் தொகையைக் குறைக்கவும்தான் திட்டமுள்ளது. ஆகவே, முக்கியமான கடமை மக்கள் தொகையைக்

1975 ஏப்ரல் 5] [திரு. டி. கணபதி]

குறைக்க வேண்டும். இல்லாவிட்டால் எந்தத் திட்டத்தைப் போட்டாலும் அது 'யானைப் பசிக்கு சோளப் பொரி போட்டது போல்' தான் இருக்கும்.

இந்த மானியக் கோரிக்கையில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 1979-க்குள் ஆயிரத்திற்கு—இப்போது 1,000-க்கு 35 என்ற பிறப்பு விகிதத்தை ஆயிரத்திற்கு 25 என்று குறைத்தாக வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல. மகளிர் மன்றங்கள் மாநில அளவில் 12,159 அமைத்திருக்கிறார்கள். அது வட்டாரத்திற்கு 30 என்ற அளவில் ஒதுக்கப்பட்டு, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்குரிய கருவிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் இந்த மகளிர் மன்றங்களுக்கு எல்லாம் ஒரு வட்டாரத்திற்கு 4,000 ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இது போதாது; இந்தத் தொகையை உயர்த்த வேண்டும்.

அடுத்தபடியாக தாய்-சேய் விடுதிகள் ஆங்காங்கு இருக்கின்றன. இந்த தாய்-சேய் விடுதிகள் மூலம் பல திட்டங்களை நாம் தீட்டி இருக்கிறோம். ஆனால் இந்த தாய்-சேய் நல விடுதிகளில் வேலை செய்ய தாதியர்கள் கிடைப்பதில்லை. உறுப்பினர் கணேசன் அவர்கள் சொன்னதுபோல் எல்லா எம்பிளாய்மென்ட் ஆபீஸ்களுக்கும் எழுதியாகிவிட்டது; பத்திரிகைகளில் எல்லாம் விளம்பரம் போட்டாகிவிட்டது. தாதியர்களும் கிடைக்கவில்லை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த இந்த தாய்-சேய் தாதியர்கள் கிடைக்கச் செய்ய ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எங்களுடைய வள்ளியூர் ஒன்றியத்தில் 4 இடங்களில் தாதியர்கள் இல்லை. தாதியர்கள் கிடைக்காததால் அங்கே இடம் காலியாக இருக்கிறது. அதனால் பிரைவேட் டாக்டர்களிடம் பணியாற்றுகிற அனுபவம் பெற்றவர்களை இந்த வேலைக்கு நியமிக்கலாமா என்பதுபற்றி ஆலோசனை செய்ய வேண்டும்.

இப்போது மாதர் மன்றங்களுக்கும், தாய்-சேய் நிலையங்களுக்கும் ஹெல்த் விசிட்டர்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு அலுவர்களுக்கும் அடிக்கடி தொடர்பு இல்லாமல் இருக்கிறது. அவர்கள் எல்லாம் தனித் தனியாக இந்த குடும்பக்கட்டுப்பாடு

திட்டத்தைச் செம்மையாகச் செய்ய முடியாது; ஒருவருக்கொருவர் தொடர்பு இருக்க வேண்டும். மாவட்ட பெண்கள் நல அதிகாரி இதனை அக்கறையாக கவனிப்பதில்லை. எல்லோரும் சேர்ந்து காரியங்கள் செய்ய வேண்டும். மக்கள் மத்தியிலே, குறிப்பாக கிராமப்புறங்களில் இருக்கிறவர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு என்பது ஒரு தவறான காரியம் என்று தோன்றுகிறது. அந்த தவறான எண்ணத்தை இப்படிப்பட்ட நிறுவனங்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு வைத்துக் கொண்டு, கருத்தரங்குகள் நடத்தி பணியாற்றினால் போக்க முடியும்.

மக்களிடம் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டுமென்று ஏற்கனவே சொன்னேன். தன்னம்பிக்கையை வளர்க்கின்ற பணியில் இருப்பவர் யார் என்று பார்த்தால் கிராமங்களிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களும் ஆசிரியைகளும்தான். ஆகவே, அவர்களைக் கொண்டு குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ஆள் பிடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை; குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மக்களுக்கு எடுத்துச்சொல்லலாம். அதில் தவறு இல்லை. சமுதாய முன்னேற்றத்தில் அவர்களுக்கு இந்தக் கடமை உண்டா, இல்லாயா? கடமை இருக்கிறது. அதைத்தான் கல்வி மானியத்தின்போது நான் சொன்னேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். வசதியாக வாழவேண்டாம் என்று சொல்லவில்லை; சமுதாயத்துக்கும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்றார்கள். அந்த சமுதாயத்தோடு வாழ்ந்து, பெரும்பான்மையோர் அபிப்பிராயத்தை திரட்டும் ஆற்றல் பெற்றவர்கள், பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டக் கூடியவர்கள் கிராமங்கள் தோறும் நிரம்பியிருக்கிற ஆசிரியர்கள்-ஆசிரியைகள்தான். அவர்கள் அரசை ஆட்டிப்படைக்கும் வல்லமை கூட பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப்பற்றி ஆங்காங்கே மக்களுக்கு எடுத்துச்சொன்னால் கெட்டா போய்விடுவார்கள்? இது அவர்கள் சமுதாயத்திற்கு செய்கின்ற ஒரு சிறந்த பணி. அதை அவர்கள் கருத்திற்கொண்டு, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் உதவிகரமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விஷயத்தில் ஆசிரியர், ஆசிரியைகளுக்கு 'ரீ-ஓரியன்டட் ட்ரெயினிங்' கூட கொடுக்கலாம்.

ஆசிரியர்களைப் பற்றி எல்லோரும் சொன்னார்கள். ஆசிரியர்களை மாற்றுகின்ற அதிகாரம் பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு வேண்டுமென்று பலர் பேசினார்கள். ஆசிரியர்களைக் கட்டுப்

படுத்தும் அதிகாரமும், அவர்களை இடமாற்றும் அதிகாரமும் யூனியன் தலைவர்களுக்கு இல்லை என்றால் எங்களையே பாராமுகமாக நினைக்கத் தொடங்குவார்கள். ஆசிரியர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இருந்தால்தான் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் அவர்களை அக்கரையுள்ளவர்களாகச் செய்ய முடியும். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஒழுங்காகச் செயல்படுத்த வேண்டுமானால் டிபுடி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ், ஹெல்த் இன்ஸ்பெக்டர்ஸ், வட்டார குடும்பக் கட்டுப்பாடு அலுவலர்கள் யூனியன் அதிகாரத்தின் கீழ் வரவேண்டும்; இல்லையென்றால் ஒருவருக்கொருவர் தொடர்பு இல்லாமல் சிதறிக் கிடப்பார்கள்.

'மிட் ஒய்ஃப்ரி சென்டர்'-களுக்கு சொந்த கட்டடங்கள் இல்லாமல் இருக்கிறது; கூடுதல் தொகை ஒதுக்கி அவைகளுக்கு கட்டடங்கள் கட்ட வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மருதாசலம் அவர்கள் பேசும் போது ஆசிரியர், ஆசிரியைகளுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று சொன்னார்கள். அதைக் கவனிக்க வேண்டும். வள்ளியூர் ஒன்றியத்திலுள்ள மாறன்குளம், கொத்தன்குளம், பெரியகுளம் ஊர்களில் அரிசன யூனியன் பள்ளிகளுக்கு கட்டடங்கள் இல்லை. அந்த இடங்களில் பள்ளிக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும்.

இப்போது ஒவ்வொரு ஒன்றியத்திலும் வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. ஆகவே, ஒன்றிரண்டு ஒன்றிய அலுவலர்களை கூடுதலாக நியமிக்க வேண்டும்.

1962–63-ல் சத்துணவுத் திட்டம் யூனிசெஃப் நிறுவனத்தின் மூலம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் இன்றுவரையில் நெல்லை மாவட்டம் வட பகுதியில் இருக்கிற ஒட்டப்பிடாரம், மானூர், ஆழ்வார்திருநகரி பகுதிகளில் மட்டும் நடைபெறுகிறது. அதைப் போலவே தெற்கே இருக்கிற நாங்குனேரி, இராதாபுரம் சட்ட மன்றத் தொகுதிகளிலுள்ள ஒன்றியங்களுக்கு விஸ்தரிக்க வேண்டும்.

இப்போது 92 வட்டாரங்களில் 1,000 காப்பகங்கள் உள்ளன. கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்கள் 120 பேர்களுக்கு நாள்தோறும் உணவளிக்கிறார்கள். 115 காப்பகங்களுக்கு கட்டடங்கள்

இருக்கின்றன; மற்றவைகளுக்கு கட்டடம் இல்லை. அவைகளுக்கெல்லாம் விரைவில் கட்டடம் கட்ட வேண்டும். அதற்கு போதுமான நிதி ஒதுக்கித் தரவேண்டும்.

குடிநீர் கஷ்டத்தைப் போக்குவதற்காக மாண்புமிகு குடிநீர்-வடிகால் வாரியத் தலைவர்—திரு. கந்தப்பன் அவர்கள் எங்கள் முயற்சிக்கு ஆக்கம் கொடுத்தார்கள். 22 லட்சம் ரூபாயில் குடிநீர் திட்டம் ஒன்று வள்ளியூருக்குத் தரப்பட்டுள்ளது. அதற்காக அரசாங்கத்திற்கும், குடிநீர்-வடிகால் வாரியத் தலைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

வறட்சி நிவாரணப் பணியாக ஆழ்கிணறுகள் தோண்டப்பட தேவையான கருவிகள் உடனடியாக அளிக்கப்பட வேண்டும். மேலும் ஒரு இடத்திற்கு தண்ணீர் சப்ளை செய்கிறபோது இடையிலுள்ள ஊர்களுக்கு எல்லாம் கட்டாயம் தண்ணீர் கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

செட்டிகுளம், கன்னங்குளம் கூட்டப்புளி, விருச்சிபுரம் ஆகிய ஊர்கள் எல்லாம் கடற்கரைப் பக்கமுள்ளவை. தோண்டினால் ஒரே உப்புத் தண்ணீராகத்தான் கிடைக்கும். இந்தப் பகுதிகளுக்கும் நல்ல குடிதண்ணீர் கொடுக்க 3 வருடங்களாக லைப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனிலிருந்து லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

வடக்கன்குளம் என்ற ஊருக்கு மாண்புமிகு குடிநீர் வாரியத் தலைவர் வந்தார்கள். வருகிற சித்திரைமாதம் இந்துக்கள் திருநாளும், ஆடியில் கிறிஸ்தவர்கள் திருநாளும் வர உள்ளது. குமரி மாவட்டம், நெல்லை மாவட்டம் முழுவதிலுமுள்ள மக்கள் கூட்டம் கூட்டமாகக் கூடுவார்கள். ஆனால் குடி தண்ணீர் ஊருக்குள்ளே கிடைக்க வழியில்லை. குடிநீர் வாரியத்திலிருந்து ஆய்வு முடிந்துள்ள திட்டத்தை விரைவில் நமது மாண்புமிகு குடிநீர் வாரியத் தலைவர் செயல்பட உத்தரவிட வேண்டுகிறேன்.

1974–75-ல் ஊர் நல ஊழியர்கள் 410 பேர்கள் முதல் நிலைக்கு உயர்த்தப்பட்டார்கள். மேலும் இரண்டாம் நிலையிலுள்ள 427 பேர்களுக்கு 1975-76-ல் முதல் நிலைக்கு வழி செய்திருப்பது பாராட்டத்தக்கது. அவர்களுக்கு பலவகையான புரமோஷன்கள்

1975 ஏப்ரல் 5] [திரு. டி. கணபதி]

கொடுத்தல் வேண்டும். அவர்களது வாழ்க்கையில் நன்மை உண்டாகும். குடும்ப நலத்திட்டம் மூலம் அரசு ஊழியர்களைப் போல யூனியன் அலுவலர்களுக்கும், நன்மைகள் சலுகைகள் அடையும்படி செய்திருப்பது பாராட்டத்தக்கது. ஊராட்சி மன்றங்கள் பலவற்றில் அரிசன உறுப்பினரில்லை. பெண்களை கோ ஆப்ட் செய்வதால் பயனொன்றும் இல்லை. அரிஜனங்கள் இல்லாத பஞ்சாயத்தில் சட்டத்தைத் திருத்தி அரிஜன் ஒரு வரையாவது கோ ஆப்ட் செய்ய வேண்டும். பாளையங்கோட்டை தொடர்ந்து ஒரு வட்டத்தில் இருப்பதால் அவற்றையெல்லாம் இணைத்து — திருநெல்வேலி கார்ப்பரேஷனைக ஆக்க வேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் காந்திஜி கண்ட கிராம ராஜ்யம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார்கள். நான் அந்தக் கருத்தில் முழுவதும் மாறுபடுகிறேன் என்று சொல்லிக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

நாம் தமிழ்நாட்டில் பஞ்சாயத்துச் சட்டத்தை 1958-ஆம் ஆண்டில் அமலுக்குக் கொண்டுவந்தபோது பஞ்சாயத்துகள் எல்லாம் எந்தமுறையில் செயல்பட வேண்டுமென்று நினைத் தோமோ அந்த முறையில் கிராம ராஜ்யமாக அவை செயல்பட வில்லை என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். நாம் அன்றைக்கு நினைத்த முறையில் அவை இன்றையதினம் செயல்படவில்லை. தமிழகத்தில் மட்டும் இம்மாதிரி இருப்பதாக நான் சொல்லவில்லை. அகில இந்தியா பூராவிலும் இந்த நிலைதான் இருக்கிறது. இந்தத் துறை எந்த வளர்ச்சிப் பணிகளை எந்த முறையில் செய்யவேண்டும் என்று நாம் நினைத்தோமோ அந்த முறையில் நிச்சயமாகச் செயல் படவில்லை. நம்முடைய நோக்கத்தில் இருந்து மாறுபட்டு ரொம்ப தூரம் போய்க்கொண்டிருக்கிறோம் என்பதை ஒத்துக்கொள்ளத் தான் வேண்டும்.

எத்தனையோ பணிகளை இந்த வளர்ச்சி மன்றங்கள் செய்து வருகின்றன. செய்யப்பட்டு வருகின்ற பணிகள் யாவும் தவறானவை என்று சொல்ல முடியாது. அதைக் குறை என்று சொல்ல முடியாது. ஆனால் நாம் கவனிக்க வேண்டியது என்ன?

பஞ்சாயத்துச் சட்டத்தின் மூலம் இந்தப் பணிகள் எவ்வாறு நடைபெற வேண்டும் என்று நினைத்தோம். அந்த நோக்கம் செயல் படுகிறதா?

சாதாரணமாக கிராமங்களில் நாங்கள் ரோடுகள் போடுகிறோம். பள்ளிக்கூடக் கட்டிடங்களைக் கட்டுகிறோம். இவைகளை எல்லாம் செய்வதற்கு தனியாகவே துறைகள் இருக்கின்றன—பி.டபுள்யூ.டி., ஹைவேஸ் டிப்பார்ட்மெண்டு—எல்லாம் இருக்கின்றன. இவற்றை நாங்கள் செய்யவேண்டுமென்று எங்களிடம் ஒப்படைக்கிறபோது நாங்கள் எப்படிச் செய்யக்கூடிய நிலை இருக்கிறது? காண்டிராக்ட் விடுகிறோம்; காண்டிராக்ட் எடுக்கிறவர்கள் அதைச் செய்கிறார்கள். அப்போது கிராமத்தில் உள்ளவர்களை அவர்கள் கூலிகளாக அமர்த்திக்கொண்டு வேலை செய்கிறார்கள். அவ்வளவு தான் நடக்கிறது. இதனால் கிராமத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். கிராமத்து மக்களே ஆர்வமாக முன்வந்து—அவர்களுடைய இந்தப் பணியை செய்துகொள்வதற்கு இப்போது நாம் என்ன வகை செய்திருக்கிறோம்? கிராமங்களில் உள்ள பல துறைகளைப்போல் ப்ளாக் டெவலெப்மெண்டு துறையும் ஒன்றாக இருக்கிறது. விதை, உரம் வேண்டுமென்றால் அங்கே போய் வாங்கிக்கொள்ளலாம் என்ற அளவில் மட்டும்தான் மக்கள் இத்துறையைப்பற்றி நினைக்கிற நிலைதான் இருக்கிறது. இதுபோல இந்தத்துறை இருக்கவேண்டுமா என்பதே பிரச்சினை. நான் இதை நமக்காகச் சொல்லவில்லை. இதைப்பற்றி அகில இந்திய அடிப்படையிலேயே சிந்தித்தாக வேண்டும். இதை ஒரு சந்தர்ப்பமாக வைத்துக்கொண்டு—நாம் எந்த நோக்கத்திற்காக இந்தத் துறையை ஏற்படுத்தினோமோ அந்த நோக்கத்தில் இந்தத் துறை செயல்பட வழிவகை இருக்கிறதா என்று கண்டறியவேண்டும். அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

மற்றப்படி எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் இதுபற்றி சில கருத்துக்களைச் சொன்னார்கள். நான் அதற்குள் போகவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை எடுத்துக்கொண்டு— இந்தத்துறை எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ—அந்த நோக்கத்தில் செயல்படச் செய்ய என்ன செய்யலாம் என்பது உடனடியாக அகில இந்திய ரீதியில் சிந்திக்கப்பட்டாகவேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

1975 ஏப்ரல் 5]

*திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியத்தின் மீது என்னுடைய குறிப்பிட்ட சில கருத்துக்களை மட்டும் கூற விரும்புகிறேன்.

முக்கியமாக, கிராமங்களில் சேவை செய்வதற்கு கிராம சேவக்குகளை நியமித்திருக்கிறோம். கிராமங்களின் முன்னேற்றத்திற்கு ஆங்காங்குள்ள மக்களின் மனப்பான்மைக்கு ஏற்றாற்போல அவர்கள் வேலை செய்துகொண்டு வருகிறார்கள். பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பணி புரிந்து வருகிறவர்கள் எந்தவிதமான சம்பள உயர்வோ, பதவி உயர்வோ பெறாமல் இருக்கிறார்கள். மற்ற அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பதுபோல 300 ரூபாய்க்கு மேற்பட்டு சலுகைகள் கொடுக்கப்படுவது உண்மை. அவர்கள் ஏற்கனவே அந்தச் சம்பளத்திற்கு மேல் வாங்குவதால் அவர்களுக்கு செலக்ஷன் கிரேடு போஸ்டுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது ஏ.ஆர்.சி. கூட அதைப்பற்றிச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். கிராம சேவக்குகளில் இருந்து 200 பேர்கள் விவசாய விஸ்தரிப்புத்துறை ஆபிசர்களாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று சொல்லியிருப்பதையும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் மன்றங்களை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு ப்ளாக்குக்கும் 30 மகளிர் மன்றங்களை ஆரம்பிக்க வேண்டுமென்று ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் நாலாயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பயிற்சிக்கு அதிகமாகச் செலவாவதால் நாலாயிரத்தை உயர்த்தி ஐயாயிரமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரிகள் மருந்து இல்லாத நிலைமையிலும் டாக்டர்கள் இல்லாத நிலைமையிலும் எப்பொழுதும் இருந்து கொண்டு வருகின்றன. பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரிகளை ஆரம்பிப்பதற்கு முன்பாக, அவற்றிற்குத் தகுந்த முறையிலே மருந்துகளையும் டாக்டர்களையும் அளிக்க அரசு முன் வருவதோடு இப்பொழுது பல பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரிகளிலே டாக்டர்கள் இல்லாத குறையை நிவர்த்தி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் ஒன்று அமைக்க விருப்பதாக இந்த அறிக்கையிலே இருக்கிறது. அதற்கு கலெக்டர் அவர்களையே சேர்மனாகப் போடுவதாகவும் குறிப்பிட்டிருக்

கிறார்கள். தற்பொழுது டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலுக்குக் கலெக்டர்தான் சேர்மனாக இருக்கிறார். ஆகவே, ஜில்லா கலெக்டரையே கழகத்திற்கும் தலைவராகப் போடுவது என்று கூறுவது அவ்வளவு உசிதமானதல்ல. ஒரு நான்-அஃபிஷியல் மெம்பரை அதிலே போடுவார்களானால் நன்றாக இருக்கும். அவர்களுக்கும் அங்கேயிருக்கிற அதிகாரிகளோடு ஒத்துழைத்து, அந்த டிஸ்டிரிக்ட் முன்னேறுவதற்கும் ஆக்கப் பணிகள் விரிவு அடைவதற்கும் மற்ற காரியங்களெல்லாம் நிறைவேறுவதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தைக் கூறிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. மா. வே. நாராயணசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களின் சமுதாய வளர்ச்சி மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் பலவற்றைப் பற்றி, பல விளக்கங்களைக் கொண்ட கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் ஒரு நகராட்சிமன்றத் தலைவர் என்ற முறையிலே நகராட்சிமன்றப் பிரச்னைகள் சிலவற்றையும் இங்கே எடுத்துச் சொல்வது பொருத்தமுடையதாகும் என்று கருதி சிலவற்றைச் சொல்ல விழைகிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலே, நம்முடைய அரசு இன்றைக்கு ஏற்கனவே இருந்த நகராட்சிகளுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்கின்றது. தமிழ்நாட்டிலே நகரங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்த நகரங்களை நல்ல சுகாதார வசதிகளுடன் இயங்கச் செய்யவேண்டுமென்ற அளவிலே அதிக அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை — குறிப்பாகக் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, வடிகால் திட்டங்களை மேற்கொள்வது, குடிநீர் வசதியளிப்பது போன்றவற்றை மிகச் சிறப்பான முறையில் நகரங்களிலே நமது அரசு செய்து வருவதை, நிச்சயமாக இந்த நாட்டு மக்கள் பாராட்டத்தான் செய்கிறார்கள்.

ஆனால், அதே நேரத்தில் நகராட்சிகளைப் பொறுத்தமட்டிலும், நடைமுறையிலே சில சங்கடங்கள் இருப்பதை வாய்ப்பு கிடைத்த நேரங்களிலே எல்லாம் நான் சொல்லியிருக்கிறேன். அண்மையிலே

நடைபெற்ற நகராட்சிமன்றத் தலைவர்களுடைய பேரவை மாநாட்டிலே கூட அந்தக் கருத்துக்களை அதன் விவரங்களை யெல்லாம் நம்முடைய முதல்வர் அவர்கள் முன்னிலையிலும், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மன்னை அவர்கள் முன்னிலையிலும் எடுத்து வைத்திருக்கிறோம். நகராட்சிமன்றத் தலைவர்கள் பேரவை சார்பிலே தீர்மானங் களெல்லாம் கூட நிறைவேற்றி சமர்ப்பித்திருக்கிறோம். அவற்றிற் கெல்லாம் அமைச்சரவர்கள் ஆவன செய்வார்கள் என்று நாங்கள் நம்பிக்கொண்டிருக்கிறோம். நடைமுறையிலே, நகராட்சி மன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுகிறது என்றால், அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதால்—அமல் படுத்துவதால்— ஏற்படுகின்ற செலவை அந்த நகராட்சி மன்றமே மேற்கொள்கிறது. ஆனால், அதற்கு அட்மினிஸ்ட்ரேடிவ் சாங்ஷன் பெறுவதில் நடைமுறையில் எவ்வளவு சங்கடங்கள் இருந்து, 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் கூட தீர்மான அளவிலேயேயிருக்கிறதேயொழிய, தீர்மானத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய சூழ்நிலையில்லை. காரணம் என்ன?

The basic coniept of self-governing bodies and the differences are not known.

சிலபேருக்கு வித்தியாசமே தெரிவதில்லை. பஞ்சாயத்து யூனியனும் நகராட்சி மன்றமும் ஒன்று என்ற எண்ணத்திலேயிருக்கிறார்கள். நகராட்சிமன்றம் என்பது தானாக வரிகளை வசூலித்து ஒரு வகையிலே தன்னாட்சி வடிவிலே செல்ப்-கவர்னிங் பாடியாக விளங்கக்கூடியது. ஆகவே, நடைமுறையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால் . . .

(Some hon. Members were seen conversing in a part of the House.)

திரு. என். மருதாசலம்: சார், இங்கே இவர் பேசிக் கொண்டிருக்கிறார். அவர்கள் அங்கே பேசிக் கொண்டிருக் கிறார்களே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அங்கே தனி சபை நடக்கிறது! (சிரிப்பு).

திரு. மா. வே. நாராயணசாமி: எனவே, அடிப்படையில் மக்களாட்சி தத்துவத்தின் நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையிலே, நகராட்சிகள் நிறைவேற்றக்கூடிய தீர்மானங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய வகையிலே, நடைமுறைச் சங்கடங் களைக் களையவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, நகராட்சிப் பொறியாளர்களுக்கு, தேர்ட் கிரேட் இன்ஜினீயர்ஸ் என்று எடுத்துக்கொண்டால் 10 அல்லது 15 ஆண்டு களுக்கு முன்னே நிர்ணயித்த, ரூ. 8,000-க்கான மதிப்பீடுகளை மட்டுமே அவர்கள் அங்கீகரிக்கக்கூடிய நிலைமையிருக்கிறது. இன்றைக்குப் பள்ளிகளுக்கு பிளாக் கட்ட வேண்டுமென்றால் கூட ரூ. 40,000 தேவைப்படுகிறது. ஆகவே, அதற்காக பி.டபிள்யூ.டி. இன்ஜினீயர்ஸ், ஹைவேஸ் இன்ஜினீயர்ஸ் இவர்களுடைய அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

ஆகவே, தேர்ட் கிரேட் இன்ஜினீயர்ஸ்-ஆக இருக்கிற நகராட்சி மன்றப் பொறியாளர்களுக்கு ரூ. 8,000 என்பதை ரூ. 40,000 என்று உயர்த்தவேண்டும். டெக்னிக்கல் சாங்க்ஷன் ரூ. 40,000 வரையிலும் வழங்கவேண்டுமென்ற நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி மன்றத் தலைவர், அவசர வேலையாக ஒரு வேலையை ஒப்படைக்க வேண்டுமென்றால் ரூ. 1,500 தான் ஒப்படைக்க முடியும். அது சரியல்ல குறைந்தபட்சம் ரூ. 5,000-ஆவது ராட்டிஃபிகேஷன் எதிர்பார்த்து ஒப்படைக்க வழியிருக்க வேண்டும். ஆகவே, ஒப்பந்தக்காரருக்கு நகராட்சிமன்றத் தலைவர் ஒரு வேலையை ஒப்படைக்க வேண்டுமென்றால் ரூ. 5,000 வரையாவது இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இவற்றையெல்லாம் சேர்த்து, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டத்தைத் திருத்தவேண்டும். ஒரு புதிய சட்டம், காம்ப்ரஹென்சிவ் சட்டம் என்ற முறையிலே விரைவிலே கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் நகராட்சிகள் ஆய்வாளர் அலுவலகம் — of Municipalities office. அதுதான் நகராட்சிகளோடு நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள அலுவலகம். அவர்களுடைய அலுவலகத்தில், நகராட்சி வேலைகள் சம்பந்தப்பட்ட எந்தத்

துறையானாலும், அது பி.டபிள்யூ.டி.-யானாலும் சரி, ஹைவேஸ் ஸானாலும் சரி, ஹெல்த்தானாலும் சரி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நகராட்சிகள் ஆய்வாளரோடு இணைக்கப்பட்ட அளவிலேதான் இருக்கவேண்டும். நகராட்சி மன்றத்தில் நாங்கள் தீர்மானம் போடுகிறோம். அது அடுத்துச் செல்ல வேண்டியது நகராட்சி ஆய்வாளர் அலுவலகத்திற்கு. அடுத்துச் செல்ல வேண்டியது அரசாங்கத்திற்குத்தான். அதை விடுத்து, பி.டபிள்யூ.டி., ஹைவேஸ் இன்னும் பப்ளிக் ஹெல்த் அலுவலகத்திற்கு, எல்லா இடங்களுக்கும் செல்வதால், வேலைகள் தேக்கப்படுகிற அவல நிலைமை யிருக்கிறது. ஆகவே, ஆண்டாண்டு காலமாக வேலைகள் தடைபட்டிருப்பதை நாங்கள் காண்கிறோம். இதுபற்றி நகராட்சித் தலைவர்கள் பேரவைக் கூட்டத்தில் நாங்கள் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். நகராட்சி ஆய்வாளர் அலுவலகம் சம்பந்தப்பட்ட எல்லா துறைகளுமடங்கிய மைய அலுவலகம் அமைக்கப்பட வேண்டுமென்பதை நான் வலியுறுத்தி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையிலே, பிரச்னைகளை அரசு அணுகுமானால் உள்ளபடியே நகராட்சிகளுடைய பல்வேறு பிரச்னைகள், நீண்ட நாளைய பிரச்னைகள் எல்லாம் விரைவிலே தீர வாய்ப்பிருக்கும்.

நான் மொத்தமாக தெரிவித்துக்கொள்கிறேன், நகராட்சிகளுக்குத் தற்போதுள்ள அதிகாரம் போதாது. இது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய கருத்து. இன்னும் சொல்லப்போனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், நகராட்சித் தலைவர்கள் பேரவைக் கூட்டத்திலே அந்தக் கருத்துச் சொல்லப்பட்ட நேரத்திலே, அதை மனப்பூர்வமாக வரவேற்றார்கள். அந்த அடிப்படையிலே, இன்றையதினம் நடைமுறையிலே ஒரு பணியை மேற்கொள்ள வேண்டும், ஒரு சாலையை அமைக்க வேண்டும், அல்லது சுகாதார அடிப்படையிலே அங்குள்ள கழிவு நீரை அப்புறப்படுத்த வேண்டும் அதற்கு ஒரு டிரக்கை வாங்க வேண்டும், அல்லது லாரியை வாங்க வேண்டுமென்றால் for removal of Cess-Pool water இரண்டு ஆண்டுக்காலம் ஆனாலும் அனுமதி கிடைப்பதில்லை. அரசாங்கத்திலிருந்து அதற்குப் பணம் போக வில்லை. நகராட்சி மன்ற நிதியிலிருந்துதான் செலவிடுகிறோம். ஆனால், அதற்குக்கூட அனுமதி மறுக்கப்படுகிறது. நான் விடுக்கக் கூடிய வேண்டுகோள், எல்லா நிலைமைகளையும் ஆய்வு செய்து

தீர்மானம் கொடுத்திருக்கிறோம். ஆனால் அந்த அதிகாரி . . .

(Some hon. Members were seen conversing in a part of the House.)

திரு. மு. சின்னசாமி : ஆன் எ பாய்ன்ட் ஆஃப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரமாயிற்று.

திரு. மு. சின்னசாமி : ஆன் எ பாய்ன்ட் ஆஃப் ஆர்டர், சார். அங்கே ஒரு போட்டி சட்டசபை நடந்து கொண்டிருக்கிறது. அது நியாயமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது போட்டி சட்டசபை அல்ல. நமக்கு உதவிகரமாக இருக்கிற சட்டசபைதான். அவர்கள் போய்விட்டால் கோரமிருக்காதல்லவா . . . (சிரிப்பு)

திரு. மா. வே. நாராயணசாமி : ஆகையினாலே, அதிகாரிகள் நினைத்தால் அல்லது ஒரு சூப்பரின்டென்டென்ட் அளவிலேயுள்ள ஒருவர் நினைத்தால்கூட நகராட்சிமன்றத் தீர்மானங்களுக்கு வலுவில்லாத நிலைமை ஏற்பட்டுவிடும். அல்லது நகராட்சிமன்றத் தீர்மானம் ரத்து செய்யப்படக் கூடிய அளவுக்கு நிலைமையை தோற்றுவிக்கிறது என்பதை நிச்சயமாகத் தவிர்த்தாகவேண்டும். ஏதோ அதிகாரிகளுடைய ஆட்சி நடக்கிறது என்ற நிலைமை இருக்கிற மாதிரி இருக்கிறது. மக்களாட்சித் தத்துவப்படி நகர மன்றங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றுகின்றன, மக்களுடைய வரிப்பணத்திலிருந்து மக்களுடைய நன்மைக்காக இந்த இந்தப் பணிகள் செய்யப்பட வேண்டுமென்று தீர்மானங்களை நிறைவேற்று கின்றபோது அது கூடாது என்று தொலை தூரத்திலே இருக்கின்ற அதிகாரிகள் தங்களுடைய பேனா முனையிலே அந்த மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படையையே தகர்த்துவிடக்கூடிய நிலைமை இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்து, உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கையின்மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன்.

1975 ஏப்ரல் 5] [திரு. க. உரொ. எட்மண்ட்]

நம்முடைய இதய தெய்வம் பேரறிஞர் அண்ணு அவர்கள் நாட்டிலே கிராம ராஜ்யம் உருவாக்க வேண்டுமென்று காந்தியடிகள் சொன்னதைத் தான் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னலே செயல் படுத்துவதிலே ஈடுபட்டார்கள் என்பதை இந்த மன்றத்திலே உள்ள எல்லா உறுப்பினர்களும் அறிவார்கள். மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் கிடைத்தாலும்சரி கிடைக்காவிட்டாலும்சரி இந்த மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகள் எல்லாம் ஊராட்சி மன்றங்களும், பேரூராட்சி மன்றங்களும், நகர மன்றங்களும் கூடுதல் அதிகாரங்களைப் பெறவேண்டுமென்ற முறையிலே அவர் களுக்குக் கூடுதல் அதிகாரங்களைக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே நம்முடைய பேரறிஞர் அண்ணு அவர்கள் வலியுறுத்தி யிருக்கிறார்கள்.

ஆனல், அண்ணு அவர்களுடைய மறைவிற்குப் பிறகு தி.மு.க. ஆட்சி கடந்த 5 ஆண்டுகள் நிறைவு பெற்றிருந்தாலும்கூட இன்னும் ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், நகர மன்றங்கள் இவைகள் எல்லாம் கூடுதலான அதிகாரங்களைப் பெறவில்லை என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த மன்றத்திலே பேசிய தி.மு.க.-வினைச் சேர்ந்த உறுப்பினர்கள்கூட பலர் ஊராட்சி ஒன்றியங்களுடைய பெருந் தலைவர்களாகவும் நகரமன்றங்களின் தலைவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் இந்த மன்றத்திலே தங்களுடைய குறைகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள், திரு. நாராயணசாமி அவர்கள் பேசும்போதுகூட, திரு. கணபதி நாடார் பேசிய நேரத்திலேயும் ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கும் உள்ளாட்சி மன்றங்களின் தலைவர்களுக்கும் கூடுதல் அதிகாரங்களைக் கொடுக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி இங்கே எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். அவர்களுடைய உள்ளக் குமுறலை இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இவ்வளவு காட்டியதற்குப் பிறகும் கூட மத்திய ஆட்சி மாநில சுயாட்சி கொடுக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருக்கிற ஆட்சி தங்களுக்குக் கீழே உள்ள உள்ளாட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் இவைகளுக் கெல்லாம் கூடுதலான அதிகாரங்களைக் கொடுக்கக்கூடிய வசதி வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பார்கள் என்று எதிர் பார்க்கிறோம். ஆனல் அதே நேரத்திலே உள்ளாட்சி மன்றங்

களுக்குக் கூடுதலான அதிகாரங்களைக் கொடுப்பது மட்டுமல்ல, அதிகாரங்களைப் பெறுகிறவர்கள் மக்களாலே தேர்ந்தெடுக்கப் படுகிறவர்களாக இருக்கவேண்டுமென்பதையும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் ஊராட்சி மன்றத் தலைவர்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் ஒன்றியப் பெருந்தலைவர்கள் பதவிகளை வகிப்பவர்கள், நகராட்சி மன்றங்களின் தலைவர்களாக பதவி வகிக்கிறவர்கள் இன்னும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய நிலைமை தமிழகத்திலே உருவாக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைப்பற்றி அரசாங்கத் தரப்பிலே சொல்கின்ற நேரத்திலே நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அன்பில் அவர்கள் முன்பு உள்ளாட்சித் துறை அமைச்சராக அந்தப் பொறுப்பிலே இருந்தபோது அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிவந்தார்கள்.

(திரு. கு. காமாட்சி தலைமை)

ஆனால் எவ்வளவு காலத்திற்கு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பது? இன்னும் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்க வேண்டுமா? எங்களுக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம் உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறபோது ஒன்றியப் பெருந்தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள் இவர்கள் எல்லாம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதை ஏன் ஒத்திவைக்கவேண்டும் என்பதுதான் எங்களுக்கு இருக்கிற சந்தேகம். அதிலே ஒன்றும் சிரமமில்லை. ஒரு ஒன்றியத்திலே பெருந்தலைவர் தேர்தலையும் சேர்த்து நடத்தலாம், இரண்டு வாக்கு சீட்டுகள் வாக்காளர்கள் போடவேண்டியிருக்கும் அவ்வளவுதான், ஒரே பெட்டி. இதிலே என்ன சிரமம்?

அதேபோன்று நகரமன்றங்களுக்குத் தேர்தல் நடத்துகிற நிலையில் நகர மன்ற உறுப்பினர்களுடைய தேர்தலையும் தலைவர் தேர்தலையும் நடத்திவிடலாம்: ஒருவேளை தேர்தலை நடத்தினால் தி.மு. கவை சேர்ந்தவர்கள் ஒருவரும் உள்ளாட்சித்துறை பதவிக்கு வரமுடியாது என்ற சந்தேகம் உங்களுக்கு இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. ஒத்திப்போட்டுக்கொண்டே இருக்கிறீர்கள். அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதை கூடியவிரைவிலே சட்டமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நாட்டு மக்களுடைய அடிப்படை ஆட்சித் துறை உள்ளாட்சி மன்றங்களும் ஒன்றியங்களும்தான்.

1975 ஏப்ரல் 5] [திரு. க. உரொ. எட்மண்ட்]

1969 ஆம் ஆண்டிலே நகராட்சி மன்றங்கள் தேர்தல் நடந்தது. 1969 முதல் 1974 ஆம் ஆண்டு வரையில் 5 ஆண்டுகள் போய் விட்டன, ஐந்து ஆண்டுகள் முடிந்து ஆருவது ஆண்டிலே இருக்கிறோம், அதேபோன்று 1970 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடந்தது. இப்போது நான்கு ஆண்டுகள் முடிந்து ஐந்தாவது ஆண்டிலே இருக்கிறோம். எதற்காக இன்னும் ஒன்றியத் தேர்தலையும் உள்ளாட்சி, நகராட்சி மன்றத் தேர்தல்களையும் நீங்கள் நடத்தாமல் இருக்கிறீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்சொல்கின்ற நேரத்திலே சொல்ல வேண்டும். இந்தத் தேர்தல்கள் எப்போது நடத்தப்படும் என்பதையும் அருள் கூர்ந்து சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போதே சில மன்றங்களில் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் பொறுப்பிலே இருக்கிருர்கள். கலைக்கப்பட்ட சென்னை மாநகராட்சிக்கு தேர்தலை நடத்தாமல் இருக்கிருர்கள், கலைக்கப்பட்ட மதுரை மாநகராட்சிக்குத் தேர்தலை நடத்தாமல் இருக்கிருர்கள்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானுல் நெல்லை மாவட்டத்திலே ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சி இருக்கிறது அதன் தலைவர் ஏறத்தாழ 3 ஆண்டுக்காலத்திற்கு முன்னுல் என்று நினைக்கிறேன், கொலைசெய்யப்பட்டார், அந்த வழக்குகூட முடிந்து குற்றத்தைச் செய்தவர்கள் 2 ஆண்டுக்காலமாக தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிருர்கள். ஏதோ அவரைத் தேர்ந்தெடுத்த குற்றத்திற்காக ஸ்ரீவைகுண்டத்து மக்கள் இப்போது தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிருர்கள். இன்னும் அதற்குத் தேர்தல் நடத்தப்படவில்லை. அந்தத் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினர் இந்த அமைச்சரவையிலே அமைச்சராக இருக்கிருர். இந்த அமைச்சரவையிலே ஒரு செல்வாக்குள்ள அமைச்சராக இருக்கிருர். ஆகவே இந்தத் தேர்தலை அங்கே நடத்திஞல் ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சிக்கு தேர்தல் நடத்திஞல் தி.மு.க. வராது, அது எங்களுக்குத்தெரியும், அப்படி வராதபோது அதனுல் இங்கே அமைச்சராக இருக்கிறவருக்கு இழுக்கு ஆக இருக்குமோ என்று எண்ணி உன் தொகுதியிலே ஒரு பேரூராட்சி தேர்தலில் கூட கட்சியைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று

சொல்லிவிடுவார்களோ என்ற எண்ணத்தில் அமைச்சரவை அவர் மீது பரிவுகாட்டி இதை ஒத்திப்போட்டிருக்கிறார்கள் என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். தேர்தல்கள் எங்கே, எங்கே நடத்தவேண்டுமோ அங்கேயெல்லாம் நடத்தவேண்டும், தமிழ்நாடு முழுமையாக உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

எப்படி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மாநில சுயாட்சி என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களோ அதைப்போன்று எல்லா உள்ளாட்சித் துறைகளிலேயும் உள்ளவர்கள் எல்லாம் பெரிய கோரிக்கையை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதில் தீவிரம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வாரத்திற்கு முன்னால் திருவண்ணாமலையிலே அச்சடிக்கப்பட்ட நோட்டீஸ் எனக்கு வந்தது. அதிலே உள்ளதை நான் படிக்கிறேன் சிந்திப்பீர், செயல்படுவீர், கடமைக்குக் கைகொடுப்போம். உரிமைக்கு உயிர் கொடுப்போம். . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): அதிலே உள்ள கருத்துக்களைச் சொல்லுங்கள், படிக்கவேண்டாம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: அவர்களே ரத்தினச்சுருக்கமாக இதிலே சொல்லியிருக்கிறார்கள் படித்துவிடுகிறேன். "நகர சுயாட்சி —மாநில சுயாட்சிதான் நாம் கேள்விப்பட்டோம், புதிய சுயாட்சி கோரிக்கை இது—வருகிறது, புரட்சி தி.மு.க. சார்பில் தனிக்கொடி யேற்றுவோம். வாரீர், வாரீர், ஆதரவுதாரீர்"—அவை நியாயமான கோரிக்கைகள், அந்தக் கோரிக்கைகளைப்பற்றித்தான் நான் பேசுகிறேன்.

(பிற்பகல் 12-30)

அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்,

1. நகராட்சி மன்றங்கள் எடுத்ததற்கெல்லாம் மாநில அரசின் அனுமதிக்காக காத்திருக்கும் அடிமை நிலைமாற,

2. மாநில அரசின் அதிகார ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு நகராட்சிகள் சுயமாக செயல்பட,

3. நகராட்சிகள் சுயமாக வருவாயினை பெருக்கிகொள்ள நகர பொதுப்பணிகள் காலதாமதம் இல்லாமல் விரைவாக செயல்பட,

1975 ஏப்ரல் 5] [திரு. க. உரொ. எட்மண்ட்]

4. லஞ்சம், ஊழல், வேண்டியவர்களுக்கு சலுகை, அதிகார துஷ்பிரயோகம் இவைகள் தவிர்க்கப்பட,

5. ஆணையாளர்கள் மாநில ஆளும்கட்சியின் நகரசெயலாளர்கள் போல் செயல்படும் அவல நிலை சீர்பட இன்னும் பல வகையில் மாற்றம் காண அரசியல் விழிப்புணர்ச்சி பெற எல்லா கட்சிகளிலும் உள்ள நாட்டின் நலனில் அக்கறையுடைய நகரின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட பொது நல வாதிகள் ஒரு முகமாக ஒன்று படுவீர் நகர சுய ஆட்சியினை வலியுறுத்தி.

திரு. நா. வீராசாமி: அவர்கள் படிக்கிறார்கள், அதை அவர்கள் ஆதரிக்கிறார்களா?

திரு. க. உரொ. எட்மண்ட்: நானும் அதை ஆதரித்துத்தான் பேசுகிறேன். இதையெல்லாம் சொல்லிவிட்டுக் கடைசியாக,

திருவண்ணாமலை மலைமீது 6—4—75 ஞாயிறு காலை 10 மணிக்கு புரட்சி தி.மு.க. சார்பில் தனிக்கொடி ஏற்றுவோம் வாரீர், ஆதரவு தாரீர்

உங்கள் ஊழியன்

அ. புரட்சிதாசன்,

புரட்சி தி.மு.க. அமைப்பாளன்

என்று ஒரு நோட்டீஸ் வந்திருக்கிறது

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் உண்மையிலேயே இதை மனதார ஆதரிக்கிறோம். உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(THIRU N. VEERASAMI rose).

THIRU G. R. EDMUND: I am not yielding. The Chair is restricting my time and the hon. Member is taking away my time. So, I am not yielding.

MR. DEPUTY SPEAKER: Let the hon. Member G. R. Edmund carry on.

THIRU N. VEERASAMI: Sir, point of order.........

THIRU G. R. EDMUND: I am not yielding.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி 'ரைட்டை' மிஸ்யூஸ் செய்யாதீர்கள்.

திரு. நா. வீராசாமி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். நகர சபைக்குத் தனிக்கொடி, நகரசபைகளுக்கு அதிக அதிகாரங்கள், அதிக சுயாட்சி, இதை அண்ணா தி.மு.க. வரவேற்கிறதா, ஆதரிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். இதை அவர்கள் ஆதரித்தால், ஒரு மாநிலத்திற்கு சுயாட்சி வேண்டுமென்று சொல்கிறோம், அதை ஆதரிக்க மறுக்கிறார்களே ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டர்?

திரு. க. உரா. எட்மண்ட் : அவர்கள் திசை திருப்புகிறார்கள்.

திரு. நா. வீராசாமி : இதையே அவர்கள் ஆதரிக்கும்பொழுது, இதைவிடப் பெரியது மாநிலம். . .

திரு. க. உரா. எட்மண்ட் : ஏற்கனவே இதுபற்றி விவாதித்திருக்கிறேன். இந்த மன்றத்திலே பேசியிருக்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், கூடுதல் அதிகாரங்கள் வேண்டும் என்று நாங்கள் கேட்கிறோம். ஆனால் நீங்கள் கேட்கின்ற மாநில சுயாட்சியில் எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது. நீங்கள் மாநில சுயாட்சி என்ற கோரிக்கையை வைப்பதன்மூலம் உண்மையிலேயே மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்களைத்தான் கேட்கிறீர்களா அல்லது மாநிலம் தனியாகப் பிரிந்து தனித் தமிழ்நாடு உருவாக வேண்டுமென்ற கோரிக்கையை உள்ளத்திலே வைத்துக்கொண்டு, வெளியிலே கூடுதல் அதிகாரங்கள் என்று சொல்கிறீர்களா என்ற சந்தேகம் இருக்கிறது என்று ஏற்கனவே சொல்லிவிட்டேன்.

அந்த அளவிற்கு அதிகாரங்களை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்தப் பொறுப்புகளை வகிக்கவேண்டும். நான் இதைத்தான் முதலிலே வலியுறுத்தினேன். 1960-ஆம் ஆண்டில் இந்தக் கருத்து இதே மன்றத்தில் பேசப்பட்டது. 1960-ஆம் ஆண்டில் இப்பொழுது மத்திய அமைச்சராக இருக்கின்ற திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய அவை முன்னவராக

இருக்கும் நேரத்தில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை எப்படி நடத்துவது என்பதற்கு ஒரு குழு அமைத்தார்கள். அந்தக் குழுவிலே திராவிட முன்னேற்றக் கழகத்தில் சார்பில் காலஞ் சென்ற மாண்புமிகு அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. கோவிந்தசாமி அவர்கள் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். அந்தக் குழு என்ன பரிந்துரை செய்திருக்கிறது என்றால் உள்ளாட்சி மன்றங்களின் தலைவர்கள், தேர்தலில் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற குறிப்பேட்டை அந்தக் குழு இந்த மன்றத்திலே சமர்ப்பித்திருக்கிறார்கள். ஆக, 1960-இல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. கோவிந்தசாமி அவர்கள் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 15 ஆண்டுக் காலமாகியும், நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகும் இன்னும் ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலையும், நகராட்சி மன்றத் தலைவர் தேர்தலையும் இன்னும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய நிலைமையை உருவாக்கித் தரவில்லை.

அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கினால் நீங்கள் சில அதிகாரங்களை அவர்களுக்குக் கொடுத்தாக வேண்டும். இன்றைய தினம் அவர்கள் சில கோரிக்கைகளை வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்கள். இன்றையதினம் ஊராட்சி மன்றங்களானாலும் சரி, நகராட்சி மன்றங்களானாலும் சரி அவர்களுக்குப் போதுமான அதிகாரம் இல்லை. நகராட்சி மன்றங்களுக்குள்ளே, ஊராட்சி மன்றங்களுக்குள்ளே அங்கேயே வாழும் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூட அவர்களுக்கு அதிகாரங்கள் இல்லை. இரண்டாவதாக, அவர்களிடத்தில் போதுமான நிதி இல்லை. அதிகாரங்கள் இல்லை, எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தைக் கேட்கவேண்டியிருக்கிறது.

ஒரு ஊராட்சி மன்றத்திற்குச் சொந்தமான கட்டிடம் அல்லது நகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான கட்டிடத்திலே மைனர் ரிப்பேர்ஸ், சிறுசிறு பழுதுகள் பார்க்க வேண்டியிருந்தாலும் அல்லது அதற்கு வெள்ளையடிக்க வேண்டுமென்றாலும்கூட அதைக் கூட ஹைவேஸ் டிபார்ட்மெண்டிலேதான் செய்ய வேண்டியிருக்கிறது. நகராட்சி மன்றங்களுக்கு வருமானம் இருக்கிறது. ஊராட்சி மன்றங்களுக்கு வருமானம் இருக்கிறது, ஒன்றியங்களுக்கு வருமானம் இருக்கிறது. அவர்கள் தங்களுடைய நகரா

முன்னேற்றத்திற்குச் சில காரியங்களைச் செய்ய, இந்தச் சின்னச் சின்ன வேலைகளைக்கூட அவர்களால் செய்ய முடியவில்லை. அதற்கும் அரசாங்கத்தை அணுகி நம்முடைய பெருவழித்துறை மூலமாக இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், சில தீர்மானங்களைக்கூட அவர்களால் போட முடியவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் நகராட்சி மன்றங்களிலேயும், ஊராட்சி ஒன்றியங்களிலேயும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சில முக்கியமான பிரச்னைகளின்மீது தீர்மானங்களைப் போட வேண்டுமென்றாலும்கூட, சில தீர்மானங்களைப் போட்டு அதை அரசாங்கத்திற்கு அனுப்பினால், இங்கேயுள்ள அதிகாரிகள் கேள்வி கேட்கிறார்கள். எதற்காக இப்படியொரு தீர்மானம் போட்டாய். உங்களை யார் போடச் சொன்னது? மரியாதையாக இந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெறுகிறீர்களா அல்லது நகரசபையின்மீது நடவடிக்கை எடுக்கட்டுமா என்று கேட்கும் நிலையிருக்கிறது.

பாளையங்கோட்டை நகராட்சி மன்றத்திலே ஒரு சம்பவம் நடந்தது. இரண்டாண்டுகளுக்கு முன்னால் ஒரு மாணவர் லூர்து நாதன் இறந்து விட்டார். உடனே நகரத்திலே பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டது. உடனே நகர்மன்ற உறுப்பினர்கள் கூடி ஒரு தீர்மானம் போட்டார்கள். லூர்துநாதன் அடித்துக் கொல்லப்பட்டான், அவனை இந்த நிலைக்கு ஆளாக்கிய காவல் துறையினரின் தன்மையைக் கண்டிக்கும் ஒரு தீர்மானத்தை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நகராட்சி மன்றத்திலே போட்டு அனுப்பினார்கள். உடனே அரசாங்கத்திலிருந்து கேள்வி போகிறது, எப்படிப் போட்டீர்கள்? இது பொதுப்பிரச்னை, இதைத் திரும்பப் பெறுகிறீர்களா அல்லது நடவடிக்கை எடுக்கட்டுமா என்று பயமுறுத்தியிருக்கிறார்கள். நான் கேட்பதெல்லாம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்கள், நகரசபையிலே இருந்துகொண்டு தங்கள் நகரத்தின் எல்லைக்குள்ளே வேண்டாத, விரும்பத் தகாத சம்பவம் நடந்திருக்கிறது, அதற்குத் தங்களுடைய அதிருப்தியைக் காட்டி கண்டனத் தீர்மானம் எழுப்புவதற்கு உரிமையில்லை என்றால் அந்த நகரசபை இருப்பது தான் தேவையா என்பதை இந்த மன்றத்திலேயுள்ளவர்கள்

எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த அளவிற்கு இன்றையதினம் அவர்கள் பல அதிகாரங்கள் இல்லாமலிருக்கிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமென்றால். .

திரு. செ. கந்தப்பன்: தலைவரவர்களே, ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார், அதை போலீஸ் செய்தது என்ற உணர்ச்சி அந்த மக்களுக்கு இருந்தால் நம் நாட்டில் ஒத்துக்கொள்ளப்பட்ட அந்த அமைப்பின் அடிப்படையில் யாரால் அடித்துக் கொல்லப் பட்டார் என்று சொல்ல வேண்டியது நீதிமன்றம் தானே தவிர நாமே நீதிபதிகளாக ஆக முடியாது. எனவே, விவரம் தெரிந்த நம்முடைய எட்மண்ட் அவர்கள் நகர் மன்றம் நீதிமன்றத்தின் ஜூரிஸ்டிக்ஷனை எடுப்பது சரி என்று வாதாடுகிறார்களா?

திரு. க. உரொ. எட்மண்ட்: நம்முடைய மாண்புமிகு உறுப் பினர் திரு. கந்தப்பன் அவர்கள் கேட்ட கேள்வியைப் பொறுத்த வரையில் நகர்மன்றம் நீதிமன்றத்தின் வேலையைச் செய்யக் கூடாது, அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அவர் களுக்குச் சில சம்பவங்கள் தெரிகிறது, போலீஸ் அடித்து அந்த மாணவர் இறந்தார் என்று. அதெல்லாம் பெரிய கதை. ஆனால் இதற்காகக் கண்டனம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றுவதில் கூட என்ன தப்பு வந்துவிட்டது? இன்னும் சொல்ல வேண்டு மென்றால் நீதி விசாரணைக்காக நியமித்தீர்கள், அவர்கள் என்ன தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள்? காவல் துறையினர் அத்துமீறி நடந்து கொண்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற் காக ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர், இரண்டு மூன்று போலீஸ் கான்ஸ்டபிள்கள் மேல் வழக்குப் போடப்பட்டு அதில் சில போலீஸ் கான்ஸ்டபிள்கள் தண்டிக்கப்படுகிறார்கள், வழக்கு நடக்கும் பொழுது சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இறந்துவிட்டார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படித் தீர்மானம் போடும்பொழுது நண்பர் இறந்து விட்டார் என்று அனுதாபத் தீர்மானம் போடலாம். அதை மறுக்கவில்லை. லூர்துநாதன் அப்படிக் கொல்லப்பட்டதற்காக நகர்மன்றம் தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது என்று போடலாம். அதோடு இணைத்து, காவல்துறையினர் மீது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது, அதைப் பாராட்டுகிறோம் என்று சேர்த்துப்

போட்டால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் வேண்டுமென்று அரசாங்கத்தைக் கண்டிக்கும் வகையில் தீர்மானம் போடும் பொழுதுதான் சங்கடங்கள் வருகின்றன.

திரு. க. உரொ. எட்மண்ட் : சங்கடங்கள் ஏற்படலாம். இப்படி ஒரு தீர்மானத்தை நகரசபையிலே உள்ளவர்கள் போடும்பொழுது, நீதி மன்றத்திலே வழக்கு நடக்கிறது. அந்த நீதிபதியின் மூளைக்கும் அந்தச் செய்தி எட்டுகிறது. போலீசார் அத்துமீறி நடந்திருக்கிறார்கள் என்று நகரசபையிலே தீர்மானம் போடும் பொழுது, நீதிபதியும் மனிதன்தான், அவர் தெய்வம் அல்ல.

அப்படி ஒரு தீர்மானம் போட்டு அனுப்பிவிட்டார்கள். அது பத்திரிகையிலே எல்லாம் வந்து விட்டது. அதற்குப் பிறகு அதைத் திரும்பப் பெறுகிறாயா இல்லையா, நடவடிக்கை எடுக்கட்டுமா என்று கேட்பது எப்படி முறையானது? அறிவுரையாகச் சொல்லலாம். இப்படிப்பட்ட தீர்மானங்களை இனி போடாதீர்கள் என்று சொன்னால் விஷயம் முடிந்து விடுகிறது. தீர்மானங்கள் போடக்கூட உரிமையில்லையா? (மணி அடிக்கப் பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே 20 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். இன்னும் 5 நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : 10 நிமிடம் கொடுங்கள். அதிலே கூட நான் ரஷ் அப் பண்ண வேண்டும் வித் அவுட் எனி இன்டரப்ஷன்.

தலைவர் அவர்களே, அநேகமாக எல்லா ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில் போதுமான வருமானம் இல்லை. நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால் பற்றாக்குறை பட்ஜெட்டாகத்தான் இருக்கும். அவர்களுக்குச் சில சலுகைகளை வழங்க வேண்டும். பணம் இல்லையென்றால் அவர்கள் அரசாங்கத்திடம்தான் வருகிறார்கள். ஊராட்சிகள், நகராட்சிகளின் வருமானத்தைப் பெருக்க பல வழிகள் இருக்கின்றன. ஊராட்சி எல்லைக்குளே, நகராட்சி எல்லைக்குள்ளே வருகின்ற என்டர்டெய்ன்மென்ட் டாக்ஸ்,

1975 ஏப்ரல் 5] [திரு. க. உரொ. எட்மண்ட்]

சர்சார்ஜ் எல்லாவற்றிலும் அரசாங்கம் பங்கு வாங்குகிறது. அதிலே வருகிற வருமானம் முழுவதும் நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் போகவேண்டும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : என்டெர்டெய்ன் மென்ட் டாக்ஸ் கலெக்ட் பண்ணுவதற்காக மைனர் பஞ்சாயத்துக் களிடத்திலிருந்து 5 சதவீதம் தான் வசூல் பண்ணிக் கொடுக்கி ருர்கள். அதே மாதிரிதான் நகராட்சிகளுக்கும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : சரியான பர்சன்டேஜ்தான் கேட்கிருர்கள்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 90 சதவீதம் அவர் களுக்குத்தான் போகிறது. 10 சதவீதம் தான் கலெக்ஷன் சார்ஜஸ் என்று நாம் வாங்கிக் கொள்கிருேம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நான் சொல்லுவது முழுவதும் கொடுத்து விடுங்கள். அந்த ஊரில் காட்சி நடக்கிறது. தியேட்டர் இருக்கிறது. 90 சதவிகிதம் அவர்களுக்குக் கொடுத்து விட்டு அரசாங்கம் ஏன் 10 சதவிகிதம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 10 சதவிகிதம் நிர்வாகச் செலவுக்காகத்தானே தவிர, அட்மினிஸ்ட்ரேட்டிவ் சார்ஜஸ் தானே தவிர, அரசாங்கத்திற்கு அல்ல.

திரு க. உ.ரொ. எட்மண்ட் : சில நகராட்சி மன்றங்கள் டவுன் பஸ் விட அனுமதி கேட்கிருர்கள். கொடுத்தால் என்ன? லாபம் கிடைக்கலாம், திறமையாக நடத்திஞல். (குறுக்கீடு) ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் கூட எங்களுடைய மாவட்ட அமைச்சர் ஆதித்தன் அவர்கள் இருந்தபோது நட்டத்தில் ஓடிற்று. மாண்புமிகு அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் வந்த பிறகு தான் 2 கோடி ரூபாய் லாபம் கிடைக்கிறது. நடத்துகிறவர்கள் நடத்திஞல் ஆதாயம் கிடைக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொதுவாக நகர வழித்தடங்களில் லாபம் வராது. மராட்டிய மாநிலத்திலே நகர சபைகளுக்கு அப்படி அனுமதி கொடுத்திருக்கிருர்கள். இப்போது நகரசபைகள் நடத்துவதைப் பற்றி மறு பரிசீலனை செய்து கொண்டிருக்கிருர்கள்.

திரு. க. உரோ. எட்மண்ட்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லாபம் வராது என்று சொல்லுகிறார்கள். பெசிமிஸ்டிக்காக இருக்கக்கூடாது 'ஆப்டிமிஸ்டிக்காக' இருக்கவேண்டும். தனிப்பட்டவர்கள் டவுன் பஸ் ஓட்டுகிறார்கள். 4 பஸ் வைத்திருந்தவன் இரண்டு வருஷம் கழித்து 10 பஸ் ஓட்டுகிறான். ஒரு பஸ் ஓட்டுகிறவன் ஒரு வருஷம் கழித்து இன்னொரு ரூட் கேட்கிறான். ஆகவே, நகரசபைகளுக்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்து அவர்களுடைய வருமானத்தைப் பெருக்க வழிவகை செய்ய வேண்டும்.

லைசென்ஸ் கொடுக்கிற அதிகாரம் கூட இல்லை. சில கட்டிடங்களுக்கு லைசென்ஸ் வாங்க பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டுக்கு வந்து வேலைகள் செய்ய வேண்டியிருக்கிறது. சிறு சிறு வருமானங்கள் வருவதைக் கூட அரசாங்கம் எடுத்துக் கொள்கிறது. கிராமப் பஞ்சாயத்துக்களில் குளங்கள் இருக்கின்றன. அதிலே மீன் வளர்த்து ஆண்டுக் குத்தகைக்கு விடுவது என்றால் அதிலே ஏராளமான தொகை வருகிறது. அதை மீன் இலாகா வைத்திருக்கிறது. எங்கள் ஊரில் நீர்த்தாமரை என்று இருக்கிறது. உரக் குத்தகை விடுவது யார்? எங்களுடைய பகுதியில் தென்திருப்பேரை மேஜர் பஞ்சாயத்து. ஓராண்டுக்கு 7,000 ரூபாய் பற்றாக்குறை. லைட் போட, சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுக்கவே போதவில்லை. வேறு வேலை என்ன செய்வது? பஞ்சாயத்து எல்லைக்குள் ஒரு குளம் கடம்பா குளம். மீன் குத்தகைக்கு விட்டால் ஓராண்டுக்கு 15,000 ரூபாய் போகிறது. நீர்த்தாமரை 10,000 ரூபாய்க்கு ஓராண்டுக்குக் குத்தகைக்குப் போகிறது. அரசாங்கம் போய் குளத்திலே மீன் வளர்ப்பது ஏன்? இந்தத் தொகைகள் எல்லாம் அவர்களுக்கே கிடைக்கச் செய்ய வேண்டும். அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கும் அளவுக்கு அரசாங்கம் வழிவகை செய்தால் ஏன் அவர்கள் அரசாங்கத்திடம் உதவிக்கு வரப் போகிறார்கள். பள்ளிக்கூடம் கட்டப் பணம் வேண்டும், ரோடு போடவில்லை என்ற நிலைமை எல்லாம் ஏற்படாது. அந்த அளவிற்கு அவர்களுக்குக் கூடுதலான அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அண்மையில் சென்னையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நகராட்சித் தலைவர்கள் மாநாட்டில்

1975 ஏப்ரல் 5] [டாக்டர் மு. கருணாநிதி]

பேசிய நகராட்சித் தலைவர்கள் கட்சி பேதம் இல்லாமல் அனைவரும் கூடுதல் அதிகாரம் நகராட்சிகளுக்குத் தேவை என்று சொன்னார்கள். கூடுதல் அதிகாரங்களை நாங்களே கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, கூடுதல் அதிகாரங்களை இந்த ஆட்சி மறுக்காது. ஆகவே, உங்கள் பிரதிநிதிகள் அமர்ந்து என்னுடனும், உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுடனும், தொடர்புடைய அதிகாரிகளுடனும் கலந்து ஆலோசித்து எப்படிப் பட்ட அதிகாரங்கள் அவர்களுக்குத் தேவை என்று எடுத்துச் சொன்னால் அவற்றை வழங்க அரசு தயாராக இருக்கிறது என்று அந்த மாநாட்டில் உறுதியளித்தேன். இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மை டில்லியில் இருப்பவர்களுக்கு வர வேண்டுமென்று அவர்களோடு கூட்டுச் சேர இருக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 80 சதவிகிதம் வழிக்கு வந்தார்கள், 20 சதவிகிதம் மத்திய சர்க்காரைப் பற்றிச் சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவசரத்தில் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. நாங்கள் தருவதற்குத் தயார், அமர்ந்து பேசுவோம் என்று கூறியாகிவிட்டது. மாநாட்டில் உறுதிமொழி அளித்தாகிவிட்டது. இடையில் சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும் காரணத்தால் அந்தப் பணி நடைபெற வில்லை என்று நினைக்கிறேன். முடிந்தவுடன் நகராட்சி மன்றப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி எப்படிப்பட்ட அதிகாரங்களை நகரசபைகளுக்கு மேலும் வழங்கலாம் என்பதை நிச்சயமாக அரசு முடிவு செய்ய இருக்கிறது என்று குறிப்பிட்டேன். கூடுதல் அதிகாரங்களை அங்கே கேட்கிறீர்களே, இங்கே தர மறுக்கிறீர்களே என்ற வாதம் அவ்வளவு சரியானதாக இல்லை என்பதற்காகத்தான் குறிப்பிட்டேன். அங்கே கூடுதல் அதிகாரங்களைக் கேட்பதில் மாண்புமிகு எட்மண்ட் அவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: முதலமைச்சர் அவர்கள் நகராட்சிகளின் பிரிதிநிதிகளைச் சந்தித்துப் பேசி முடிவு செய்யப் போவதாகச் சொன்னார்கள். அதே போன்று கூடுதல் அதிகாரம்

மாநிலத்திற்கு வேண்டுமென்பதற்காக மாநாடுகள் போட்டுப் பேசுவதற்குப் பதிலாக, மேடைகளிலே எச்சரிக்கைகள் விடுவதற்குப் பதிலாக நேரடியாக டில்லியில் பிரதமர் அவர்களைச் சந்தித்து இன்னின்ன அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டார்களா? அப்படிக் கேட்டு அவர்கள் மறுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலே மாநில சுயாட்சி பற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிக அதிகாரங்கள் தேவை என்பது எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இந்த மாமன்றத்தில் நண்பர் சீனிவாசனே இருந்து ஓட்டு எடுத்ததாக ஞாபகம். அதிகாரங்கள் என்னென்ன வேண்டுமென்று அவைகளை எல்லாம் நாம் டில்லிக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். அவர்கள் எதுவும் தரமுடியாது என்று அறிவித்து விட்டார்கள். முடியாது என்று சொல்லுபவர்கள் அங்கே! முடியும் என்று சொல்லுபவர்கள் இங்கே!

திருமதி த. ந. அனந்தநாயகி: இங்கே கூட இந்திய நாட்டுப் பிரதமர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்? உங்களுடைய கோரிக்கையை என்னிடத்திலே சொல்லலாம். பெரிய பிரச்சினையாக இருந்தால் கலந்து ஆலோசித்துச் செய்யத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மீன் பிடிக்கும் பாசிக் குளத்திற்கு அதிகாரம் கேட்கும்போது ராஜராஜ சோழன் சிலை வைக்கும் விஷயம் சின்ன விஷயமல்ல. அங்கே புதிராகக் கோயில் கட்டலாம், ஆனால் சிலைதான் வைக்கக்கூடாது என்றால் அது பொருந்தாத கூற்று. அதுவே முழுமையான அதிகாரம் என்று நான் கூறவில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட்: முதலமைச்சர் அவர்கள் கூடுதல் அதிகாரங்களைக் கேட்டால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதைத்தான் சொல்லுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கூடுதல் அதிகாரங்களுக்குப் பெயர்தான் மாநில சுயாட்சி. கூடுதல் அதிகாரங்கள் கேட்பது எல்லாம் கிடைத்து விட்டால் மாநில சுயாட்சி முழுமையானதாக ஆகிவிடுகிறது.

1975 ஏப்ரல் 5]

திரு. க. உரொ. எட்மண்ட்: அங்கேதான் சந்தேகமாக இருக்கிறது. தனித் தமிழ்நாடு என்று சொல்லுகிறார்கள். முஜிபுர் ரஹ்மான் என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அண்ணாவை தென்னாட்டு பெர்னாட்ஷா என்றார்கள். அவர் தாடி வைத்துக் கொண்டாரா? அதைப் போல் முஜிபுர் ரஹ்மான், ஷேக் அப்துல்லா என்று சொன்னால் அப்படியே மாறிவிடுவேன் என்று அர்த்தம் அல்ல. சில உணர்வுகளுக்காகச் சொல்லப்படுகிறது. தென்னாட்டு பெர்னாட்ஷா என்று சொன்ன காரணத்தால் அண்ணா தாடி வைத்துக் கொள்ளவில்லை. தென்னாட்டு காந்தி என்றதற்காக கம்பு ஊன்றிக் கொண்டு முழத் துண்டு கட்டிக் கொள்ள வில்லை. உணர்வுகளுக்காகத்தான் சொல்லுகிறோமே தவிர, வேறு அல்ல.

திரு. க. உரொ. எட்மண்ட்: அப்படியென்றால் நேரடியாகச் சொல்லிவிடவேண்டும். நாங்கள் மாநில சுயாட்சி கேட்கவில்லை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள்தான் கேட்கிறோம் என்று சொல்லுங்கள். அப்போது நாங்கள் ஒத்துழைக்கத் தயாராயிருக் கிறோம். மாநில சுயாட்சி என்ற வார்த்தையை மறந்துவிடுங்கள். அண்ணா அவர்கள் கூட மாநில சுயாட்சி என்ற வார்த்தையைச் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அண்ணா அவர்களுக்கு இப்படி ஒரு களங்கம் கற்பிக்காதீர்கள். அண்ணா அவர்கள் சொல்லி எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அண்ணா அவர்கள் அளித்த பேட்டிபற்றி இங்கே எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. அண்ணா அவர்களது சொற்பொழிவுகள் இங்கே படித்துக்காட்டப்பட்டிருக்கின்றன. "Full State Autonomy" என்று குறிப்பிட்டு அண்ணா அவர்கள் பேசிய பேச்சுக்கள் எல்லாம் இந்த அவையில் ஆதாரங்களோடு தரப்பட்டிருக் கின்றன.

திரு. க. உரொ. எட்மண்ட்: கூடுதல் அதிகாரங்கள் என்றால் அதை ஏற்றுக்கொள்கிறோம். மாநில சுயாட்சி என்ற வார்த் தையை விட்டுவிடுங்கள். மாநில சுயாட்சி, மாநில சுயாட்சி என்று இனிமேல் சொல்லாதீர்கள். நாங்கள் கேட்பது என்பது அதிகப்படியான அதிகாரங்கள்தான் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சுயாட்சி என்ற வார்த்தையை அண்ணா அவர்கள் உச்சரிக்கவில்லை என்று சொன்னீர்களே அதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: அண்ணா அவர்கள் திராவிட நாடு என்று கூடச் சொன்னார்கள். ஆனால் பிறகு திராவிட நாடு கோரிக்கையை விட்டுவிட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதே அவையில் 1967-ல் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது பேசியிருக்கிறார்கள். திராவிட நாடு பிரிவினை என்ற கொள்கையை நான் கைவிட்டுவிட்டேன். ஆனால், மறுபடியும் அந்தப் பிரிவினைக் கொள்கையை மனதில் வைத்து வேறு யாராவது பேசுவார்களேயானால் அது வேறு. ஆனால் பிரிவினைக் கொள்கையை விட்டு விட்டேனே தவிர பிரிவினையை நான் கேட்டதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன என்று அழுத்தந்திருத்தமாக அண்ணா அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அந்தக் காரணங்களின் அடிப்படையில்தான் நாம் இன்று மாநில சுயாட்சி கேட்கிறோம். "Full State Autonomy" என்ற வார்த்தையை பல நேரங்களில் அண்ணா அவர்கள் இங்கு பயன்படுத்தியிருக்கிறார்கள். லோக் அயுக்த், லோக் பால் என்று அமைத்திருக்கிறார்கள். லோக் அயுக்த், லோக் பால் என்று அமைத்திருக்கிறார்கள். லோக் அயுக்த் என்ற திட்டத்தைத்தான் நாம் இங்கே சட்டமாக ஏற்படுத்தியிருக்கிறோம். தவறுகள் நடைபெற்றால் பொது மக்கள் புகார் செய்ய ஒரு சட்டத்தை நாம் இங்கே உருவாக்கி யிருக்கிறோம். லோக் பால் என்ற சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று சொன்னால் மாநில முதல் அமைச்சர், மற்ற அமைச்சர்களைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கக்கூடாது, அது ஏற்கனவே இருக்கிற ஸ்டேட் ஆட்டானமியைப் பாதிப்பதாகும் என்று அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள். கூடுதல் அதிகாரங்கள் மாநிலத்திற்கு கொடுத்து விட்டால் முழு அதிகாரமும் வந்துவிடும்.

என்று அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாம் கூடுதல் அதிகாரங்களைக் கேட்கிறோம். கூடுதல் அதிகாரங்கள் கிடைத்தால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வந்து விடும். அதற்குப் பெயர்தான் மாநில சுயாட்சி.

1975 ஏப்ரல் 5]

திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் மாநில சுயாட்சி இப்போது கிடைக்காவிட்டால் தமிழக சுயாட்சி கேட்பேன் என்று சொன்னார்கள். மாநில சுயாட்சிக்கும் தமிழக சுயாட்சிக்கும் உள்ள வேறுபாடு என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எல்லா மாநிலங்களும் இன்று கேட்கவில்லை, நீங்கள் மாத்திரம் கேட்கிறீர்களே என்ற வாதம் வைக்கப்பட்ட நேரத்தில் நான் சொன்ன பதில் அது. எல்லா மாநிலங்களும் மாநில சுயாட்சி தேவை இல்லை என்று சொல்வார்களேயானால் தமிழ்நாடு தனக்கு மாநில சுயாட்சி வேண்டும் என்று கேட்கும் என்று சொன்னேன். உதாரணத்திற்கு, ஒரு இருண்ட மண்டபத்தில் எண்ணெயும் திரியும் வைக்கப்படுகிறது. ஒரு குத்துவிளக்கு இருக்கிறது. அதன் ஐந்து முகங்களிலும் திரிகள் எரிய ஐந்து பெண்கள் தேவை இல்லை, ஒரு பெண் போய் ஒரு திரியை ஏற்றினால் அது எரியும், அதைக் கொண்டு ஐந்து முகங்களிலும் உள்ள திரிகளையும் ஏற்றலாம். அப்போது ஐந்து திரிகளும் எரியும். அம்மாதிரி முதல் திரியை திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் நாட்டில் ஏற்றி வைக்கும். அதுதான் தமிழ்நாடு மாநில சுயாட்சி என்று சொன்னேனே தவிர தமிழக சுயாட்சி என்று சொல்லவில்லை.

திரு. பெ. சீனிவாசன்: திராவிட நாட்டுப் பிரிவினைக்கும் மாநில சுயாட்சிக்கும் உள்ள வித்தியாசம் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதை இந்தியாவில் பல தலைவர்களும் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் ஒரு மாநாடு நடத்தினார்கள். தொடர்ந்து அகில இந்திய அடிப்படையில் முதல் அமைச்சர் அவர்கள் வட நாட்டுத் தலைவர்களோடு கலந்து— போராட்டங்கள், அறைகூவல், எச்சரிக்கை என்று இப்படிப்பட்ட நடவடிக்கைகளை விட அகில இந்திய ரீதியில் வட நாட்டில் உள்ள தலைவர்களோடும் கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்கலாமே. அதைத் தொடர்ந்து செய்யலாமே. அதைவிட்டு தமிழ் நாட்டுக்குள்ளே இருந்து கொண்டு மாநாடுகள் நடத்தி எச்சரிக்கைகள் விடுவது முறைதானா.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அண்ணாவைக் கூட அப்படித்தான் கேட்டார்கள். திராவிட நாடு என்று இங்கிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறீர்களே ஏன் ஆந்திராவிற்கு செல்லவில்லை, ஏன் கர்நாடகாவிற்குச் செல்லவில்லை என்று கேட்டார்கள். அதே மெட்டில் நண்பர் சீனிவாசன் அவர்களும் கேட்கிறார். இதைப் பிரிவினை என்று யாரோ சந்தேகப்படுவதாகச் சொல்கிறீர்கள். மாநில சுயாட்சி கூடவே கூடாது என்று சொல்கிறவர்களும், மாநில சுயாட்சி கொடுக்கக்கூடாது என்று நினைப்பவர்களும் இதைப் பிரிவினை வாதம் என்று சொல்லலாம்.

ஆனால் ஜயப்பிரகாஷ் நாராயணனைப் போன்றவர்கள், இந்திய ஒற்றுமையில் இந்திய ஒருமைப்பாட்டில் மிக்க நம்பிக்கை உள்ளவர்கள் எல்லாம் மாநில சுயாட்சி கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் கூட இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றவர்தான். அவர்கள் எல்லாம் மாநில சுயாட்சி கேட்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி கேட்பது சந்தேகத்திற்குரியது என்று நண்பர் சீனிவாசனைப் போன்றவர்கள் சந்தேகப்படுவது வேடிக்கையாக இருக்கிறது. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சந்தேகப் பட்டால் அதில் அர்த்தம் இருக்கலாம். திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கள் சந்தேகப்பட்டால் அர்த்தம் இருக்கலாம். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சந்தேகப்பட்டாலும் அர்த்தம் இருக்கலாம். ஆனால் நண்பர் சீனிவாசன் சந்தேகப்படுவதா?

திரு. க. உரொ. எட்மண்ட்: உள்ளாட்சித் துறைகளுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். உள்ளாட்சித் துறைகளை அரசு கண்ணும் கருத்துமாகக் கவனிக்க வேண்டும். அவற்றிற்கு சுதந்திரம் இருக்க வேண்டும். நீங்கள் சுதந்திரமாக செயல்படக் கூடாது என்று சொல்லக் கூடாது. கட்டுப்பாடு இருக்க வேண்டியதுதான். இல்லை என்று சொல்லவில்லை. ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள் எவ்வளவோ தவறுகளை செய்து கொண்டிருக்கிறார்கள். கல்வி மானியத்தின்மீது பேசும்போது கூட நான் குறிப்பிட்டேன், ஒன்றியங்களில் ஆசிரியர்கள் நியமனம் விஷயத்தில் என்னென்ன

1975 ஏப்ரல் 5] [திரு. க. உரோ. எட்மண்ட்]

ஊழல்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் எடுத்துப் பேசியிருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் கூட ஆதாரங்களை எழுதிக் கொடுங்கள் என்று சொன்னார்கள். இரண்டு மூன்று நாட்களில் எழுதிக் கொடுக்க இருக்கிறேன். அதற்காகத்தான் ஊருக்கு போய்விட்டு வந்தேன். ஒரு ஆண்டில் பல்வேறு நியமனங்கள் நடத்தியிருக்கிறார்கள், தவறுகள் பல நடந்துள்ளன.

நகராட்சி மன்றங்கள் பொருட்காட்சிகள் நடத்தலாம் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள என்று நாம் அனுமதி கொடுத்திருக்கிறோம். திருநெல்வேலியில் பொருட்காட்சி ஆண்டு தோறும் நடத்தி வருகிறார்கள். ஆனால் அங்கு என்ன நடக்கிறது என்றால் அந்தப் பொருட்காட்சியில் மக்களுக்குத் தேவையான பொருள்கள் எதுவும் இருப்பதில்லை. அங்கு தம்போலா, ரிக்கார்ட் டான்ஸ், வளையம் வீசுதல் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள்தான் நடக்கின்றன. எவ்வளவோ அதிகப்படியான மின்சாரம் அதில் பாழடிக்கப்படுகிறது. ரெக்கார்ட் டான்ஸ், அரை நிர்வாண நடனங்கள், சூதாட்டங்கள் இவைகள்தான் அங்கு நடக்கின்றன. முழுவதும் சூதாட்டம். அரசாங்கத்திலிருந்து காவல் துறை, விவசாயம் என்று ஒன்றிரண்டு இருக்கிறதே தவிர மீதியெல்லாம் மேற்சொன்ன அளவில்தான் இருக்கிறது. இந்த அளவில் செய்து கொண்டிருக்கிறார்கள்.

முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமலேயே திருநெல்வேலி நகரமன்றத் தலைவர் பல காரியங்களைச் செய்கிறார்கள். அவர்களது செயல்களை கண்காணிக்க வேண்டும். உங்களது பெயரை, அதாவது முதல் அமைச்சர் அவர்களுடைய பெயரை அசிங்கப்படுத்துகிறார் திருநெல்வேலி முனிசிபல் சேர்மன். ஆதாரங்களோடு சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவரது பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவராக இருக்கிறார்கள். அவர் ஆபீஸிலிருந்து போட்டிருக்கும் போன் கால்ஸ், சென்னைக்கு அவர் அங்கிருந்து போட்டிருக்கும் போன் கால்ஸ் ஆயிரக்கணக்கான ரூபாய் அளவிற்கு இருக்கிறது என்று ஆடிட் அப்ஜெக்ஷன்ஸ் இருக்கிறது. அவர்கள் தனிப்பட்ட முறையில் சொந்த உபயோகத்திற்காக தொலைபேசியை பயன்படுத்திக்

கொண்டு சென்னைக்கு லைட்னிங் கால்ஸ், அர்ஜன்ட் கால்ஸ் போட்டு ஆயிரக்கணக்கான ரூபாய் அளவிற்கு ஆடிட் அப்ஜக்ஷன்ஸ் இருக்கிறது. அவர், அதிகாரிகளை மிரட்டுகிறார். நான் யார் தெரியுமா, முதல் அமைச்சர் அவர்களின் வலது பக்கத்தில் உட்கார்ந்திருப்பவன் என்று சொல்கிறார்.

அவர் ஒரு சினிமா படம் எடுக்கிறார். தன் அதிகாரத்தை அவர் துஷ்பிரயோகம் செய்கிறார். ஆசிரியர்கள் நியமனத்தில் எந்த அளவிற்கு ஊழல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். அவர் சவால் விட்டிருக்கிறார், நகரசபைக் கூட்டத்தில். நிரூபித்தால் தான் ராஜீநாமா செய்கிறேன். நிரூபிக்காவிட்டால் எட்மண்ட் ராஜீநாமா செய்வாரா என்று பேசியிருக்கிறார். அதை நான் இங்கே ஏற்றுக்கொள்கிறேன். அன்றையதினம் திருநெல்வேலி நகரமன்றத் தலைவர் மீது இந்த மன்றத்தில் நான் எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க நான் தயார். நிரூபித்தால் அவர்கள் ராஜிநாமா செய்ய வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அவர்கள் அந்த அளவிற்கு சவால் விட்டிருக்கிறார்கள். நான் சட்டமன்றத்தில் பேசிய பேச்சை பத்திரிகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் படித்தவர்கள் எவ்வளவோ பேர்கள் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். துணிந்து நீங்கள் ஒரு உண்மையை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள், அதற்காக உங்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம் என்று. அந்த அளவிற்கு அவர் மக்களை பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்.

அவர் அண்ணன் மகள் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவள். 1973-ம் ஆண்டு தேறியவள். அங்கு நகரசபையில் ஒரு எழுத்தர் வேலை, க்ளார்க் வேலை கிடைத்திருக்கிறது. எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச் ஆபீசர் நம்பர் அனுப்ப மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார். இதற்கு முன்னால் நகரசபையில் வேலை செய்து வந்த கான்டிடேட்டாக இருந்தால் அனுப்ப முடியும் என்று சொன்னார்கள். தங்கவேலு என்ற கமிஷனர், முன்னால் இருந்தவர், அவரிடம் போய் அந்தப் பெண் நகரமன்றத்தில் ஒரு ஆண்டுக்காலம் தாற்காலிகமாக, டெம்பரரியாக வேலை செய்தவள் என்று ஒரு பொய் சர்டிபிக்கேட்டைப் பெற்று எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச் ஆபிஸில் கொடுத்து நம்பர் பெற்றிருக்கிறார்கள், நகர மன்றத் தலைவரின் உடன் பிறந்த அண்ணன் மகள்.

1975 எப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு கடுமையான குற்றச்சாட்டை சொல்கிறீர்கள், அவையில் இல்லாத ஒருவரைப் பற்றி. ஆதாரமிருக்கிறதா?

திரு. க. உரொ. எட்மண்ட்: அப்படியென்றால் ஒருவரைப் பற்றியும் ஒன்றுமே பேசமுடியாது. இங்குள்ளவர்களைப் பற்றித் தான் பேசமுடியும், என்றால் இதற்காகவா இந்த டிமாண்ட்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கடுமையான குற்றச் சாட்டாக இருப்பதால் ஆதாரம் வேண்டும்.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, உறுப்பினர் எட்மண்ட் அவர்கள் சொல்கிற குற்றச்சாட்டை தனியாக எழுதிக்கொடுத்தால் அதுபற்றிய விசாரணை நடத்து கிறோம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: நான் அதனால்தான் சொல்கிறேன், இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை எல்லாம் மன்றத்தில் சொல்வதால் எங்களுக்கு லாபம். எப்படியென்றால், சம்பந்தப் பட்ட அமைச்சர் எழுந்து குற்றச்சாட்டை தனியாக எழுதிக் கொடுங்கள், நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்ல முடியும். தனியாகப் பார்த்துச் சொன்னால் நடக்குமா? நடக்காது.

அந்த அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழக நகர மன்ற உறுப்பினர்களே குமுறிக்கொண்டு இருக்கிறார்கள், எங்கள் சொந்தக்காரர்களுக்கு கொடுக்கவில்லையே என்று. அவர்களுடைய சகோதரி 2-3 பேருக்கு தகுதி இல்லாமல், மிட்-ஒயிப் வேலை போட்டுக் கொடுத்து இருக்கிறார்கள். ஒரு தகுதியும் கிடையாது, குவாலிபிகேஷனும் கிடையாது. அப்பாயின்ட்மென்ட் செய்து இருக்கிறார்கள். அவருடைய சித்தி, சின்னம்மா அவர்களுக்கு மிட்-ஒயிப் வேலை போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு அதிகார துஷ்பிரயோகம் நடக்கிறது. இந்த மாதிரி சேர்மன் டைரக்டிவ் சொல்லி சில விஷயங்கள் நடக்கின்றன. இதைக் கவனிக்கவேண்டும். இப்படிப்பட்ட புகார்களை எடுத்துச் சொல்கிற போது கட்சி வேறுபாடு இல்லாமல், தவறு செய்தவன் தன் கட்சிக்காரர் என்றும் பார்க்காமல் நடவடிக்கை எடுத்து, அந்த

நிலைமையைச் சீர்படுத்தினல் நன்ருக இருக்கும் என்று சொல்லி, கூடுதலான அதிகாரங்கள் நகரமன்றங்களுக்குக் கொடுத்தால், அவர்களும் நல்ல விதத்தில் பணி செய்ய முடியும், அரசாங்கத்தின் சிரமமும் சற்றுக் குறையும், ஆகவே அந்த வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கான முயற்சிகளை இன்று ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள், குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதலமைச்சர் அவர்கள் பெயரைப் பயன்படுத்தி சில காரியங்கள் செய்யப்படுவதாகச் சொன்னுர்கள். ஆனல் அதற்கு முதலமைச்சர் அவர்கள் இணக்கம் தெரிவிக்கிருர்கள் என்று மாண்புமிகு எட்மண்ட் நம்புகிருர்களா ?

திரு. க. உரா. எட்மண்ட்: ஒன்றும் தெரியாத உங்களின் பெயரை உபயோகித்து, அதைச் செய், இதைச் செய் என்று சொல்கிருர்கள். உங்களுக்கு என்ன தெரியும்? நீங்கள் என்ன அவருக்கு என் பெயரை எங்கு வேண்டுமானலும் உபயோகித்துக் கொள் என்று 'பிளாங்க் செக்கா' கொடுத்து இருக்கிறீர்கள்? நான் உங்களுக்குத் தெரியும் என்று சொல்லவில்லை. இன்னும் சொல்லப்போனல் அவர்கள் என்ன சொல்கிருர்கள் என்ருல், முதலமைச்சர் பணியாற்றிக்கொண்டிருந்த படக் கம்பெனியிலிருந்து வருகிற படங்களுக்கு எல்லாம் நான்தான் ஏஜென்டாக இருக்கிறேன் என்று சொல்கிருர்கள். அதைக் கேட்டு, அந்த மக்கள் மிகவும் நம்புகிருர்கள். அப்படி ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதையெல்லாம் நீங்கள் கண்காணிப்பாக இருந்து சீர்திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர்களே, உள்ளாட்சித் துறையின் இந்த மானியத்தைப் பற்றிய விவாதத்தில் கடைசியாக இந்த உள்ளாட்சித் துறைக்கென சுயாட்சி கேட்கிற வாதமாக நடைபெற்று முடிந்து இருக்கிறது. யார் யார் மாநில சுயாட்சி வேண்டாம் என்று சொன்னர்களோ

1975 ஏப்ரல் 5] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

அவர்கள் இப்போது உள்ளாட்சிக்குச் சுயாட்சி வேண்டும் என்ற அளவில் உள்ளாட்சிகளுக்கு அதிகமாக அதிகாரங்கள் வேண்டும் என்கிற அளவில் பேசியிருக்கிறார்கள். எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பேசி இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கருத்துக்களை நான் வரவேற்று, நான் வரவேற்பதற்கு முன்னாலேயே நம்முடைய முதல்வர் அவர்கள் வரவேற்று அதற்கான அதிகாரங்களை எல்லாம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இங்கே பேசிய 14 உறுப்பினர்களும், யாரும் எந்த நகர மன்றத்தின் நிர்வாகங்களைப் பற்றியோ அல்லது ஊராட்சியின் நிர்வாகங்களைப் பற்றியோ குறை சொல்லவில்லை. ஆகவே, அந்த நிர்வாகங்கள் எல்லாம் செம்மையாக நடத்தப்படுகிறது என்றாலும், அதற்கான அதிகாரம் அதிகமாகத் தேவைப்படுகிறது என்ற அளவில் சொல்லி இருக்கிறார்கள்.

நம்முடைய நண்பர் எட்மண்ட் அவர்கள் 90 சதவிகிதம் அதிகாரம் வேண்டாம், 100 சதவிகிதத்துக்கு 100 சதவிகிதம் அதிகாரம் வேண்டும் என்று கேட்டார்கள். ஆகவே, மத்தியில் இனி எந்த ஆட்சியும் இல்லாத அளவில், 100-க்கு 100 சுயாட்சி வேண்டும் என்ற அளவில், அவர்களுடைய சுயாட்சி ஆர்வத்தை இங்கே அவை முன்பு நல்லமுறையில் விளக்கியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த விளக்கத்திற்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் உள்ளாட்சித் துறை எந்த அளவுக்கு வளர்ச்சி ஆகியிருக்கிறது என்பது எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய அளவில் இருக்கிறது. ஒரு சிலர் அதைப் பற்றி விளக்கம் சொல்லி இருக்கிறார்கள்.

1966-67-ல் 47.48 என்று இருந்தது.

1967-68-லே 52.70 கோடி.

1968-69-லே 52.62 கோடி.

1969-70-லே 59.15 கோடி.

1970-71-லே 65.26 கோடி.

1971-72-லே 72.08 கோடி.

1972-73-லே 77.14 கோடி.

1973-74-லே 94.69 கோடி.

1974-75-லே 104.22 கோடி.

1975-76-லே 111.24 கோடி என்ற அளவுக்குச் செலவு செய்யப் பட்டிருக்கிறது.

திரு. பெ. சீனிவாசன்: அமைச்சர் அவர்கள் நிர்வாகம் வளர்ந்து இருக்கிறது என்று சொன்னார்கள். செலவு வளர்ந்து இருக்கிறது. புள்ளிவிவரப்படி செலவு தான் வளர்ந்து இருக்கிறது. அதிகாரம் வளர்ந்து இருக்கிறதா என்றுதான் எட்மண்ட் அவர்கள் கேட்டார்கள். இருக்கிற அதிகாரங்களையும் எடுத்து இருக்கிறீர்கள். வாட்டர் போர்டு என்று போட்டு அதிகாரத்தை எடுத்து இருக்கிறீர்கள். அதிகாரங்கள் கூட்டப் பட்டு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அவர் கூட்டு மன்றப் பெருந்தலைவராக இருக்கிற காரணத்தால் அதிகாரம் வேண்டுமென்று சதா கேட்டுக்கொண்டே இருக்கிறார். தலைவராக இல்லாதவர்கள் இன்னும் பல கருத்துக்களை வைத்து இருப்பார்கள். இப்போது நான் பேசுவது — இதுவரையில் நாம் நம்முடைய கொள்கை ரீதியில், இருக்கின்ற அதிகாரங்களை வைத்துக் கொண்டு, அந்த நிர்வாகத்தில் எந்த அளவுக்கு உள்ளாட்சித் துறையை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காலத்தில், வளர்த்து இருக்கிறார்கள் என்பதற்குப் புள்ளி விவரம் தருகிறேன். இந்தப் புள்ளிவிவரம் தராமலேகூட என்றால், எந்தெந்த மாநிலத்தில் எவ்வளவு செய்து இருக்கிறார்கள், அவர்கள் மொத்த பட்ஜெட்டில் எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள், கிராம வளர்ச்சிக்கென எவ்வளவு தொகை ஒதுக்கி இருக்கிறார்கள், எப்படி தமிழகத்தில் நல்ல வகையில் காரியம் செய்து இருக்கிறோம் என்று எடுத்துச் சொல்ல முடியும். இருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டு நாம் இதைச் செய்து இருக்கிறோம்.

மராட்டிய மாநிலத்தில் 1973-74-ல் அவர்கள் 3.2 சதவிகிதம் மொத்தச் செலவில் இதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆந்திராவில் 3.7 சதவிகிதம், கேரளத்தில் 2.8 சதவிகிதம், கருநாடகத்தில் 3.4 சதவிகிதம், தமிழ் நாட்டில் 6.4 சதவிகிதம்.

1975 ஏப்ரல் 5] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

1974-75-லே மராட்டியத்தில் 3.4 சதவிகிதம், கேரளத்தில் 2.4 சதவிகிதம், ஆந்திராவில் 3.3 சதவிகிதம், கருநாடகத்தில் 3.6 சதவிகிதம், தமிழ்நாட்டில் 6.7 சதவிகிதம். நாளடைவில் தன்னுடைய மொத்த நிதியிலே எவ்வளவு ஒதுக்கப் பட்டிருக்கிறது என்றால், அந்த பட்ஜெட் குறிப்புகளை நான் சொல்கிறேன்.

1973-74-ல் மராட்டியத்தில் மொத்த பட்ஜெட் 728.08 கோடி, அதில் 22.98 கோடி சமுதாய வளர்ச்சிக்காகக் கொடுத்து இருக்கிறார்கள்.

ஆந்திராவில் 1973-74-ல் 423.35 கோடி மொத்த பட்ஜெட்டில், அவர்கள் ஒதுக்கியிருப்பது 15.76 கோடி.

கேரளத்தில் 258.98 கோடியில் அவர்கள் 6.27 கோடி தான் கிராம வளர்ச்சிக்காக ஒதுக்கியிருக்கிறார்கள்.

கருநாடகத்தில் 398.95 கோடியில் 13.64 கோடி தான் ஒதுக்கி யிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் 396.26 கோடியில் 25.37 கோடி 1973-74-ல் ஒதுக்கியிருக்கிறோம்.

1974-75-ல் மராட்டியத்தில் 728.42 கோடியில் 24.83 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆந்திராவில் 434.08 கோடியில் கிட்டத் தட்ட 14.10 கோடி தான் செலவிட்டு இருக்கிறார்கள். கேரளாவில் 258.98 கோடியில் 6.10 கோடிதான் செலவு செய்து இருக்கிறார்கள். கருநாடகத்தில் 362.81 கோடியில் 13.22 கோடி தான் அவர்கள் செலவு செய்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் 431.62 கோடியில் 28.81 கோடி இன்றைக்குச் சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்காக நாம் செலவு செய்து இருக்கிறோம்.

அகில இந்தியாவில் கிட்டத்தட்ட மற்ற மாநிலங்களில் எல்லாம் 3.6 சதவிகிதத்திற்கு மேல் நிதி வசதி செய்யப்படவில்லை. தமிழகத்தில்தான் 6.7 சதவிகிதம் என்ற அளவுக்கு இன்றைக்கு நாம் ஒதுக்கியிருக்கிறோம், கிராம வளர்ச்சிக்காக.

மகாத்மா காந்தி கண்ட கனவை நனவாக்கும் வகையில் இங்கே இருக்கிற அதிகாரத்தை வைத்துக்கொண்டு, எந்த வகைகளில் முன்னேற்றம் காணவேண்டுமோ அந்த வகையில் நல்ல முன்னேற்றம் பெற்று இருக்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

குடிநீர்ப் பிரச்னை பற்றிப் பலபேர் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். குடிநீர் பற்றி இந்த ஆண்டு 190 லட்சம் ரூபாய் செலவு செய்ய ஒதுக்கப்பட்டு இருக்கிறது. குடிநீர் கொடுப்பதற்காக நம்முடைய மாநிலத்திற்கென ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. குடிநீர் ஆதாரம் இல்லாத வகையில் உள்ளவை 4,916 கிராமங்கள் என்று அதிலே தெரிந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன.

நோய் பரவக்கூடிய கிராமங்கள் என்று 2,230 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இது போக மீதியுள்ள 13,040 கிராமங்களில் குடி நீர் ஆதாரங்களை விரிவுபடுத்த கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளாட்சித் துறையில் செயல்பட்டு வருகின்றன. அவ்வாறு செயல்படுவதில் 1971-72-இல் மேல்நிலை நீர்த் தொட்டிகள் 633-ம், 1972-73-ல் 812-ம், 1973-74-ல் 898-ம், 1974-75-ல் 406-ம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

கிணறுகள் 1971-72-ல் 2,798, 1972-73-ல் 2,544, 1973-74-ல் 2,573, 1974-75-ல் 1,277. தரை மட்ட நீர்த் தொட்டிகள் 1971-72-ல் 122, 1972-73-ல் 189, 1973-74-ல் 166, 1974-75-ல் 48. 1974-75-ல் குறைந்ததற்குக் காரணம் குடிநீர் வாரியத்தால் அதிகமாக செய்யப்படுகிற காரணத்தினால் இந்தத் திட்டத்தில் இங்கே குறைக்கப்பட்டிருக்கிறது. இதிலே 75 சதவீதம் சர்க்கார் மானியம் 25 சதவீதம் அங்கே கிராமங்கள் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக முன்னே சொன்ன கணக்கு விவரப்படி 190 லட்ச ரூபாய் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. வகாப் ஒரு பிரச்சனையை சொன்னார்கள். சிறிய பஞ்சாயத்துக்கள் பணம் கட்டவேண்டிய நிலை இருக்கிறதா என்று கேட்டார்கள். குடிநீர் ஆதாரங்கள் இல்லாத கிராமங்கள் 4,916 என்று சொன்னேன். இவைகள் நிச்சயமாக இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் கட்டத் தேவையில்லை. அதேபோல நோய் பரவக் கூடியவை என்று 2,230 சிறிய கிராமங்கள் இருக்கின்றன. இந்தக் கிராமங்களும் இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் கட்ட வேண்டியதில்லை. சிறு கிராமங்கள் எப்போது இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் கட்டவேண்டிய நிலை ஏற்படுமென்றால் இந்த திட்டம் ஒரு பெரிய

திட்டமாக மாறிவிடும்போது தான். அந்தந்த பஞ்சாயத்துக்களில் தண்ணீர் கிடைக்காமல் ஏதோ ஒரு பஞ்சாயத்தில் தண்ணீர் வசதி கிடைக்கிறதென்று சொன்னால் இந்தப் பஞ்சாயத்துக்களுக்கெல்லாம் சேர்த்து தண்ணீர்த் திட்டத்தைப்போட வேண்டியுள்ளது. அப்போது இது பெரும் திட்டமாகப் போய் இதற்காகக் கடன் வாங்கி, அந்தக் கடன் தொகையிலிருந்து செலவு செய்ய வேண்டுமென்ற நிலை இருந்தால் இது பெரிய திட்டமாக ஆகிற காரணத்தினால் இந்தத் திட்டத்தின் செலவை, இந்தத் திட்டம் உதாரணத்திற்கு 5 பஞ்சாயத்துக்களுக்குப் பயன்படும் என்றால் அந்த 5 பஞ்சாயத்துக்களும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். இந்த இன்வெஸ்டிகேஷன் சார்ஜை விகிதம் பண்ணி அந்த 5 பஞ்சாயத்துக்களிடமும் வசூலிக்கலாம். அப்படி எந்தப் பஞ்சாயத்தினாலாவது கட்ட முடியவில்லையென்றால் அதைக் கூடத் தவணை முறையில் வாங்கிக் கொள்வதற்கு வகை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

நான் முன்னே சொன்ன கணக்குப்படி குடி நீர் ஆதாரங்கள் இல்லாத கிராமங்கள் 4,916 இருக்கின்றன. நோய் பரவக் கூடிய கிராமங்கள் என்று 2,230 தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. நான் மேற்சொன்ன குடிநீர் ஆதாரங்கள் இல்லாத 4,916 கிராமங்களில், குடிநீர் வசதி செய்து கொடுத்த கிராமங்கள் 966, 1974-75-க்கு 672 கிராமங்களில் நிச்சயமாகச் செய்து முடித்து விடுவார்கள், மேலும் செய்யப்படவேண்டிய கிராமங்கள் 3,278 ஆகும்.

அடுத்தபடி, நோய் பரவக்கூடிய கிராமங்கள், பாதுகாக்கப் பட்ட குடி நீர் அளிக்கப்பட வேண்டியவை 2,230 கிராமங்கள் என்று சொன்னேன். இதில் 1974-75 இல் 1,041 இல் அநேகமாக ஓரிரு திங்களில் முடிந்து விடும். மீதி 1,189 ஐ 1975-76-ல் முடித்து விட திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, குடிநீர்ப் பிரச்சனையைப் பொறுத்தவரை, மழை இல்லையென்றாலும் கூட நிச்சயமாக இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் முடித்து விடுவதற்கான நல்ல திட்டங்கள் குடி நீர் வாரியத்தினாலும் உள்ளாட்சித் துறையினாலும் எடுக்கப்பட்டு இந்தக் காரியங்களெல்லாம் வேகமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது, அதனால் குடி நீர்ப் பிரச்சனையை நாம் சமாளிக்க முடியும் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1975 ஏப்ரல் 5

பள்ளிக்கூடங்களைப் பொறுத்த வரையில் 1971-72-ல் 1,017 பள்ளிக்கட்டிடங்களும், 1972-73-ல் 934 பள்ளிக்கட்டிடங்களும், 1973-74-ல் 996 பள்ளிக்கட்டிடங்களும், 1974-75-ல் 730 பள்ளிக் கட்டிடங்களும் கட்டப்பட்டு உள்ளன. இந்த அளவிற்கு இத்தனைப் பள்ளிக்கூடங்களுக்குப் புதிய கட்டிடங்கள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. 22,587 பள்ளிக்கூடங்களில் 17,271 பள்ளிக்கூடங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் என்ற நிலை இன்று இருக்கிறது. ஆகவே, சுமார் 5 ஆயிரம் பள்ளிக்கூடங்களுக்குத் தான் சொந்தக் கட்டிடம் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. இந்த ஆண்டில் 75 லட்ச ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டு இதற்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. விரைவிலே இன்னும் இரண்டு ஆண்டுகளிலே இவைகளைப் பூர்த்தி செய்யத் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன.

ரோடுகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ரோடு பிரச்சனையில் 1,500 மக்களுக்கு மேல் உள்ள பகுதிகளுக்கு ரோடு திட்டம் போட்டு இதற்காகக் கிட்டத்தட்ட 19 கோடி ரூபாய் முதலமைச்சரவர்கள் தந்து அநேகமாக இந்தத் திட்டத்தை நாம் ஓரளவிற்கு நிறைவேற்றி வருகிறோம். இதனால் பயனடைந்த ஊர்கள், சாலைகள் என்ற அளவிலே நீண்ட கணக்குகள் இருக்கின்றன. அந்தக் கணக்குகளை அதிகமாகச் சொல்லத் தேவையில்லையென்று நான் கருதுகிறேன். அந்த அளவிற்கு இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

அடுத்து ஃபோர் வெதர் ரோட்ஸ் அமைப்பதற்கான திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். முதலமைச்சரவர்கள் சிறிய சிறிய கிராமங்களுக்கு இணைப்பு ரோடுகள் வரவேண்டுமென்று சொன்னார்கள். இதற்காக 11.94 கோடி ரூபாய் அளவிலே பணம் ஒதுக்கப்பட்டு திட்டத்தை ஆரம்பித்தார்கள். கிட்டத்தட்ட இப்படிக் கொடுக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை 323 ஆகும். எடுத்துக் கொள்ளப்பட்ட நீளத்தின் அளவு 446 கிலோ மீட்டராகும். இதனால் பயனடைந்த ஊர்கள் 276 ஆகும். ஆனாலும் இந்த ஆண்டிற்கு 50 லட்ச ரூபாய் தான் இதற்காக ஒதுக்கீடு செய்திருக்கிறோம். எல்லோரும் இந்த ரோடு வேண்டுமென்கிறார்கள். இந்த ஆண்டு நிதியை அதிகமாக இதற்காகப் பயன்படுத்துகிற நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வறட்சிப் பணிகள் முடிந்த பிறகு இந்த

1975 ஏப்ரல் 5] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

ரோடுகளுக்கான நிலைமைகளைக் கவனித்து அதிகத் தொகைகளை ஒதுக்குகிற நிலை பின்னால் வரலாம். இப்போது 50 லட்ச ரூபாய் தான் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். இந்தச் சாலைகள் மேம் படுத்துதல், மற்றக் காரியங்களெல்லாம் எப்போதும் போல நடை பெறும். இப்போது இந்தக் காரியங்கள் சுறுசுறுப்பாக நடை பெறுகின்றன என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய வகாப் அவர்கள் நிரம்பச் சொல்லியிருக்கிறார்கள். அவர் அவையில் இல்லாத காரணத்தினால் அவைகளைப் பற்றிய விவரங்களைச் சொல்லத் தேவையில்லை என்று நான் கருது கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, திரு. வகாப் அவர்கள் சொன்னாலும் கூட, அவர் சொன்னது சபையின் சொத் தாக இருப்பதனால் அமைச்சரவர்கள் விளக்கங்களை சபைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவரைச் சொல்ல வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, நான் 1½ மணி நேரம் வேண்டுமானாலும் பேசத் தயாராக இருக்கிறேன். உறுப்பினர்கள் பசி காரணமாக என்னை வெறுப்பாகப் பார்ப்பார்கள். விவரங்களை எவ்வளவு நேரம் வேண்டு மானாலும் நான் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

இந்த ஊராட்சி நிதி ஆதாரங்களை மேம்படுத்துவது சம்பந்த பரிந்துரைகள் அளிக்கவேண்டுமென்று 24—7—73 தேதியிட்ட அரசு ஆணைப்படி குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. ஊர் வளர்ச்சி இயக்குனர், ஊர் வளர்ச்சி இணை இயக்குனர், வருவாய்த் துறைச் செயலாளர், உள்ளாட்சி நிதிக் கணக்காயர், நிதித் துறைச் செயலாளர், உள்ளாட்சித் துறைச் செயலாளர் இப்படி எல்லோரும் சேர்ந்து ஒரு பெரிய குழு போடப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவில் 12 பேர்கள். இந்தப் பேரூராட்சிக் குழு ஊராட்சி நிதி நிலவரங்கள் பொறுத்த வரை ஏற்படுகிற கஷ்டங்களையெல்லாம் பரிசீலனை பண்ணி இந்தப் பேரூராட்சிகளை நல்ல முறையில் கொண்டு வர வேண்டுமென்று திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். 16—10—74-ல் இது அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பரிசீலனை பண்ணி இந்த பேரூராட்சிகளுக்கு இருக்கிற சிக்கலைத் தீர்க்க வழி வகை செய்யப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1975 எப்ரல் 5

திரு. வகாப் அவர்கள் டிராக்டரைப் பற்றிச் சொன்னார்கள். குறிப்பிட்ட ஒரு டிராக்டரைப் பற்றிச் சொன்னார்கள். வந்தவாசி ஊராட்சி ஒன்றிய டிராக்டர் சீர் செய்யப்பட்டு அது வாடகைக்கு ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த மாதிரி அவர் கேட்டதற்கு விவரங்கள் அவருக்குத் தான் இண்டரஸ்டாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஒப்பந்தக்காரர்கள் பற்றிச் சொல்கிறபோது ஊராட்சித் தலைவர்கள் ஒப்பந்தக்காரர்கள் ஆகக் கூடாது என்ற நிலைமையைச் சொன்னார்கள். அவர்களை ஒப்பந்தக்காரர்களாக எடுத்துக் கொள்வது கிடையாது. ஒவ்வொரு ஊராட்சித் தலைவரும் 25 சத வீதத் தொகையை கட்டினால் அந்த வேலையை ஊராட்சியே செய்யலாம், எவ்வளவு பெரிய வேலையானாலும் செய்யலாம் என்று அவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. அந்த நியதிப்படி பணம் கட்டினால் அவர்கள் அந்த வேலையை எடுத்துக் கொள்ளலாம். அப்படி அவர்கள் எடுத்துக் கொண்டு வேலையைச் செய்கிறார்கள். மற்றவைகளைப் பொறுத்த வரை அந்த பஞ்சாயத்து யூனியன் காண்டிராக்ட் விடுகிறது. பஞ்சாயத்து யூனியனில் ஆணையருக்கு 1,500-க்குள் செலவு செய்யலாம் என்று இருக்கிற அதிகாரத்தை. வறட்சி நிவாரண வேலை குறித்து பஞ்சாயத்து யூனியன் பணம் அல்லாத வேலைகளுக்கு, அதாவது வறட்சி நிவாரணப் பணிகளுக்கு 5 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தியிருக்கிறார்கள். இந்த முறையில் பார்த்தால் ஆணையர்கள் 1,500 ரூபாய் என்று இல்லாமல் 3 ஆயிரம், 5 ஆயிரம் என்று 5 ஆயிரம் ரூபாய் வரையில் நாமினேஷனில் வொர்க் கொடுக்கலாம். வறட்சி நிவாரண அவசர வேலை காரணமாக இப்படி அதிகாரம் கொடுத்திருக்கிறோம்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் யாருக்கும் கான்ட்ராக்ட் கொடுக்கவில்லை. அப்படிக் கொடுத்திருப்பதாக இருந்தால், இது ரொம்ப நாளாக நடந்து வந்திருப்பதால் அதனுடைய தொடர்ச்சியாக இருந்திருக்கும். இப்படி எல்லாம் நடக்கக் கூடாது என்பதற்காகத் தான் சில சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

செக் போடுவதற்கு அதிகாரம் வேண்டுமென்று வகாப் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவரே சொல்கிறார்: ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் கான்ட்ராக்ட் எடுக்கிறார்கள் என்று. ஊராட்சி

ஒன்றியத் தலைவரே கான்ட்ராக்ட எடுப்பது, அவரே செக் மெஷர்மென்ட் பார்ப்பது, செக் எழுதுவது என்று வந்து விட்டால் வேலைகள் நடக்குமா? மண் வேலை நடக்குமா? கட்டிடங்கள் தான் உருவாகுமா என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திரு. சுப்பையா அவர்கள் குறிப்பிட்டார்கள். வாத்தியார்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு அடங்குவதில்லை என்று. இதற்கு முன் இருந்த நிலை என்னவென்றால், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் வாத்தியார்களை அடக்குகிறார்கள் என்பது இந்த அரசில் நிலைமை மாறியிருக்கிறது. ஆனால் வாத்தியார்கள் ஊராட்சி ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு அடங்குவதில்லை என்ற நிலையும் வரக் கூடாது.

கான்ட்டிராக்டைப் பொறுத்த வரையில் நிச்சயமாகச் சொல்கிறேன். எந்தத் தலைவர்களுக்கும் அந்த அதிகாரத்தை நாங்கள் கொடுக்கத் தயாராக இல்லை. அப்படி ஏதாவது இருந்தால் அது தனிப்பட்ட முறையில் இருந்திருக்கும். அந்த விஷயத்தைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

அதே மாதிரி இந்த செக் கிழிக்கிற அதிகாரம் தலைவர்களுக்கு வேண்டாம் என்று கூறிக் கொள்கிறேன். ரொம்பத் தலைவர்கள செக்கைக் கிழித்து விட்டு, இரவில் தூக்கம் வராமல் தவிக்கிறார்கள். போலீஸ்காரர்கள் வந்து பிடித்துக் கொண்டு போவது போல அவர்களுக்குக் கனவுகள் வருகின்றன. இவர்கள் வெறும் ஆயிரம் போட்டுக் கொடுப்பார்கள். அதை கிளார்க் இன்னொரு சைபர் சேர்த்து ரூ. 10,000 ஆக்கிவிடுவதும் உண்டு. அது மாதிரி வழக்குகள் இருக்கின்றன. யார் ஓவர் ரைட் செய்தது என்பது போன்ற பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன. * கணக்குத் தெரிந்தவர் களாக இருந்தாலும் மாட்டிக் கொண்டாலும் தப்பித்துக் கொள்ளலாம். எனினும் இந்தப் பிரச்சினையை முதலமைச்சர் அவர்களுக்கு விட்டு விடுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: * என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்குத் தான் நாங்களும் சொல்கிறோம். மாநில சுயாட்சி கேட்டு மாட்டிக் கொள்ளாதீர்கள் என்று.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: அம்மையாருக்கு மனது ஒரு இடத்தில் இருப்பதில்லை. * நான் பஞ்சாயத்துத் தலைவர்களைப் பற்றி பேசி வருகிறேன். நீங்கள் வேறு எதையோ பேசுகிறீர்கள். அவர்கள் மாட்டிக் கொண்டு வழக்கு வந்தால் உங்களுக்கு ஃபீஸ் கிடைக்கும் என்று பார்க்கிறீர்கள் போல் இருக்கிறது. எனக்கு வேண்டியவர்கள் பல பேர் தலைவர்களாக இருப்பதால், அவர்களுக்காக இதைக் குறிப்பிட்டேன்.

அடுத்ததாக, திரைப்படத் தியேட்டரை பஞ்சாயத்து தலைவர்கள் செக் பண்ண வேண்டுமென்று ஒரு யோசனை தெரிவிக்கப் பட்டிருக்கிறது. * இந்த யோசனை அமல்படுத்தப்பட்டால் ரொம்பச் சங்கடங்கள் ஏற்படும். வருவாய்த் துறையில் இதற்கென ஒரு இலாகா இருக்கிறது. குறை இருந்தால் அதைச் சீர்படுத்தி அந்த இலாகா நல்ல முறையில் இயங்க ஏற்பாடு செய்யலாம், என்று சொல்லி, வகாப் பிரச்சினையை இத்தோடு முடித்து விடுகிறேன்.

அடுத்தபடியாக கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மீட்டர் பற்றிச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: இப்பொழுது * எடுத்துக் கொள்கிறேன் . . .

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, பஞ்சாயத்துத் தலைவர்களைப் பற்றி அமைச்சர் கூறியவைகளை நீக்க வேண்டும். * சட்ட மன்றத்தில் அமைச்சர் பேசக் கூடிய பேச்சா இது? அதன் பிறகு வக்கீல்களைப் பற்றிப் பேசுகிறார். ரொம்ப இன்சுனுவேஷன்ஸ் இருக்கிறது.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: நான் தலைவர்களைக் குறை சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் எதுவும் பேசவில்லை. என்னுடைய உறவினர்கள், நண்பர்கள், வேண்டியவர்கள், தலைவர்களாக இருப்பதனால் அவர்களுக்கு ஒரு நல்ல ஆலோசனையாகத் தான் பேசினேன். * கண்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

இல்லாதவர்கள், கால் இல்லாதவர்கள் முதலமைச்சரால் உயர்த்தி விடப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பயன்பெற்றவர்கள் போய் விட்டார்கள். அவர்களை வைத்துப் பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கிறவர்கள் தான் வேறு அர்த்தத்தில் பேசுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பஞ்சாயத்துத் தலைவர்களை * என்ற அர்த்தத்தில் பேசியுள்ள அமைச்சரின் வாசகம், மற்றும் * என்ற இந்த மாதிரியான சில வார்த்தைகளை அவைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கி விடுகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: கண் தெரியாதவர்கள், கால் இல்லாதவர்களை எல்லாம் தூக்கிவிட்டார் முதலமைச்சர். அவருக்கு எதிராக, அந்தக் கண்தெரியாதவர்களை நம்பிச் சில பேர் பிழைக்கப் போயிருக்கிறார்கள் என்று என்ன என்னமோ அமைச்சர் பேசியிருக்கிறாரே. அவைகளை எல்லாம் சபைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கி விட வேண்டும். அட்வகேட்டுகளைப்பற்றிப் பேசுகிறாரா? யாரைப் பற்றிப் பேசுகிறார்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் கட்சிக்காரர்களைப் பற்றி ஏதேனும் சொல்லியிருப்பார்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: * நான் கூறியவற்றைக் குறிப்பேட்டிலிருந்து நீக்குவதை நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர். சபைக் குறிப்பிலிருந்து நீக்குவதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நீக்குவதா, இல்லையா என்ற அதிகாரம் தலைவர் அவர்களுக்குத் தான் உண்டு. வேறு யாருக்கும் கிடையாது. அமைச்சருக்கும் கிடையாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: ஸ்பீச் ரொம்ப ரெக்லஸ் ஆகப் போய் கொண்டிருக்கிறது. *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * என்பது சரியில்லை. அந்த வார்த்தைகள் நீக்கப்படும். சரி, சரி, நீங்கள் ஏன் அங்கேயே இருக்கிறீர்கள். மேலே போங்கள்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. பெ. சீனிவாசன்: முதலில் அவற்றை எடுக்கச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுதான் முன்பே சொல்லிவிட்டேனே, எடுக்கச் சொல்லி. அமைச்சர் பேசட்டும்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: நான் பஞ்சாயத்துத் தலைவர்கள் யாரையும் குறை சொல்லவில்லை. அவர்கள் படுகிற கஷ்டங்கள் எனக்குத் தெரியும். ஆதலினால் தான் நான் அவ்வாறு பேசினேன்.

மீட்டர் பற்றிப் பேசினார்கள். ஒரு ஆண்டுக்குள் மீட்டர்களைப் பொருத்திவிட வேண்டுமென்று மின்சார இலாகாவிற்கு எழுதி அனுப்பியிருக்கிறோம். சில சாமான்கள் கிடைக்கவில்லை. அவைகள் கிடைக்கப் பெற்றதும், வேலைகள் பூர்த்தி ஆகிவிடும்.

ஊராட்சி பற்றிப் பேசும்போது நிறைய சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று பேசினார்கள். அது பற்றி எ.ஆர்.சி. பரிந்துரைகள் உள்ளன. 500 மக்கள் கொண்ட ஊராட்சிக்கு ரூ. 5,000 வருமானம் வரக் கூடிய வகையில் ஊராட்சி முறை அமைக்கப்படுகிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மற்றைய சீர்திருத்தங்கள், பரிந்துரைகள் ஆலோசித்து, ஏற்றுக் கொள்ளப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

அடுத்து, நகரமன்றங்களைப் பற்றியும், நகரமன்றங்களின் அதிகாரங்கள் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். இது குறித்து ஒரு மாநாடு கூட்டி, அந்த மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வைத்துக்கொண்டு, நகரமன்றத்திற்கு வேண்டிய அதிகாரங்கள் என்னென்ன என்பதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பதுபற்றிப் பரிசிலிக்கப்படும் என்று முதலமைச்சரவர்கள் சொல்லியிருப்பதால், அதையெல்லாம் பரிசிலனை செய்வார்கள்.

மற்றும் நடைபெறுகின்ற வேலைகளுக்கு உடனடியாகப் பணம் சாங்ஷன் செய்வது பற்றிச் சொன்னார்கள். எந்த டிப்பார்ட்மெண்டை எடுத்துக்கொண்டாலும் 'மணி' லிமிட் இருக்கிறது.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1,500 ரூபாய் வரையுள்ள வேலைகளை பி.டி.ஓ.-க்கள் செய்யலாம் என்று வைத்திருக்கிறார்கள். பி.டபிள்யு.டி.-யில் அசிஸ்டன்ட் இருக்கிறார்கள், சூபரண்டிங் எஞ்சினீயர்கள் இருக்கிறார்கள், இருக்கிறார்கள் சூபரண்டிங் எஞ்சினீயர்கள் இருக்கிறார்கள், சீஃப் எஞ்சினீயர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் இவ்வளவு 'மனி' லிமிட் என்று வைத்திருக்கிறார்கள். அப்படி இருந்தால்தான் வேலை ஒழுங்காக நடைபெற ஏதுவாக இருக்கும்; அந்தமுறையில் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் 1,500 ரூபாய் வரையுள்ள வேலைகளை சாங்ஷன் செய்யலாம் என்றும் அதற்கு மேற்பட்ட வேலைகளுக்கு டெண்டர் கேட்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஒவ்வொரு காரியத்திற்கும் கலெக்டரிடம் போய் உத்தரவு வாங்க வேண்டியிருக்கிறது. வேலைகள் துரிதமாக நடக்கும் வகையில் கமிஷனர் சாங்ஷன் செய்யும் தொகையை இன்னும் கொஞ்சம் உயர்த்திக்கொடுக்க உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: இது பஞ்சாயத்து யூனியன் பணம் அல்ல. வறட்சி நிவாரணப் பணம் என்று கலெக்டரிடம் பல லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து செலவிடப்படுகிற பணம் இது.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதற்கும் 1,500 ரூபாய் வரையில் தான் அனுமதி அளிக்க கமிஷனருக்கு அதிகாரம் இருக்கிறது. அதனால் உண்மையில் அனுபவ ரீதியில் பல சங்கடங்கள் இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். ஒவ்வொரு தடவையும் கலெக்டரிடம் போய்க் கேட்க வேண்டியிருப்பதால் வேலை நடைபெறுவதில் தாமதம் ஏற்படுகிறது. அதனால் இந்த வரம்பை உயர்த்த வேண்டுமென்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: 5,000 ரூபாய் வரையில் கொடுக்கின்ற அதிகாரம் இப்போது பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் உள்ள தொகைக்குக் கலெக்டரிடம் போக வேண்டும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்பினராக இருந்தாலும் அமைச்சராக இருந்தாலும் அவரவர் இடத்திலிருந்துதான் பேசவேண்டியது மரபு. நம்முடைய ரெவின்யூ அமைச்சரவர்கள் இரண்டாவது முறையாக மாறிப் பேசுவது சரியா என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : அவர் இடம் மாறி எங்கும் போய்விடவில்லை; என்னுடைய பக்கத்தில்தான் இருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இடம் மாறுவது சரியல்ல; முறையல்ல (சிரிப்பு).

திரு. பெ. சீனிவாசன்: இப்போது இந்தப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் 5,000 ரூபாய் வரை செலவழிக்கலாம் என்று தாற்காலிகமாக ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இதை ஒரு சோதனையாகப் போட்டுப் பார்த்து, எதிர்காலத்தில் 5,000 ரூபாய் வரையில் சாங்ஷன் செய்யும் அதிகாரம் அவர்களுக்குக் கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: வறட்சி என்பது எப்போதும் வராது; வரும்போது பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: 'மனி' லிமிட் பற்றி அவர்கள் கேட்கிறார்கள். அதுபற்றிப் பின்னால் பரிசீலனை செய்யலாம். 1,500 ரூபாய் வரையில் கமிஷனர்கள் செலவிடலாம் என்றிருந்ததை இரண்டு மாதங்களுக்கு முன்னால் 3,000 ரூபாய் என்று உயர்த்தப்பட்டது; அது இப்போது 5,000 என்று உயர்த்தப் பட்டிருக்கிறது. தொடர்ந்து, 5,000 ரூபாய் வரையில் செலவிடும் அதிகாரத்தைக் கொடுக்கலாமா என்பது பற்றிப் பின்னர் யோசிக்கலாம்.

சீரணி பற்றிப் பலரும் சொன்னார்கள். நம்முடைய நாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுவந்த சிறப்பான திட்டம் இது. இந்தச் சீரணியில் கிட்டத்தட்ட 45,000 பேர் தொண்டர்களாக இருக்கிறார்கள். 1969 எப்ரல் 1-ந்தேதி முதல் 1974 வரையில் கிட்டத்தட்ட 1,395 பள்ளிக் கட்டடங்கள் இந்த சீரணியினால் கட்டப்பட்டிருக்கின்றன. நீர்ப்பாசன வசதிக்கென் கால்வாய்

வெட்டுதல், கால்வாய் தூர் எடுத்தல் போன்ற பணிகள் 1,710 இடங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1,661 இணைப்புச் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. வீதி சுப்புரவு, பள்ளிச் சுவர்கள் அமைத்தல் போன்ற 40,776 வேலைகள் இந்தச் சிரணியினால் செய்யப்பட்டிருக்கின்றன. இத்தகைய வேலைகளின் மதிப்பு சுமார் 2,57,16,670 ரூபாய். இந்த வேலைகளைச் செய்த சிரணியினருக்கு சர்க்கார் ஒதுக்கிய தொகை 85,72,222 ரூபாய்தான். அவர்களுடைய உழைப்பின் மூலம் கிட்டத்தட்ட 2 கோடியே 57 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட வேலைகளைச் செய்திருக்கிறார்கள்.

இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 4.8 லட்சம் மதிப்பீட்டில் மடைச்சல் கால்வாய் தோண்டும் பொறுப்பை சிரணியினர் ஏற்றிருக்கிறார்கள். இந்தக் கால்வாயின் நீளத்தில் இதுவரை 2½ மைல் வெட்டியிருக்கிறார்கள். சிரணியினரிடம் 1970–71 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்ட இத்திட்டம் இப்போது முடியும் தருவாயில் இருக்கிறது. இத்திட்டத்தினால் 431 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்; 850 குடும்பங்கள் இதனால் பயனடையும். 500, 600 மெட்ரிக் டன் நெல் விளையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கு அரசின் செலவு 1.32 லட்சம் ரூபாயாகும். சிரணியினர் மூலம் நிறைவேற்றியதால் இதில் அரசுக்கு 3,40,000 ரூபாய் லாபம். ஆகவே, இந்தச் சிரணி எவ்வளவு பயனுள்ளதாக இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். நம்மைப்போல மற்றவர்களும் இந்தச் சிரணியின் மூலம் வேலைகளைச் செய்ய முயற்சி செய்யலாம்.

தஞ்சை மாவட்டத்தில், சிரணிக்கு மாவட்டத் தலைவராக நான் இருந்து பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். ஆயிரக் கணக்கில், லட்சக்கணக்கில் ரூபாய் செலவு செய்கின்ற வேலைகளை எல்லாம் கூடச் செய்திருக்கிறோம். அவ்வளவுக்கும் இந்தச் சிரணியின் உழைப்புதான் காரணம். திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் தொகுதியில் கூட 6 மைல் நீளத்திற்கு ரோடு போட்டிருக்கிறோம்; கால்வாய் வெட்டியிருக்கிறோம். அந்த ரோட்டுக்குக் காந்தியடிகள் நினைவு ஆர்ச் போட்டு வைத்திருக்கிறோம். அங்கே சிரணியின் மூலம் வேலைகள் நல்லமுறையில் நடைபெற்றிருக் கின்றன.

கடைசியாக, நம்முடைய கிராம சேவக் பற்றி சொல்லியிருக்கிறார்கள். மற்ற பல்வேறு காரியங்களைப்போல இதிலும் எந்த அளவுக்கு வேலைகளைத் தர முடியுமோ அந்த அளவுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தாராளமாகத் தந்திருக்கிறார்கள்: இந்த வகையிலே தாராளமாக உதவி செய்து, பல்வேறு காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இருந்தாலும் இங்கே பல உறுப்பினர்கள் சொன்னார்கள். இது காந்தியடிகள் திட்டம்; இந்தத் திட்டத்தில் பழைய முறை அப்படியே இருக்கிறது; எந்த முன்னேற்றமும் செய்யப்படவில்லை என்று பல விஷயங்களைச் சொன்னார்கள். உள்ளபடியே சொல்கிறேன். காந்தியடிகள் திட்டத்தை அகில இந்தியாவிலே நாங்கள்தான் நல்ல முறையில் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசிலே இருக்கிற காங்கிரஸ் தொண்டர்களைக் காட்டிலும் நாம் நல்லமுறையில் அவருடைய திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். ஆகையால் உண்மையிலேயே உண்மையான காங்கிரஸ் தொண்டர் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். (திருமதி த. ந. அனந்தநாயகி: அப்படியானால் காங்கிரசில் சேர்ந்துவிடுவது தானே.) காந்தியடிகள் கட்சியில் சேர்ந்து வேஷம் போட நாங்கள் தயாராக இல்லை. உள்ளபடியே உண்மையான காந்தீயத் தத்துவங்களை நாங்கள் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

இந்தச் சபையில் கூட காந்தியடிகள் பற்றிய விமரிசனம் எல்லாம் வந்தது. அப்போது அனந்தநாயகி அம்மையார் இருந்தார்; ஜோதி வெங்கடாசலம் அவர்கள் இருந்தார்கள். நடைபெற்ற விமரிசனங்களைப் பார்த்து நான் ரொம்ப வருத்தப்பட்டேன். காந்தியடிகள் அரிசனங்களுக்காக எவ்வளவோ செய்திருக்கிறார்கள். அரிசன் பத்திரிகை கூட நடத்தினார்கள். ஆனால் இங்கே அவருடைய வருணசிரமங்களைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். அவர்கள் இல்லை என்றால் இந்த நாடு இல்லை; நாமும் இல்லை என்ற அளவுக்குக் காந்தியடிகள் விளங்கினார்கள். எல்லாத் தலைவர்களும் அங்கேயிருந்து வந்தவர்கள்தான். தந்தை பெரியார் கூட அந்தப் பாசறையில் இருந்து வந்தவர்கள்தான். காந்தியடிகள் காலத்தில் அவ்வளவுதான் செய்ய முடிந்தது. ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தார்கள்; நமக்காகப் பட்டினி கிடந்தார்கள். அவரைப்பற்றி இங்கே கிரிட்டிசைஸ் பண்ணினார்கள். அதை நினைத்து நாம் வருத்தப்படுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்? அப்படிப்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1975 ஏப்ரல் 5] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

பட்ட காந்தியடிகளைச் சுட்டுக்கொன்றார்கள். காந்தியடிகள் என்ன பாவம் செய்தார்கள்? யாருக்குத் தீமை செய்தார்கள்? ஒரு பாவமும் செய்யாத அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். காந்தியடிகளின் திட்டங்களை எல்லாம் நம்முடைய கலைஞர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். * நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே பேசுவதற்கு வேண்டுமானால் சரியாக இருக்கலாம். அது அவ்வளவு பொருத்தமாக இல்லை. அதனால் * என்பதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஏதோ சொன்னார் என்பதற்காக அவர்மீது வழக்குப் போட்டார்கள். அப்படியானால் இவருடைய பேச்சுக்கு எவ்வளவு பெரிய வழக்குப் போட வேண்டும்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: காந்தியடிகள் நமக்கெல்லாம் சுதந்திரம் வாங்கித்தந்த பெரிய மகான்; நம்மை எல்லாம இங்கே மந்திரியாக ஆக்கிய பெரிய மகான் காந்தியடிகள் தான். அவரைப் பாராட்டவிட்டாலும் கிரிட்டிசைன் பண்ணுவது நல்லதல்ல.

காந்தியடிகளின் முக்கியக் கொள்கை கிராம மக்களின் அபிவிருத்திதான். திரு. எட்மண்ட் அவர்கள் பேசும்போது 'அண்ணா கிராமராஜியம்' வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். நாம் அண்ணா அவர்களைப் பல பெயர்களால் அழைத்திருக்கிறோம்.

அறிஞர் அண்ணா அவர்களைத் தென்னாட்டு சாக்ரடீஸ் பெர்னாட்ஷா என்றெல்லாம் அழைத்தோம். கடைசியாக—அன்பாக அழைத்தது—மகாத்மா காந்தியோடு இணைத்து—தென்னாட்டுக் காந்தி என்கிற பெயர்தான்.

ஒருசமயம் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் அண்ணா அவர்களோடு ஒரே மேடையில் அண்ணா பக்கத்தில் ½ மணி நேரம் உட்கார்ந்திருந்தபோது—வெளியே வந்து சொன்னார்கள். அண்ணாவின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தபோது, எனக்குக் காந்தியின் பக்கத்தில் உட்கார்ந்திருந்ததைப்போன்ற நினைவுகள் வந்தன' என்றார்கள் அந்த அளவுக்குக் காந்தீயத்தத்துவத்தில் நாங்கள் ஊறி, அதனைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிறையப் பணம் தருகிறார்கள்.

மாவட்ட வளர்ச்சிக் கழகம் பற்றிக் கேட்டார்கள். நமக்கு மத்திய சர்க்காரில் இருந்து கிடைத்து வந்த உதவிகள் வெகுவாகக் குறைந்துவிட்ட காரணத்தினால்—முன்னைப்போலவே பல பணிகள் இன்னும் விரைவாகச் செயல்படுத்த வேண்டிய நிலையும் இருப்பதனால் அந்தந்த மாவட்டங்களில் கார்ப்பரேஷன்கள் என்று ஏற்படுத்தி—தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து கடன் பெற்றுப் பல பணிகளையும் நிறைவேற்றலாம் என்கிற அடிப்படையில் இது அமைக்கப்பட்டது. இதற்குக் கடன் கொடுக்க முன்வருகிற வங்கிகளின் சம்மதத்தையும் பெற்றாக வேண்டும். அந்த அடிப்படையில் இவ்வாண்டு தர்மபுரி மாவட்டத்தை மட்டும் தேர்ந்தெடுக்க சீஃப் செக்ரடரி முடிவு செய்திருக்கிறார்கள். படிப்படியாக இது எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்பாடு செய்யப் படும்.

அடுத்து, கிராம சேவக்குகளுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும், அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்படவேண்டும் என்றெல்லாம் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் நாங்கள் பரிசீலனை செய்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பரிசீலனை செய்து—இன்றைக்கு அதுபற்றி நான் சில அறிவிப்புகளைச் செய்வதற்கும் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள்.

1975-76 ஆம் ஆண்டு முதல் ஊர் நல உதவியாளர்களுக்குப் பயிற்சியின்பொழுது கொடுக்கப்படும் உதவித் தொகை கீழ்க் கண்டவாறு உயர்த்தப்படுகிறது :—

முன்சேவைப் பயிற்சிக்குத் தற்போது கொடுக்கப்படும் ரூ. 40 ரூ. 50 ஆகவும்,

ஓராண்டு தீவிரப் பயிற்சிக்கு தற்பொழுது கொடுக்கப்பட்டு வரும் ரூ. 60, ரூ. 75 ஆகவும்,

ஆணையர்களுக்கு அளிக்கும் பயிற்சிக்குத் தற்பொழுதுள்ள ரூ. 63, ரூ. 110 ஆகவும்,

[திரு. மன்னை ப. நாராயணசாமி]

மாவட்ட அதிகாரிகள், விஸ்தரிப்பு அதிகாரிகள் ஆகியவர்களுக்கு அளிக்கும் பயிற்சிக்குத் தற்பொழுதுள்ள ரூ. 63, ரூ. 110, ஆகவும்,

தச்சு, கருமார் பயிற்சி பெறுபவர்களுக்கு தற்பொழுது கொடுக்கப்படும் ரூ. 45, ரூ. 50 ஆகவும் உயர்த்தப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : எவ்வளவோ தர்மம் பண்ணுகிறீர்கள்—ஒரு சின்ன தர்மம். பஞ்சாயத்துகளில் 'காங்க்' கூலிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி பாதுகாப்பு இல்லை. சம்பள உயர்வு இல்லை. ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் உள்ள காங்க் கூலிகளை ரெகுலரைஸ் செய்ததுபோல அவர்களுக்கும் ஏதாவது செய்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது நெடுஞ்சாலைத் துறையில் உள்ள காங்க் கூலிகளைப் பொறுத்தவரை ஒரு கால வரையறை வைத்து அவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்கி—அரசு ஊழியர்களுக்குத் தரப்படுகிற குடும்பப் பாதுகாப்புத் திட்டம் உள்பட எல்லாச் சலுகைகளையும் தந்திருக்கிறோம். அதுபோல பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள காங்க் கூலிகளுக்கு எவ்வளவு கால வரையறை வைக்கலாம் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : ஆகவே, இது போல இந்த அரசு நல்ல எண்ணத்தோடு சொல்கிற கருத்துக்களை எல்லாம் நல்லமுறையில் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்படி பல சிறப்பான பணிகள் ஆற்றி வருகிற இந்தத் துறைக்காகக் கோரப்பட்டுள்ள ரூ. 20 கோடிக்கு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அவற்றை வாபஸ் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் உள்ளாட்சித் துறைப் பணிகள் சிறப்பாக நடைபெற மிகவும் சிறந்த முறையில் பணியாற்றி வருகிற உள்ளாட்சித்துறை செயலாளருக்கும், மற்ற எல்லோருக்கும் என் நன்றியைச் சொல்லி இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சென்னை மாநகராட்சியின் ஏரியாவை நாம் அதிகப்படுத்தி பல பகுதிகளை இந்த மாநகராட்சியோடு இணைத்து இருக்கிறோமே தவிர இன்னும் இந்தப் பகுதிகளில்

[திருமதி த. ந. அனந்தநாயகி]

எந்தவிதமான வசதிகளும் செய்யப்படவில்லை. 1954-இல் இருந்து 1975 வரை என்றால் பத்து வருஷத்திற்கு முன்னாடி கார்ப்பரேஷனோடு சேர்த்துக்கொள்ளப்பட்ட பகுதிகளில் கூட டிரெய்னேஜ் பிளாக் டாப் ரோடு போன்ற வசதிகள் செய்யப்படவில்லை. பம்பிங் ஸ்டேஷன் ஆரம்பிக்கப்பட்டது என்றார்கள்—இன்னும் செயல்படவில்லை. அவற்றைத் தயவுசெய்து கவனித்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பல காரியங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவை முடிகிற நிலையில் இருக்கின்றன. வெகு சீக்கிரத்தில் முடிந்துவிடும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: என்னுடைய உரையின்போது நகராட்சி மன்றத் தேர்தல், உள்ளாட்சி மன்றத் தேர்தல் எப்போது நடத்த இருக்கிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டேன். அதற்கு எந்த விதத்திலும் பதில் தரவில்லை. நடத்துவார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதற்கான காலம் முடிகிறபோது, முடிவு தெரியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது.

திருவாளர்கள் எம். சுரேந்திரன், கே. எ. வகாப் ஆகியோர்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் கே. பி. கோபால், பெ. சௌந்தரபாண்டியன், சோ. அழகர்சாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக்கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 29,00,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 7—4—1975 காலை 9-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-48 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

162. Notification issued in G.P.O. No. 231, Commercial Taxes and Religious Endowments, dated the 1st March 1975 in regard to an amendment to Revenue Deparrtment Notification S.R.O. to an amendment to Revenue Department Notifiration S.R.O. No. A-2522 of 1960, published at page 609 of Part I of the Tamil Nadu Government Gazette, dated the 13th April 1960, as subsequently amended. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

163. Notification issued in G.O. Ms. No. 36, Prohibition and Excise, dated the 5th February 1975 in regard to certain amend- and Religious Endowments, dated the 1st arch 1975 in regard ments to the Tamil Nadu Spirituous Essences Rules, 1972. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937.]

164. Notification issued in G.O. Ms. No. 35, Prohibition and Excise, dated the 5th February 1975, in regard to an amendment to the Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act Xof 1937.]

165. Notification issued in G.O. Ms. No. 38, Prohibition and Excise, dated the 5th February 1975, in regard to an amendment to the Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

166. Tamil Nadu Government's Review and the Annual Report and Statement of Accounts of the Banana and Fruit Development Corporation Limited for the year ended 31st March 1971. [Laid on the table of the House under section 619-A of the Indian Companies Act, 1956 (Central Act I of 1956).]

B. Reports, Notifications and Other Papers.

@ 149. Policy Note on Community Development and Panchayats Development, 1975–76 (English and Tamil).

@ 150. Financial Supplement to Demand under Community Development, 1975—76 (English and Tamil).

@ Despatched to Members on 3rd April 1975.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

1975 ஏப்ரல் 5]

[20-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

1966-ல் இந்திய அரசால் அமைக்கப்பட்ட மின்சார நிறுவனங்களுக்கான மத்திய ஊதியக்குழு, மின்சாரத்துறைத் தொழிலாளர்களின் ஊதியங்கள் முதலியவற்றை மாற்றியமைப்பது குறித்த தனது பரிவுரைகளை 1969 டிசம்பர் திங்களில் அளித்தது. தமிழ் நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் கேட்டுக்கொண்டதன் பேரில், தமிழ்நாட்டிலுள்ள மின்சார வாரியத் தொழிலாளர்களின் ஊதியங்களை மாற்றியமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் 1970 மார்ச் திங்களில் தொடங்கியது. 1—12—1969-லிருந்து ஊதியங்களை மாற்றியமைப்பது குறித்த ஆணைகள், 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ் ஊதிய வீதங்கள், அகவிலைப்படி அமைப்புமுறை, வீட்டு வாடகைப்படி ஆகியவை குறித்து தொழிலாளர் சங்கங்களுடன் உடன்பாடு ஏற்பட்ட பின்னர், 1970 மே திங்களில் பிறப்பிக்கப்பட்டன. மேற்சொன்ன உடன்பாடு 1—12—1969-லிருந்து 5 ஆண்டுகளுக்குச் செயலில் இருந்துவந்தது. ஊதியக்குழுவின் பரிவுரைகளை இந்திய அரசு 1970 ஜூலைத் திங்களில்தான் ஏற்றுக்கொண்டது. ஆனால், மத்திய ஊதியக்குழுவின் பரிவுரைகளை இந்திய அரசு ஏற்றுக் கொள்வதற்குக் காத்திராமலேயே மாநில அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டது.

2. ஊதியங்கள் மேற்சொன்னவாறு மாற்றியமைக்கப்பட்ட பின்னர், மாநில அரசு மாநில அரசுப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கீழ்க்காணும் சலுகைகளைத் தமது தொழிலாளர்களுக்கும் தமிழ்நாடு மின்சார வாரியம் பரிவுடனும் நல்லெண்ணத்திற்கு அடையாளமாகவும் வழங்கியுள்ளது :—

(1) ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் பணியிலுள்ள தொழிலாளர்களுக்கு ரூ. 2,000 திருமண முன்பணம் அளித்தல்;

(2) அகவிலைப்படியில் பாதியைக் கருத்திற்கொண்டு அரசுப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்படும் வீதங்களுக்குச் சமமாக நகர ஈட்டுப்படி வழங்குதல்;

(3) ரூபாய் 1,000 வரை சம்பளம் பெறும் I-வது II-வது வகுப்பு அதிகாரிகள் உட்பட பணியாளர்களுக்கு அவர்களின் சம்பளத்தில் 12 சதவீதமும், அகவிலைப்படியில் 50 சதவீதமும் சேர்த்து ரூ. 80 என்ற பேரளவு வீதத்திற்குட்பட்டு 1—6—1971-லிருந்து மலைவாழ் இடப்படி;

(13) பண்டகசாலைப் பணியாளர்களுக்குக் கீழ்க்கண்டவாறு சிறப்புப்படி வழங்க அனுமதிக்கப்பட்டது :—

(1) பண்டகசாலைக்காப்பாளர் சிறப்புத் தரம்/ பண்டகசாலைக் காப்பாளர்	ரூ. 75
(2) பண்டகசாலைக் காப்பாளர் தரம்	ரூ. 60
(3) பண்டகசாலைக்காப்பாளர் தரம்	ரூ. 45

(14) 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய பணியாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் சராசரி சம்பளத்தில் 33/80 என்ற வீதத்தில் உயரளவு ஓய்வூதியத் தொகையும், அவர்களின் சராசரி சம்பளத்தில் 16½ பங்கு சிறப்பு-ஓய்வு பணிக்கொடையும் பெறத் தகுதியுடையவர்களாவர் ;

(15) இறப்பு-ஓய்வு பணிக்கொடையின் பேரளவு வரம்பான ரூ. 24,000 என்பது நீக்கப்பட்டுள்ளது ;

(16) பணியாளர்களின் குடும்பத்தினருக்கு வேலைவாய்ப் பளிப்பதற்காக அலுவலக உத்வியாட்கள் சங்கத்தின் Helpers association நெடுநாளையக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளன.

3. தமிழ்நாடு மின் வாரியத் தொழிலாளர்கள் சங்கத்துடன் 1970 மே திங்களில் செய்து கொண்ட உடன்பாட்டையொட்டி, மின் வாரியத் தொழிலாளர்களுக்கு 1—12—1969 முதல் அனுமதிக்கப் பட்ட அகவிலைப்படி வீதங்கள் வருமாறு :—

சம்பள வரையறை. (1)	அகவிலைப்படி (2)
ரூ. 90-க்குக் குறைவாக	ரூ. 85
ரூ. 90-ம் அதற்கு மேற்பட்டு ஆனால் ரூ. 150-க்குக் குறைவாக.	ரூ. 98
ரூ. 150-ம் அதற்கு மேற்பட்டு ஆனால் ரூ. 210-க்குக் குறைவாக.	ரூ. 122
ரூ. 210-ம் அதற்கு மேற்பட்டு ஆனால் ரூ. 400-க்குக் குறைவாக.	ரூ. 146
ரூ. 400-ம் அதற்கு மேற்பட்டு ஆனால் ரூ. 450-க்குக் குறைவாக.	ரூ. 160
ரூ. 450-ம் அதற்கு மேற்பட்டு ஆனால் ரூ. 500-க்கு மேற்படாமல்.	ரூ. 164
ரூ. 500-க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 543-க்கு மேற்படாமல்.	ரூ. 664-க்கு எந்த அளவுக்குத் தொகை குறைகிறதோ அத் தொகை.
ரூ. 544-ம் அதற்கு மேற்பட்டும் ரூ. 750 வரை.	ரூ. 120

மேற்சொன்ன உடன்பாட்டின் அடிப்படையில், கடந்த ஆண்டின் சராசரி எண்ணிக்கையின் அடிப்படையில் கீழே நான்கு முறை மேற்சொன்ன அகவிலைப்படி வீதங்கள் அதிகரிக்கப் பட்டன :—

1. 1—4—1970 முதல்	ரூ. 3·00
2. 1—4—1971 முதல்	ரூ. 6·75
3. 1—4—1972 முதல்	ரூ. 4·50
4. 1—4—1973 முதல் 31—9—1973 வரை.	ரூ. 9·00
மொத்த அதிகரிப்பு ..	ரூ. 26·25

4. முந்தைய காலாண்டிற்கான சராசரி எண்ணிக்கை அதிகரிப்பின் அடிப்படையில், ஒப்பந்தக்கால அளவு முடிவடைவதற்கு 14 மாதங்களுக்கு முன், அதாவது 1—10—1973 முதல் அகவிலைப்படி வீதங்களை காலாண்டு அடிப்படையில் திருத்தியமைக்க வாரியம் ஒப்புக் கொண்டது. 1—10—1973 முதலும் 1—1—1975 அன்றுள்ளபடியும் செயலுக்கு வந்த காலாண்டு அடிப்படையிலான திருத்த அகவிலைப்படி கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

சம்பள வரையறை	1—10—73 முதல் 31—12—73 வரை திருத்திய வீதங்கள்.	1—1—75முதல் 31—3—75 வரை திருத்திய வீதங்கள்
(1)	(2)	(3)
ரூ. 90-க்குக் குறைவாக	141.25	205
ரூ. 90-149	154.25	218
ரூ. 150-209	178.25	242
ரூ. 210-399	202-55	266
ரூ. 400-449	216.225	280
ரூ. 450–500	220.25	284
ரூ. 501.543	720.25க்குக் குறைகிற தொகை.	784க்குக் குறைகிற தொகை.
ரூ. 544 முதல் ரூ. 750 வரை.	176.25	240

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கரலாண்டு அடிப்படையில் மாறுபட்ட அதிகவிலேபபடிக்கு அனுமதி வழங்கியதின் காரணமாக ரூ. 750 வரையில் சம்பளம் பெரும் ஊழியர்கள் அனைவருக்கும் கீழே குறிப்பிட்டுள்ள வகையில் அகவிலேப்பட்டியல் உயாவு அளிக்கப்பட்டுள்ளது.

1—10—73 முதல் 31—12—73 வரை மாதமொன்றுக்கு ரூ.33
1—1—74 முதல் 31—3—74 வரை மாதமொன்றுக்கு ரூ. 9
1—4—74 முதல் 30—6—74 வரை மாதமொன்றுக்கு ரூ. 8.25
1—7—74 முதல் 30—9—74 வரை மாதமொன்றுக்கு ரூ. 18.
1—10—74 முதல் 31—12—74 வரை மாதமொன்றுக்கு ரூ. 21.75
1—1—75 முதல் 31—3—75 வரை மாதமொன்றுக்கு ரூ. 6.75
மொத்த உயர்வு ரூ. 96. 75 ஆகும். இது கணிசமான தொகையாகும்.

5. மின் தொழிலுக்கான ஊதிய விதங்களை நிச்சயிக்க ஊதிய ஆலோசனைக்குழு ஒன்றை இந்திய அரசு 1973, ஆகஸ்ட் திங்களில் அமைத்தது. இக்குழுவில் மின்சக்தி நிறுவனங்களின் பிரதிநிதிகளும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக உள்ளனர். மின் வாரிய ஊழியர்களின் ஊதிய விதங்கள், சொற்ப நன்மைகள், பதவித் தொடர்பான வசதிகள் ஏனைய பணி நிபந்தனைகள் ஆகியவற்றை மாற்றியமைப்பதற்காக தொழிலாளர் சங்கத்திற்கும், மாநில மின்வாரியத்திற்குமிடையே இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கான வழிமுறைகளை வகுக்கவும், அத்தகைய பேச்சு வார்த்தைகள் குறித்து குழுவிற்கு ஆலோசனை நல்கவும் இது ஏற்படுத்தப்பட்டது.

6. ஊதிய விதங்கள், படிகள் ஆகியவற்றைத் திருத்தியமைப்பது குறித்து வாரிய அதிகாரிகள் குழுவொன்று 1—12—1974 முதல் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் பணி அளவு குறித்து இக்குழு ஆய்வு செய்யும், உடன்பாடு ஒன்று காண்பதற்கு, ஏற்பளிக்கப்பட்ட தொழிலாளர் சங்கங்களுடன் தமிழ்நாடு மின்வாரியம் முதலில் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. இதுவரை ஏற்பளிக்கப்பட்ட சங்கங்களுடன் ஆறுமுறை பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளது. ஏற்பளிக்கப்படாத ஏனைய சங்கங்களுடன் வாரியம் மேற்கொண்டும் பேச்சு வார்த்தை நடத்தக் கருதியுள்ளது. மத்திய அரசு அமைத்துள்ள ஆலோசனைக் குழு இது குறித்துப் பரிசீலிப்பதற்காகக் காத்திராமல் இதை விரைவில் முடிவு செய்ய எல்லாவித முயற்சியும் எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
24 OCT 1975
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

TAMIL NADU LEGISLATURE 25 OCT 1975 MADRAS

திங்கட்கிழமை, 1975 ஏப்ரல் 7.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. அப்பு அவர்கள் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீத்தார் நினைவுக் குறிப்பு. 1952 ஆம் ஆண்டிலிருந்து 1956 ஆம் ஆண்டு வரை சேவூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. ஏ. அப்பு அவர்கள் 5—4—1975 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

திருவள்ளுவர் படம்

*561 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் திருவள்ளுவர் படம் கண்டிப்பாக மாட்டப்பட வேண்டுமென்று அரசு சுற்றறிக்கை பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நிதி வசதிக்கேற்ப எல்லா அரசு அலுவலகங்களிலும், திருவள்ளுவர் படங்களை வைக்கலாமென எல்லாத் துறைத் தலைவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, திருவள்ளுவரின் போதனைப்படி அரசாங்க அதிகாரிகள் நடந்து கொள்ளவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா ? அது போக, வருகிற 12 ஆம் தேதி டில்லியில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையில் திருவள்ளுவர் சிலையொன்று திறக்கப் படுவதாக இருக்கிறது. அதற்கு எங்களுக்கெல்லாம் அழைப்பு வந்திருக்கிறது. நாங்களெல்லாம் அதில் கலந்துகொள்ள பெரிதும் விருப்பமுள்ளவர்களாக இருப்பதால் எங்களையெல்லாம் அழைத்துச் செல்வதற்கு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்களெல்லாம் விமானத்தில் வந்தாலும், இரயிலில் வந்தாலும், விமான நிலையத்திலும் இரயில் நிலையத்திலும் மாலையிட்டு உங்களை வரவேற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வழிச்செலவு உங்களுடையது.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, டில்லியில் திறக்கப்படுகிற திருவள்ளுவர் சிலைக்கு தமிழக அரசு பணம் கொடுத்திருக்கிறதா ? அல்லது, பொது மக்கள் மத்தியில் நிதி திரட்டி சிலை உருவாக்கப் படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. இராசாராம் அவர்கள் டில்லியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அங்கே ‘குறள் நெறிக் கழகம்’ என்ற பெயரில் இருக்கிறது என்று கருதுகிறேன்—திருவள்ளுவர் பெயரால் ஒரு கழகம் அங்கே அமைக்கப்பட்டு, அங்குள்ள தமிழர்கள் அதற்கான வசூலில் ஈடுபட்டு, அந்தக் கழகத்தின் சார்பாக அந்தச் சிலை வைக்கப்படுகிறது.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, இந்தியா மதச் சார்பற்ற நாடாக இருப்பதைக் கருதி, பேறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில், அரசு அலுவலகங்களில் இருக்கின்ற கடவுளர் களுடைய படங்களை அகற்றவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.